Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி நூல்கள் விவரக்கோவை

சீனி.விசுவநாதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Samaj Foundation Chenn

பாரதி ஆய்வுகள்

சில சிக்கல்கள்

சீனி.விசுவநாத

ஸ்ரீ புவனேஸ்வரி

Gurukul Kangri Co

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Presented Free of Cost

With best compliments from

Dr. Nalli Kuppuswami Chetti

PARTNER

Nalli Chinnasami Chetty

SILK CLOTH & PIECE GOODS MERCHANTS

9, NAGESWARA RAO ROAD

Opposite Panagal Park

T. NAGAR, MADRAS-600 017

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

100834

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகாகவி பாரதியின்

பிரார்த்தனை

கிழவனுடைய அறிவுமுதிர்ச்சியும்

நடுவயதிற்குள்ள மனத்திடனும்

இளைஞனுடைய உத்ஸாகமும்

குழந்தையின் ஹிருதயமும்

தேவர்களே

எனக்கு எப்போதும் நிலைத்திருக்கும்படி

அருள் செய்க.

Presented Free of Cost

With best compliments from

Dr. Nalli Kuppuswami Chetti

PARTNER

Nalli Chinnasami Chetty

SILK CLOTH & PIECE GOODS MERCHANTS

9, NAGESWARA RAO ROAD

Opposite Panagal Park

T. NAGAR, MADRAS-600 017

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

DONATION

பாரதி நூல்கள்

வைரக்கோவை

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
100834

சீனி. விசுவநாதன்

விற்பனை உரிமை :

பாலாஜி புத்தக நிலையம்,

49, "E" பிளாக், அண்ணாநகர்,

சென்னை-600 102

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

First Edition : 11th December 1987

© SEENI. VISWANATHAN
2, Model House Lane,
C. I. T. Nagar
Madras-600 035.

Name of the Book	:	BHARATI NOOLKAL VIVARAK KOVAI (BHARATIANA — A DESCRIPTIVE BIBLIOGRAPHY)
Author	:	SEENI. VISWANATHAN
No. of Pages	:	VIII + 392 = 400
Classification	:	BIBLIOGRAPHY WORKS BY BHARATI AND ON BHARATI
Name of the Press	:	MARUTHY PRESS, MADRAS-600 014
Price	:	Rs. 32-00

Published with financial assistance from the Government of India, Department of Education, Vide Sanction No. 4-25/86 L.G. Cell dt 19-1-87 and Copyright Vests with the author.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்னுரை

தமிழரின் உயிர்நிகர் தமிழ்நிலை தாழ்ந்ததால்
இமைதிற வாமல் இருந்த நிலையில்
தமிழகம் தமிழுக்குத் தகும்உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான்.

—பாவேந்தர் பாரதிதாசன்

உலக இலக்கிய அரங்கில் நம் செந்தமிழ் மொழிக்கென்று தனியே இடம் என்றுமே உண்டு.

சமீப காலமாக, உலக அறிஞர் பெருமக்களிடையே தமிழ் இலக்கியம் பற்றி அறிய ஆர்வம் பெரிதும் எழுந்துள்ளது. மற்றும், இலக்கிய — இலக்கணங்களை ஆராயும் எண்ணமும் வளர்ந்துள்ளது.

இந்த ஆர்வத்திற்கும் ஆய்வுக்கும் தமிழ் இலக்கிய — இலக்கண கர்த்தாக்களின் படைப்புகள் பற்றிய ஒழுங்குபடுத்தப்பட்ட விவரத் தொகுதிகளும் விவர நூல் அட்டவணைகளும் மிகவும் இன்றியமையாதனவாகும்.

இந்த உண்மையை மனங்கொண்டு நவயுகத்தைத் தமிழ் இலக்கியத்தில் புகுத்திய பெருங் கவிஞரான பாரதியைப் பற்றி 'ஆதார உசாத் துணை நூல்' ஒன்று வெளியாக்கவேண்டும் என்னும் ஆசையால், தமிழ்கூறு நல்லுலகம் அவருடைய நூற்றாண்டு விழாவை எதிர்நோக்கிய வேளையில், 1981 ஏப்ரல் மாதத்தில் நான் 'மகா கவி பாரதி நூற் பெயர்க்கோவை' என்ற தலைப்பில் வெளியிட்டேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூற்பெயர்க்கோவையுள் 1908 ஜனவரி முதல் 1980 டிசம்பர் முடிய உள்ள காலப் பகுதிகளில் பிரசுரமான நூல்களுக்கான விவரங்களைத் தொகுத்தளித்தேன். நூல்களுக்கான பட்டியலாக மட்டுமே கோவை அமைக்கப் பெறவில்லை. பல காலங்களில் நான் அரிதின் முயன்று சேகரித்த தகவல்களையும், பற்பல நூல்களினின்றும் திரட்டிய செய்திகளையும் ஒருசேர இணைத்து, ஆய்ந்து அத் தொகுதியை உருவாக்கினேன்.

ஆம்; பாரதி பற்றிய ஆய்வுகள் எப்படியெப்படியெல்லாம் நடைபெற்று வந்துள்ளன என்பதை ஓரளவிற்கேனும் இனங்காட்ட நூற்பெயர்க்கோவை வழிவகுத்துக் கொடுத்தது.

பாரதி பெயரால் அப்படியொரு நூற்பெயர்க்கோவை வெளிப்பட்டு, சுமார் ஆறாண்டுகள் உருண்டோடி விட்டன. எவரேனும், அடுத்தடுத்த ஆண்டுகளுக்கான நூல் தொகுதியை வெளியிட முனைவர் என்றே நான் கருதினேன். ஆனால், அவ்வப்போது ஒருசிலர் பாரதி நூல் வரிசைகளுக்கான பட்டியல்களை மட்டுமே தொகுத்துத் தந்தனர்.

என்றாலும், அப்படி வெளிப்பட்ட பட்டியல்களும் முழுமை பெற்றனவாக அமையவில்லை நூலின் தலைப்பெயரும், ஆசிரியர் பெயரும் அப்பட்டியல்களில் தரப்பெற்றன. சொல்லப்போனால், நூல்களாக வெளிவராதனகூட பட்டியல்களில் இடம்பெற்றன; தனித்தனி கட்டுரைகளாக வெளிவந்தனவும் நூல் பெயர்களாகவே தரப்பட்டன. ஆக, நூல் வடிவம் பெறாதனவும், கட்டுரைகளாக அமைந்தனவும் (1981—1982) பாரதி நூற்றாண்டில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளியான நூல்கள் என்கிற முத்திரையோடு பட்டியல் போட்டுத் தரப்பட்டன.

நூல்களைத் தேடிச் சேகரித்து விவரம் தருவது என்பது சாதாரண காரியமில்லை. தனியொருவரே அறிந்து விவரிப்பதும் கடினமான செயலே. என்றாலும் தனித்த அக்கறையைச் செலுத்தினால் ஆகாததும் உளதோ?

எனவே, நான் வழக்கம்போல், திருத்தமான விவரப் பட்டியலைக் கூடிய வரையில் சரியான முறையில் தரவேண்டும் என்று கருதி, நூல்களைத் தேடி, சுற்றுப்பயணம் மேற்கொண்டேன். ஒரே சமயத்தில் ஒரே இடத்தில் நூல்கள் கிடைக்க வழி இல்லாத காரணத்தால் பல சமயங்களில் பல ஊர் களில் சுற்றி யலைந்து கிடைத்த செய்திகளையும், விவரக் குறிப்புகளையும் கொண்டு இந்த விவரக் கோவை நூலைத் தொகுத்துள்ளேன்.

பாரதி பற்றிய நூல்கள் பெரும்பாலும் தமிழ் நாட்டிலேயே வெளிப்பட்டவையா யிருப்பினும், சிறுபான்மை இந்தியாவின் ஏனைய மாநிலங் களிலும், இலங்கை, ஜப்பான் முதலிய நாடுகளிலும் வெளிப்பட்டுள்ளன. இவை பற்றிய விவரக் குறிப்புகளும் இந்த நூலில் தரப்பெற்றுள்ளன. (மலேஷியாவில் இரு நூல்கள் பிரசுரமாகி யுள்ளன என்பதும் இங்குக் கருதத்தக்கது. ஆனால், சரியான தகவல் கிடைக்கப் பெறாமை காரணமாக, அவை பற்றிய குறிப்புகள் இங்கே தரப் பெறவில்லை. மற்றும் தமிழகத்திலும், பிற மாநிலங்களிலும் வெளிப்பட்டுள்ள இரண்டொரு நூல்களுக்கான

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விவரமும் நான் தொடர்புகொண்ட அன்பர்களிட மிருந்து இந்த நூல் அச்சாகும் வரை கிடைக்க வில்லை. அதனால் அந் நூல்கள் பற்றிய குறிப்பு களும் இதில் இடம்பெறவில்லை.)

இத் தொகுப்பில் 275 நூல்களுக்கான விவரக் குறிப்புகள் காணப்படுகின்றன. 151 பதிப்பாளர்கள் பாரதிக்குத் தம் புகழ் அஞ்சலியைச் செலுத்தி யுள்ளனர். 188 எழுத்தாளப் பெருமக்கள் தாங்கள் பாரதிக் கவிஞரிடம் கொண்டுள்ள பக்தியைப் புலப்படுத்தி யுள்ளனர். ஓரிரு எழுத்தாளர்கள் மட்டும் இதற்கு விதி விலக்கு.

தரும் தகவல்களில் தவறு நேர்ந்துவிடக் கூடாது என்பதில் எவ்வளவு அக்கறையை நான் காட்டினாலும், என்னையும் மீறி ஏ்தனும் பிழை நேர்ந்திருந்தால், அதைப் பொறுத்தாற்றிக் கொள்ளும்படி உங்களிடம் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, உங்களிடம் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்த வேண்டியதும் என் கடமையா கின்றது.

இத் தொகுதி பெயரளவில் நூல் விவரக் கோவை என்று இருப்பினும், அப்படி நூல்களுக்கான பட்டியல் தருவது என் நோக்கமன்று. அதனால், முன்பகுதிகளில் பாரதி நூல்கள் பதிப்புப் பணிகள் பற்றியும், பாரதியின் புகழ் பரப்ப — நூல்கள் பரவ எவ்வளவு பேர் பாடுபட்டார்கள், எவ்வாறெல்லாம் பாடுபட்டார்கள் என்ற விவரங்களையும் சற்று விரிவாகவே தொகுத்துக் கொடுத்துள்ளேன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பழைய இதழ்களில் பாரதி பற்றிப் பிரசுரமான செய்திகளின் தன்மையை யறிந்து, பொருத்தம் நோக்கி, உரிய இடங்களில் அவற்றைச் சேர்த்துள்ளேன்.

ஆக, இத் தொகுப்பு பாரதியை ஆழமாக ஆராய்ச்சி புரிவோர்க்குப் பெருந்துணையாகவும், அருந்துணையாகவும் அமையும் என்பது என் நம்பிக்கை.

பாரதிக்குப் புகழ் சேர்க்கும் — பாரதியைப் புரிந்துகொள்ள உதவும் — இந் நூல் பிரசுரமாக எனக்கு உதவிய அத்துணைப் பேர்க்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகள் உரியன.

குறிப்பாக, இந்த நூல் மத்திய அரசின் நிதி உதவியுடன் பிரசுரிக்கப்படுகின்றது என்பதை நான் நன்றியுடன் நினைவுகூர்கிறேன். கைப்பிரதியைப் பரிசீலனை செய்து, உரிய காலத்தில் நூல் வெளிப்பட துணைநின்ற மத்திய அரசின் கல்வித் துறையினருக்கு என் நன்றி உரியது.

வழக்கம்போலவே, இந்த நூலும் பாரதீய அன்பர்களின் வரவேற்பைப் பெறும் என்றே நம்புகிறேன். ஓம். வந்தே மாதரம்.

வாழிய செந்தமிழ் !
வாழ்க நற்றமிழர் !
வாழிய பாரத மணித்திருநாடு !

சீனி. விசுவநாதன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூலின் உள்ளே....

கவியரசர் பாரதி	1
பாரதியின் நூல் வெளியீட்டுப் பணிகள்	32
பாரதி காலத்துக்குப் பின் அவர் மனைவியின் முயற்சிகள்	50
பாரதி பிரசுராலயத் தோற்றமும் அதன் பதிப்புப் பணிகளும்	65
தமிழக அரசின் பதிப்புப் பணிகள்	72
பாரதி நூல்களுக்குத் தடை	75
நூற்றாண்டு கண்ட கவியரசர்	107
மகாகவி பாரதி நூல்கள்—வெளியீட்டு வரிசை (1908 ஜனவரி — 1980 டிசம்பர்)	112
பாரதி நூல்கள் வெளியீட்டு வரிசை (1981 மார்ச் — 1985 டிசம்பர்)	152
நூல் விவரக் குறிப்புகள்	183
நூல்கள் வெளியீட்டு அட்டவணை	293
பதிப்பாளர் வெளியீட்டு வரிசைப் பட்டியல்	296
பதிப்பாளர் வெளியிட்ட நூல்கள் விவரம்	303
ஆசிரியர் அகர வரிசையும் நூல்களின் விவரமும்	321
நூல்களின் பாகுபாடு — ஒரு கண்ணோட்டம்	346
ஆசிரியர் நூல்கள் வரிசைப் பட்டியல்	372

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தமிழக அரசின் ஆணைக்கிணங்க
இந்த நூலில் சீர்திருத்த எழுத்துகள்
பயன்படுத்தப்பட்டுள்ளன.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவியரசர் பாரதி

(வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்)

1882ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதியன்று திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்த எட்டயபுரம் எனும் சிற்றூரிலே சின்னச்சாமி ஐயருக்கும், இலட்சுமி அம்மாளுக்கும் மூத்த மகனாய், பிற்காலத்தில் கவியரசர் சுப்பிரமணிய பாரதி என்று போற்றிப் புகழப்பெற்ற பெருமை கொண்ட சுப்பிரமணியன் பிறந்தார்.

தற்காலத்தே பாரதி என்றே அனைவராலும் குறிக்கப்படுகின்ற அருட் கவியின் இயற்பெயர் **சுப்பிரமணியன்** என்றாலும், உற்றாரும் ஊராரும் செல்லமாகச் **சுப்பையா** என்று அழைத்தனர்.

சுப்பிரமணியன் என்கிற சுப்பையாவுக்கு ஐந்து வயதாகும்போது, அதாவது, 1887ஆம் ஆண்டு அவரது தாயார் இறந்துவிட்டார். தாயற்ற சேயான சுப்பையா சிறிதுகாலம் தாய்வழிப் பாட்டனார் வீட்டில் வளர்க்கப் பெற்றார்.

குடும்பப் பொறுப்பின் காரணமாகச் சின்னச்சாமி ஐயர் 1889இல் இரண்டாந்தாரமாக வள்ளியம்மாளை மணந்துகொண்டார். அதேசமயத்தில், தம் புதல்வரான சுப்பிரமணியனுக்கும் குல மரபுப்படி பூணூல் (உபநயனம்) அணிவிக்கும் சடங்கையும் சிறப்புற நடத்தி வைத்தார். மாற்றாந் தாயான வள்ளியம்மாள் சுப்பிரமணியனைப் பரிவுடன் வளர்த்த வளர்ப்புத் தாயாராவார்.

உரிய பருவத்தில் சுப்பிரமணியனைப் பள்ளிக்கு அனுப்பினார், சின்னச்சாமி ஐயர். ஆரம்பக் கல்வி

புர. நா—1

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திண்ணைப் பள்ளிக்கூடத்தில்தான். ஆரம்பக் கல்வி கற்கும் காலத்திலேயே சிறுவரான சுப்பிரமணியன் தம் தந்தையுடன் எட்டயபுர சமஸ்தானத்திற்குச் செல்வார்; அங்கு நடைபெறும் இலக்கிய விவாதங்களைக் கூர்ந்து கவனிப்பார். தந்தையாரும் வித்துவான்; சென்று பழகிய இடமோ தமிழ்ப் புலமையில் சான்று விளங்கும் புலவர்கள் அவை. இதனால், இயற்கை யிலேயே கவி இயற்றும் ஆற்றல் சிறுவன் சுப்பிரமணிய னுக்கு வாய்த்துவிட்டது. தம் ஏழாம் வயதளவிலேயே கவிதைகளைப் புனைய ஆரம்பித்துவிட்டார், இளங் கவிஞர் சுப்பிரமணியன். அவ்வப்போது, சமஸ்தான தமிழ்ப் புலவர்கள் கொடுக்கும் ஈற்றடிகளைக் கொண்டே அற்புதமான பாடல்களைப் பாடி, அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

மகனின் திறமையில் உள்ளூர மகிழ்ந்தாலும் தந்தை, பையனின் படிப்பு விஷயத்தில் கண்டிப்புடனே நடந்துகொண்டார். எனவே, தந்தையின் கண்டிப்புக்கு அஞ்சிய சுப்பிரமணியன் பள்ளிப் பருவத்தில் புத்தகமும் கையுமாக இருக்க வேண்டியதாயிற்று. அதனால், துள்ளித் திரிய வேண்டிய சிறுவயதில், தன் வயதொத்த சிறுவர்கள் ஓடியாடித் திரிவதையும், குளம் - குட்டை களில் நீந்தி விளையாடுவதையும், மரங்களில் ஏறி இறங்கி மனமகிழ்வுடன் நாட்களைக் கழிப்பதையும் கண்ட சுப்பிரமணியன் மனம் வருந்தியதுண்டு; பள்ளிப் புத்தகங்கள் தவிர, வேறு தோழமையின்றித் தவித்ததும் உண்டு.

சுப்பிரமணியன் தம் பத்து வயதளவும் தோழமை யின்றித் தனிமையிலே புத்தகங்களையே துணையாகக் கொண்டிருந்தார். என்றாலும் சிறுவன் சுப்பிர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மணியனுக்குப் பள்ளிப் படிப்பிலே அவ்வளவாகப் பிடிப்பு ஏற்படவில்லை. சொல்லப்போனால், சின்னச்சாமி ஐயர் எதிர்பார்த்தது போன்று, படிப்பில் அவ்வளவு அக்கறை காட்டவில்லை. பாக்கள் புனைவதிலே மிக்க ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். ஆம்; பள்ளிப் படிப்பைக் காட்டிலும் பாக்கள் புனைவதிலேயே அக்கறை காட்டினார்.

பிள்ளைக் கனியமுதம் சுப்பிரமணியன் புகழ்சேர் வாணிபதம் போற்றுவித்து, தம் உள்ளத்தே தீங்கவிதை கோடி மேவிட அன்னை பராசக்தியிடம் வரங்கேட்டுக் கொண்டிருக்கும் வேளையிலே—

தந்தை சின்னச்சாமி ஐயரோ பெரியதொரு தொழில் முயற்சியில் ஈடுபட்டிருந்தார். மேலை நாடுகளின் முன்னேற்றத்திற்குக் காரணம், அவற்றின் தொழில் நுட்ப முன்னேற்றங்களே என்பதை மிகத் தெளிவாக உணர்ந்திருந்த சின்னச்சாமி ஐயர், தாம் வாழும் பகுதி யையும் தொழில் துறையில் முன்னேற்றமடையச் செய்ய விரும்பினார். அதன் காரணமாக, நம்மவர்களின் முன்னேற்றத்தைக் கருதியும், சுதேசத் தொழில் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டும் 1892ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 6ஆம் நாளன்று எட்டயபுரத்தை அடுத்துள்ள பிதப்புரம் (பித்தராஜபுரம்) என்னுமிடத் தில் பஞ்சு அறைவை ஆலை யொன்றை நிறுவினார்.

பங்குகள் சேர்த்தும், பெருமளவில் கடன் வாங்கியும் சுதேசத் தொழில் முயற்சியில் ஈடுபட்டார் ஐயர், தொழிற்சாலைக்கான இடத்தைக் கையகப்படுத்தி. கட்டடமும் கட்டி முடிக்கப்பட்டது. மற்றும், தொழிற் சாலைக்கான இயந்திரங்களும் வரவழைக்கப்பட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிறுவன் சுப்பிரமணியன் பதினோராவது வயதில் காலடி எடுத்து வைத்தான். அப்போது - 1893ஆம் ஆண்டில் - குருகுஹதாஸப் பிள்ளை அவர்களால் விருதை சிவஞான யோகியாருக்குச் சுப்பிரமணியன் அறிமுகப் படுத்தப்பட்டான். புலவர்கள் தரும் அடிகளைக் கொண்டே மிக விரைவில் பொருத்தமான பாடல்களை இயற்றி, அவையோரைக் களிப்புறச் செய்த திறனைக் கண்டுயோகியார் மகிழ்ந்தார். சிறுவன் சுப்பிரமணியனின் கவிப்பெருக்கைப் பெரிதும் மகிழ்ந்து பாராட்டி அப் பெரியார் "பாரதி" என்ற பட்டத்தை வழங்கினார். யோகியார் சுவாமிகள் அளித்த பட்டமே சுப்பிரமணியன் பெயருக்கு அன்றுமுதல் மகுடமாக நிலைத்துவிட்டது. அற்றைநாள் தொட்டுச் சுப்பிரமணியனைப் பாரதி என்றே யாவரும் அழைக்கலாயினர்.

தம் மகனுக்குப் "பாரதி" என்ற பட்டம் சூட்டப் பெற்றது குறித்துச் சின்னச்சாமி ஐயர் மகிழ்வுற்றாலும், தம் மகன் படித்துப் பட்டம் பெற்று, ஆங்கிலம், கணிதம் போன்ற துறைகளில் பயிற்சி யடைந்து, உயர் பதவி வகிக்க வேண்டுமென்றே பெரிதும் விரும்பினார்.

1893, 1894ஆம் வருடங்களில்கூடச் சின்னச்சாமி ஐயர் தொடங்கிய தொழிற்சாலை தொடர்ந்து இயங்கியது என்றாலும், இலாபம் ஏதும் கிட்டாத நிலை. இதனிடையில், வாங்கிய கடனுக்கு வட்டியும் செலுத்த வேண்டியிருந்தது. நிருவாகச் செலவுகள் வேறு. இடை யிடையே இயந்திரக் கோளாறுகள்; இயந்திரத்தின் சில பகுதிகள் பழுதடைந்துவிட்டன; இவைபோன்ற இன்ன பிற காரணங்களால் தொழிற்சாலையில் உற்பத்தித் திறன் குறைந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்தனைக்கும் மேலாக, சுதேச முயற்சிகளை நசுக்கும் கொள்கையைப் பிரிட்டிஷ் அரசு கைக்கொண்டிருந்தது. தவிர, இம்மாதிரியான முயற்சிகளுக்கு அக்காலத்தில் பொதுமக்கள் ஆதரவு வெளிப்படையாக இருக்கவில்லை.

தாங்க முடியாத கடன் சுமை, பொருள் இழப்பு, இயற்கைச் சூழலின் எதிர்ப்பு, அரசின் போக்கு, போதிய அளவு பொதுமக்களின் ஆதரவின்மை - இன்னபிற காரணங்களால் 1895இல் தொழிற்சாலையை மூட வேண்டிய நிலைக்கு உள்ளானார், சின்னச்சாமி ஐயர்.

அதோடு மட்டுமில்லை - தொழிலில் இழந்த பொருள், தொழில் முயற்சியில் ஏமாற்றம் ஆகியவற்றால் மனம் நொந்த சின்னச்சாமி ஐயர் நோய்வாய்ப்பட்டார்; தீய வறுமைக்கும் உள்ளானார். ஆம்; பற்பல வாணிகம் ஆற்றிப் பெருவாழ்வு வாழ்ந்த சின்னச்சாமி ஐயர் ஊணர்கள் செய்த சதியால் பெருஞ் செல்வத்தையும் இழந்து துயர்க்கடலில் வீழ்ந்தார்.

தம்முடைய வறிய நிலையைப் பற்றி எண்ணி ஓர் புறம் கலங்கினாலும், எந்தக் காரணத்தைக் கொண்டும் பாரதியின் படிப்பு மட்டும் தடைப்பட்டுவிடக் கூடாது என்று கருதினார்; எப்படியோ சமாளித்து, பாரதிக்கு உயர் கல்வியாம் ஆங்கிலக் கல்வி கற்பிக்க வேண்டி 1895ஆம் ஆண்டில் தற்காலத்தில் திருநெல்வேலி இந்துக் கல்லூரி என்று அழைக்கப்படும் உயர்நிலைப் பள்ளியில் அவரைச் சேர்த்தார். 1897ஆம் ஆண்டு முடிய அப்போதைய கல்வி வகுப்பு முறையையொட்டி, மூன்று முதல் ஐந்து பாரம் (Form) வரையும் பாரதி திருநெல்வேலியில் படித்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி நன்றாகப் படித்து, மேதையாகி, கை நிறையச் சம்பாதிக்க வேண்டும் என்றே சின்னச்சாமி ஐயர் எதிர்பார்த்தார். ஆங்கிலக் கல்வியின் பேரில் தீராத மோகம் கொண்டிருந்த சின்னச்சாமி ஐயரின் எதிர் பார்ப்புக்கு மாறாக, பாரதி தமிழ் இலக்கியச் செல்வங் களில் ஈடுபாடு கொண்டிருந்தார். என்றாலும், சமூக அமைப்பைக் கருத்தில் கொண்டு, வேண்டா வெறுப்பாகத் தம் கல்வியைப் பாரதி நெல்லையில் தொடரவே செய்தார். தவிர, தம் தந்தையின் பொருளாதார நிலையை அந்த வயதிலேயே அவர் அறிந்திருந்தார்.

பாரதியின் படிப்புச் செலவுக்கு அவ்வப்போது தேவைப்படும் பணத்தை எவ்வளவோ இன்னல்களுக் கிடையேயும் அனுப்பிக் கொண்டிருந்தார், சின்னச் சாமி ஐயர். எனினும், இடைக்கிடையே பணம் அனுப்பிக் கொடுப்பதில் தாமதமும் ஏற்பட்டது. ஒரு கட்டத்தில், பணம் அனுப்பிக் கொடுக்க முடியாத சூழ்நிலை சின்னச்சாமி ஐயருக்கு நேரிட்டது போலும்! இந்த இக்கட்டான நிலையில், தம் பள்ளிப் படிப்பைத் தொடருவதற்காக எட்டயபுரம் மன்னரிடம் பண உதவி கோரினார், பாரதி. 'இளசைச் சுப்பிரமணியன்' என்று கைச்சான்றிட்டு, 24.1.1897இல் பாடல் வடிவில் எழுதி, தம் நிலையைப் புலப்படுத்தினார் பாரதி.

பதினான்கு வயது நிறைந்த பாலகன் பாரதி வேண்டிக் கொண்டவாறு, எட்டயபுர மன்னர் பொருள் உதவி செய்தாரா எனத் தெரியவில்லை. ஆனால், பாரதியின் படிப்பு மட்டும் நெல்லையில் தொடரவே செய்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடும்பத்தில் எத்தனையோ தொல்லைகள் - இடர்ப்பாடுகள் இருந்த நிலையிலும், சின்னச்சாமி ஐயர் தம் மகனான பாரதிக்குத் திருமணம் செய்து வைக்கும் முயற்சியில் ஈடுபட்டார். பாரதி ஐந்தாம் பாரம் (Form) படித்துக் கொண்டிருக்கும்போதே, அவருக்குத் திருமணம் நடைபெறுகிறது. அச் சமயம், பாரதிக்கு வயது சுமார் பதினாலரை. பாரதிக்குப் பார்த்த பெண்ணின் வயது ஏழு. பெயர் **செல்லம்மா;** செல்லப்பா ஐயரின் மூன்றாம் மகளாவார். இக் குழந்தைத் திருமணம் கடையத்தில் 1897ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27ஆம் தேதியன்று வெகு சிறப்பாக நடைபெற்றது.

பாரதி திருமணம் செய்து கொண்டதும், படிப்பைக் கருதி நெல்லை திரும்பிவிடுகிறார். அப்போது அங்கு நிகழ்ந்த இலக்கிய விவாதங்கள் பலவற்றில் கலந்து கொண்டார்.

பள்ளிநேரம் தவிர, மற்றச் சமயங்களிலும், விடுமுறை நாட்களிலும் இந்துக் கல்லூரிப் பாடசாலைத் தமிழாசிரியர்களிடமும், வித்துவான்களிடமும் பாரதி செய்த விவாதங்கள் பலவாகும்.

தமிழ்ப் பெரும் புலவர் சோணாசலம் பிள்ளையின் குமாரர் **காந்திமதிநாத பிள்ளை** என்பவர் அப்போது யப். ஏ. (F.A.) பிரதம (சீனியர்) வகுப்பில் படித்துக் கொண்டிருந்தார். இவர் முருகதாச சுவாமிகளிடம் மிக நெருக்கமாகப் பழகியவர்; தமிழில் தக்க தேர்ச்சியும் பெற்றவர். அதன் காரணமாகப் பாரதியும், இளமைத் தோழரான சோமசுந்தர பாரதியுடன் அடிக்கடி, காந்திமதிநாத பிள்ளை யவர்கள் இல்லத்திற்குச் செல்வதுண்டு. அம்மாதிரி சென்றபோது, ஒருநாள், பலர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூடியிருந்தபோது, வயதில் இளையவரான இளைஞர் பாரதியை மடக்க நினைத்துக் காந்திமதிநாத பிள்ளை யவர்கள் ''பாரதி சின்னப் பயல்'' என்ற அடியைக் கொடுத்து, அதை வைத்து வெண்பா ஒன்றைப் பாடும்படி சொன்னார்.

பாரதியும் யாவரும் வியக்க வெண்பாவைப் பாடினார். இப்படிப் பல்லோராலும் மெச்சும்படி பள்ளி நாட்களிலேயே பாரதி நடந்துகொண்டார்.

பாரதியின் பள்ளி வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமைந்திருந்த நேரத்தில் அதாவது 1898 ஜூலை மாதத்தில், அவருடைய தந்தை சின்னச்சாமி ஐயர் மரணமடைந்தார். அதனால், பாரதியின் பள்ளிப் படிப்பு பாதியிலேயே நின்று போகிறது. தந்தை இறக்கும்போது பாரதிக்கு வயது 15½.

'இனி என்ன செய்வது? எங்கே யிருப்பது?' என்ற கேள்விகள் பாரதியின் வாழ்க்கையில் பிறந்தன. எந்த வழியும் புலப்படாதிருந்த நிலையில், காசியில் குடியேறி யிருந்த அவருடைய அத்தை குப்பம்மாளின் அழைப்பின் பேரில், பாரதி காசிக்குச் சென்றார். பாரதி காசிக்குச் செல்லுமுன் தம் அருமை மனைவி செல்லம்மாளைக் கடையத்தில் வசிக்க ஏற்பாடு செய்துவிட்டே சென்றார்.

காசியில் பாரதி 'ஜெய் நாராயண் ஸ்கூல்' என்ற பள்ளியில் சேர்ந்து படித்தார். அங்கு, தமிழ்ப் பாடம் படிக்க வசதி இல்லாத காரணத்தால், பாரதி, தம் சுய முயற்சியால் தமிழ்ப் பயிற்சியை வளர்த்துக் கொண்டார். ஹிந்தியும், சமஸ்கிருதமும் படித்து, அம் மொழிகளிலே போதிய தேர்ச்சியும் பெற்றார். அடுத்து 1899ஆம் ஆண்டில் அலகாபாத் பல்கலைக் கழகத்துடன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இணைந்த மத்திய இந்துக் கல்லூரியின் நுழைவுத் தேர்வை (Allahabad University Entrance Examination) எழுதி, முதல் வகுப்பில் தேறினார். இதுதான் பாரதியின் பள்ளிப் படிப்பிலேயே மிக உயர்ந்த பட்ச படிப்பு எனலாம். இதன்பின் பாரதி எவ்விதப் படிப்பும் படிக்கவில்லை.

பாரதி காசியில் இருந்த காலத்தில் தாம் வைத்துக் கொண்டிருந்த 'குடுமி'யை எடுத்துவிட்டு, வங்காளி போல் 'கிராப்' செய்து கொண்டார்; வடக்கத்திய பாணியில் வால்விட்ட பெரிய தலைப்பாகை கட்டிக் கொண்டார்; மீசை வளர்த்துக் கொண்டார்; கச்சம் வைத்து வேஷ்டி கட்டும் வழக்கத்தையும் கைக் கொண்டார். பொதுவாக, காசியின் வாழ்க்கையில் பாரதியின் நடையுடை பாவனைகள் முற்றிலுமாக மாறி விட்டன.

காசியின் சூழ்நிலை பாரதிக்குப் பிடித்திருந்தும், அவர் தமிழ்நாடு திரும்ப வேண்டியதாயிற்று.

இங்கிலாந்தில் விக்டோரியா மகாராணி இறந்தவுடன், அவரது மகன் ஏழாவது எட்வர்டு முடி சூட்டப் பெற்றார். இந்த முடிசூட்டு விழா நிகழ்ச்சியை ஒட்டிக் கர்சன் பிரபு புது தில்லியில் 1903 ஜனவரியில் தர்பார் ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார். இந்தத் தர்பாருக்குச் சுதேச மன்னர்களும், ஜமீந்தார்களும் சென்றிருந்தனர். அவர்களில் எட்டயபுரம் ஜமீந்தாரும் ஒருவர். அவர் தில்லி தர்பாரிலிருந்து எட்டயபுரம் திரும்பும் வழியில், காசியில் தங்கினார். அங்கு அவர் பாரதியைச் சந்தித்தார்; அப்போது, பாரதியை ஊர் திரும்பும்படியும், சமஸ்தானத்தில் வேலை தருவதாகவும் தெரிவித்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எட்டயபுர ஜமீந்தார் அழைப்புக் கிணங்க எட்டய புரம் திரும்பிய பாரதி, 1903 ஆம் ஆண்டின் ஆரம்பத்தி லிருந்து 1904ஆம் ஆண்டு ஜூலை வரை அங்கு வேலை பார்த்தார். எட்டயபுர ஜமீந்தாரிடத்தில் சுமார் 1½ ஆண்டுகள் வேலை பார்த்த பாரதிக்கு, அந்த அரண்மனை வாழ்க்கை கசந்தது; தாம் பார்த்துவந்த வேலையிலும் அலுப்புத் தட்டிவிட்டது. இச் சமயத்தில், பணக்காரர்களின் கொடுமைகளைக் கண்டித்து எழுதிய கட்டுரை காரணமாகப் பாரதிக்கு, ஜமீந்தார் தாம் செய்துவந்த உதவிகளை நிறுத்திக்கொண்டார். பாரதியும் நிலைமையைப் புரிந்துகொண்டு எட்டய புரத்தை விட்டு வெளியேறினார்.

இதனிடையில், தாம் எட்டயபுரத்தில் இருந்த காலத்தில், மதுரையிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த **விவேகபாநு** என்ற மாத இதழுக்குக் கவிதை ஒன்றை அனுப்பியிருந்தார், பாரதி. அவர் அனுப்பியிருந்த **"தனிமை யிரக்கம்"** என்ற பாடலானது மேற்குறித்த இதழில் 1904 ஜூலை மாதம் 'எட்டயபுரம் ஸி. சுப்பிரமணிய பாரதி' என்று முழுப் பெயருடன் வெளியானது. இதுவே அச்சில் வெளிவந்த முதல் பாடல் என்று இன்றளவும் கொள்ளப்படுகிறது.

தம் மனதுக்குப் பிடித்தமான பணி ஏதேனும் கிடைக்குமா என எதிர்பார்த்து மதுரைக்கு வந்தார், பாரதி. 1904 ஆகஸ்ட் முதல் நாளன்று மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் தற்காலிகமாகத் தமிழாசிரியராகப் பணி புரிய வாய்ப்புக் கிடைத்தது. 10.11.1904 வரை பாரதி அப் பள்ளியில் பணியாற்றினார்.

பாரைத் தம் கவிதைத் திறத்தால் உயர்த்திடப் பிறந்தவரன்றோ பாரதியார்!

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மதுரையில் தமிழாசிரியராகப் பணிபுரிந்த சமயம் 'சுதேச மித்திரன்' இதழில் உதவியாசிரியராகப் பணிபுரிய பாரதிக்கு வாய்ப்புக் கிட்டியது.

'சுதேச மித்திரன்' அதிபரும், ஆசிரியருமான ஜீ. சுப்பிரமணிய ஐயரின் அழைப்பின்பேரில், பாரதி 1904 நவம்பரில் சென்னைக்கு வந்துவிட்டார்.

பாரதியின் சென்னை வருகை வரலாற்றுச் சிறப்புப் பெற்றுவிட்டது. அந்நாள் வரை அருட் கவியாகவும், ஆசு கவியாகவும் விளங்கிய பாரதி, தேசிய கவியாகத் திகழத் தொடங்கியதுமன்னியில், பத்திரிகையாளராகவும் அறிமுகமாகிவிட்டார்.

பாரதி 'சுதேச மித்திர'னில் பணியாற்றிய காலத்தில்தான் செல்லம்மா பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். அக் குழந்தைக்குத் **தங்கம்மாள்** எனப் பெயர் சூட்டப்பெற்றது.

'சுதேச மித்திரன்' இதழில் சேர்ந்த சுமார் ஒன்பது மாதங்களுக்குள்ளாகவே, தமிழ் நாட்டு மாதர் முன்னேற்றத்திற்கென்றே 1905 ஆகஸ்ட் மாதம் தோன்றிய **சக்ரவர்த்தினி** ஆசிரியர் பொறுப்பையும் பாரதி வகிக்கலானார்.

'தமிழ்த் தாத்தா' என்று பலராலும் பாராட்டப் பெற்ற டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுக்கு 1906இல் பிரிட்டிஷ் அரசு, 'மகாமகோபாத்தியாய' என்ற பட்டத்தைக் கொடுத்துப் பெருமை படுத்தியது. அதுவேளை தம் அருமை நண்பர் சோமசுந்தர பாரதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க, உ.வே. சா. அவர்களின் தமிழ்த் தொண்டுகளைப் பாராட்டிப் பாரதி கவி புனைந்தளித்தார். அப்பாடல் தக்க விளக்கக் குறிப்புடன் 1906 பிப்ரவரி 'சக்ரவர்த்தினி' இதழில் வெளிவந்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'சக்ரவர்த்தினி' மாத இதழில் பாரதி, தேசியத் தலைவர்களுடையவும், ஞானசீலர்களுடையவுமான வாழ்க்கைச் சரிதங்களை எழுதியதுடன், பெண்கள் முன்னேற்றத்திற்குரிய வழிமுறைகள் குறித்தும் எழுதி வந்தார்.

பாரதி சென்னை வந்த காலத்தில், நம் பாரத நாட்டில் ஒரு புதிய விழிப்பு, ஒரு புதிய கிளர்ச்சி, நவீன மார்க்கம் தோன்றி யிருந்தது. அடிமைப்பட்ட மக்களிடையே 'சுதேச பக்தி'யை வளர்க்கப் பலர் பாடுபட்டு வந்தனர். சிறுமைச் சேற்றிலே ஆழ்ந்துகிடந்த 'நீச பாரதம்' போய், 'மகா பாரதம்' பிறப்பிக்கும் பொருட்டாகப் பெரியோர் பலர் முன்னணியில் நின்றனர். அப் பெரியோர்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் 'சுதேச பக்தி' என்ற புது நெருப்பொன்றுக்கு வணக்கம் செய்யும்பொருட்டாகத் தம்மையும் பாரதி அவ் வியக்கத்தோடு பிணைத்துக்கொண்டார்; நாட்டுப் பணியைத் தம் வாழ்வின் குறிக்கோளாகக் கருதினார்; அரசியலில் தீவிரமாகப் பங்கு பெறவும் விழைந்தார்.

தீவிரமான அரசியல் கொள்கைகளுக்குச் 'சுதேச மித்திரன்', 'சக்ரவர்த்தினி' ஆகிய இரு இதழ்களிலும் தம் மனப் போக்குக் கேற்றவண்ணம் இடமில்லை என்பதை உணர்ந்த பாரதி, அப்போது சென்னையில் வெளிவந்து கொண்டிருந்த 'இந்தியா' எனும் வார இதழுடனும் தொடர்பு கொண்டார். ஒருசில கவிதைகளைப் புனைந்து அனுப்பித் தம் பெயரால் வெளியிடச் செய்தார்; கட்டுரைகளில் பெயர் போட்டுக்கொள்ளாமல் எழுதி வந்தார்.

'சுயராஜ்ஜியம் எமது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவோம்' என்று வீர முழக்கம் புரிந்திட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லோகமான்ய பால கங்காதர திலகரின் அப்பழுக்கற்ற அரசியல் கோட்பாடுகள் பாரதியைப் பெரிதும் கவர்ந்தன. அதனால், திலகர்பிரானையே தம் அரசியல் குருவாக வரித்துக்கொண்டார். 1906 ஜூலையில் 'தேசாபிமான திலக'மான பாலகங்காதர திலகரின், ஐம்பதாவது பிறந்தநாள் விழாவைப் பாரதி தம் இல்லத்திலேயே சிறப்புறக் கொண்டாடினார்.

1906ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் கல்கத்தாவில் நடைபெற இருந்த காங்கிரஸ் மகாநாட்டிற்குப் பாரதி சென்னை பாலபாரத சங்கத்தின் சார்பில், புதிய கட்சியின் ஒரே பிரதிநிதியாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கல்கத்தாவில் கூடப்போகும் காங்கிரஸ் சபையில் பாரதி கலந்து கொள்வதற்குச் சில மாதங்கள் முன்னதாகவே அவர் தம்மை முற்றுமாக 'இந்தியா' இதழுடன் பிணைத்துக்கொண்டு விட்டார். மற்றும், 1906 நவம்பர் 3ஆம் தேதியிலிருந்து சென்னையினின்றும் வெளிப்பட்ட ஆங்கில வார இதழான Bala Bharat (பால பாரத்) என்னும் இதழுக்கும் பாரதி ஆசிரியராகப் பொறுப்பேற்றார்.

இந்தியாவின் தேசிய சரித்திரத்தில் 1906ஆம் ஆண்டானது சிறப்புத் தன்மையும் தனித் தன்மையும் கொண்டதாகும்.

இந்தியாவின் தேசிய இயக்கத்துக்குத் தந்தையான 'அரும் பெரும் கிழவனார்' எனப்பட்ட தாதாபாய் நௌரோஜி காங்கிரஸ் சபைக்குத் தலைமை தாங்கினார்.

காங்கிரஸ் சபை தோன்றிய காலந்தொட்டு காசி காங்கிரஸ் கூட்டம் வரை - அதாவது 1885ஆம் ஆண்டு முதல் 1905ஆம் ஆண்டுவரை - நடந்த காங்கிரஸ்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சபைகள்தோறும் பிரிட்டிஷ் அரசாட்சியிடம் 'வேண்டு கோள்' தீர்மானங்களை நிறைவேற்றி வந்த காங்கிரஸ் மகாசபை இந்த 1906ஆம் ஆண்டு கல்கத்தா மகாசபையில் தீவிரமான கொள்கைகளைப் பேசியது; சுதேசியம், தேசியக் கல்வி, அந்நிய நாட்டுப் பொருள் புறக்கணிப்பு ஆகிய இவை போன்ற இன்னபிற தீர்மானங்களைத் துணிச்சலுடன் நிறைவேற்றவும் முன்வந்தது. பழைய மிதவாத வழியை மாற்றி, தீவிரமான தேசிய முறையில் செயல்பட நடைமுறைத் திட்டமும் வகுக்கப்பட்டது. தலைமை தாங்கிய தாதாபாய் நௌரோஜி, பாரத நாட்டிற்குச் 'சுய ராஜ்ஜியம்' வேண்டுமென்று உரக்கக் கூவினார்.

அளவிடற்கரிய இத்துணை சிறப்புடனும், உற்சாகத்துடனும், ஆரவாரத்துடனும் நடைபெற்ற சபையில், பிரதிநிதியாகக் கலந்துகொண்ட பாரதி,வேங்கடத்திற்கு வெளியே தேசிய உணர்ச்சி மிகுந்திருப்பதையும் தமிழ் நாடு மட்டும் பின்னணியில் நிற்பதையும் கண்டார். எனவே, தமிழ்நாடும் தேசிய எழுச்சிப் போராட்டத்தில் தலைநிமிர்ந்து முன்னணியில் நிற்கச் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டார். கல்கத்தா காங்கிரசில் கலந்து கொண்ட பாரதி, அது சமயம் டம்டம் நகரில் இருந்த நிவேதிதா தேவியைத் தரிசனம் செய்து ஆசியும் அருளுபதேசமும் பெற்றார்.

புதிய சிந்தனைகளுடனும், புதிய கிளர்ச்சியுடனும் சென்னை திரும்பிய பாரதி தம் முழு நேரத்தையும் தேசப் பணிக்கே செலவிட முனைந்தார்; 'இந்தியா' இதழில் நாட்டுப்பற்றை, தேசிய உணர்ச்சியைத் தூண்டக் கூடிய கட்டுரை - கவிதைகளை எழுதினார்; நாட்டு நடப்பை நன்கு விளக்கிக் காட்டத்தக்க வகையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'கார்டூன்'களையும் (கேலிச்சித்திரம்) 'இந்தியா' இதழில் அறிமுகப்படுத்தினார்.

பத்திரிகைப் பணிகளோடு பாரதி, சில நேரங்களில் மேடையேறி வீர முழக்கம் செய்தார்; இடையிடையே தம்முடைய வீரம் செறிந்த போர் முரசச் கவிதைகளான தேசிய கீதங்களை உணர்ச்சிப் பெருக்குடன், இசையுடன் பாடிக் காட்டினார்.

பாரதியும், அவரது தேசிய நண்பர்களும் சென்னை நகரில் தேசியத் திருப் பணிகளில் ஈடுபட்டிருந்த காலப் பகுதியில், திருநெல்வேலிச் சீமைப் பகுதியில், சுதேசிய இயக்கத்தை வளர்க்கும் பெரும் பணியில் வ.உ.சி.யும், சுப்பிரமணிய சிவாவும் தீவிரமாக உழைத்து வந்தனர். வ.உ.சி. சுதேசியக் கப்பல் கம்பெனி ஒன்றைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக ஆரம்பித்து, அதைப் பல எதிர்ப்புகளுக்கு மத்தியிலே நடத்தி வந்தார்.

தென்னாட்டில் தேசிய விழிப்புணர்ச்சி மெல்ல மெல்லப் புத்துணர்ச்சியாக மலர வித்து ஊன்றப்பட்டு விட்டது.

இந்த நிலையில், 1907ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் காங்கிரஸின் இருபத்து மூன்றாவது மகாசபைக் கூட்டம் சூரத் நகரில் கூட இருப்பதாக அறிவிப்பு வந்தது. இந்த சூரத் காங்கிரஸ் சபைக்குத் தமிழ் நாட்டிலிருந்து மிக அதிகமான பிரதிநிதிகளை அழைத்துச் செல்வதில் பாரதி மிகத் தீவிரம் காட்டினார். இந்த மாநாட்டில் தம் நண்பர்களுடன் பாரதி கலந்து கொண்டார்.

சூரத் காங்கிரஸ் குழப்பத்தில் முடிந்தது; பாரதி அச்சமயம் திலகரின் கொள்கைகளையே பற்றி நின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சூரத்திலிருந்து திரும்பிய பாரதி, மிக மிகத் தீவிரமாகப் பலவித புதிய பணிகளில் ஈடுபட்டார். தம் அருமை நண்பர்களோடு **சென்னை ஜன சங்கம்** என்னும் அமைப்பைத் தோற்றுவிக்க முன் நின்றார். அச் சங்கம் 1908 ஜனவரியில் தோன்றியது.

இந்த 1908ஆம் ஆண்டானது, இந்திய அரசியல் விடுதலை வரலாற்றின் நெடிய காலக் கணக்கில் சிறப்பிடம் பெற்ற ஆண்டாகும். இந்த ஆண்டில்தான் பாரத தேசமெங்கும் சுயராஜ்ஜியக் கிளர்ச்சியானது மடை திறந்த வெள்ளம்போல் பெருக்கெடுத்தது.

வங்கத்தின் முடி சூடா மன்னவராம் பிபின் சந்திர பாலர் விடுதலை அடைந்ததையொட்டி 9.3.1908இல் சென்னையிலும், திருநெல்வேலியிலும் கூட்டங்கள் நடைபெற்றன.

சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பாரதி கலந்துகொண்டு உரையாற்றினார்; 'என்று தணியுமிந்த சுதந்திர தாகம்' என்ற தம் புதிய பாடலைப் பாடிக் காட்டினார். தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்தை, வ.உ.சி., சிவா, பத்மநாப ஐயங்கார் ஆகியோர் சிறப்புறக் கொண்டாடினர்.

பொதுமக்களின் ஆதரவு சுதேசிய இயக்கத்திற்குப் பெருகுவதைக் கண்ட அரசாங்கம் இயக்கத்தை ஒடுக்க, அடக்குமுறை ஏவு கணைகளை ஏவியது.

'சுய ஆட்சி மக்களுக்குத் தேவை' என எழுதியும், பேசியும் வந்த மக்கள் தலைவர்களை யெல்லாம் அரசுக்கு எதிராக மக்களைக் கிளர்ச்சிக்குத் தயார் செய்கிறார்கள் என்று குற்றஞ் சாட்டி, சிறைச்சாலையில் தள்ளியது; கடுமையான சட்டங்களை இயற்றித் தண்டனைக்கு உள்ளாக்கியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1907ஆம் ஆண்டு மே மாதம் 9ஆம் தேதியன்று 'பஞ்சாப் சிங்கம்' எனப் புகழப்பெறும் லாலா லஜ்பத்ராய், நாடு கடத்தப்பட்டு, பர்மா மாண்ட்லே கோட்டைக்குள் சிறை வைக்கப்பட்டதைப் போன்றே, 1908 ஜூலை 3ஆம் தேதி திலகர் கைது செய்யப்பட்டு, ஆறாண்டுக் காலம் கடுங்காவல் தண்டனை விதிக்கப் பெற்றார். திலகர்பிரானைத் தொடர்ந்து, 1908 ஜூலை 8ஆம் தேதி வ.உ.சி.க்கு இரட்டை ஆயுள் தண்டனையும், சிவாவுக்கு ஆறு வருடக் கடுங் காவல் தண்டனையும் விதிக்கப்பட்டன.

மக்கள் தலைவர்கள் - இதழாசிரியர்கள், இதழ்களை நடத்துவோர் ஆகிய பல்துறையைச் சார்ந்தவர்கள் - சிறைப்படுத்தப்பட்டு, கடுங் காவல் தண்டனைகள் விதிக்கப் பெறுவதைக் கண்ட பாரதியின் கவி உள்ளம் எரிமலையென்னக் கொதித்தெழுந்தது. தம் பாடல்கள் வாயிலாக மட்டுமின்றி, 'இந்தியா' இதழின் கட்டுரைகள், சித்திரங்கள் மூலமாகவும் அரசின் போக்கை மிகக் கடுமையாகத் தாக்கினார். சட்ட வரம்பை மீறிய செயல் என்ற கணிப்பில் இச் சமயம் அரசின் பார்வை "இந்தியா" இதழின் பக்கம் திரும்பியது. இதழை வெளியிடுவதற்குக் காரணமானவர்களைக் கைது செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. சட்டப்படி, இதழில் பாரதியின் பெயர் குறிப்பிடப்பெறாத காரணத்தாலும், வெளியீட்டாளராகவும், ஆசிரியரரகவும் சீனிவாசன் என்பவரின் பெயர் பதிவு செய்யப்பட்டிருந்த காரணத் தாலும், பாரதி கைது செய்யப்படாமல், சீனிவாசன் 21.8.1908இல் கைது செய்யப்பட்டார். இதன் காரணமாக 'இந்தியா' இதழ் வெளிவருவது தடைப் பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்த நிகழ்ச்சிக்குப்பின் எந்த நேரமும் பாரதியும் கைது செய்யப்படுவார் என்று அவருடைய நண்பர்கள் உணர்ந்தனர். பாரதி கைதாவதை நண்பர்கள் விரும்பவில்லை. அவரைப் புதுச்சேரி சென்று, அங்கிருந்து கொண்டே தேசப் பணி புரியலாம் என்றும் யோசனை கூறினர். போலீஸ் அதிகாரிகளும் பொய்ச் சாட்சி தயாரித்து, பாரதியைக் கைது செய்யத் திட்டமிட்டனர். எனவே, பாரதியும் தம் நண்பர்களின் யோசனையை ஏற்று, முன்பின் அறிமுகமில்லாத புதுச்சேரிக்கு 1908 செப்டம்பரில் சென்றுவிட்டார். இதே வேளையில், 'இந்தியா' இதழின் உண்மையான உரிமையாளரான எஸ்.என். திருமலாசாரியும் புதுச்சேரி சென்றடைந்தார். பாரதி புதுச்சேரி சென்றபோது அவருடைய மனைவி செல்லம்மா கடையம் புறப்பட்டுச் சென்றார்.

புதுச்சேரி சென்ற பாரதிக்குக் குவளைக் கண்ணன் என்கிற கிருஷ்ணமாச்சாரியார் தோன்றாத் துணைவராக இருந்து உதவினார். குவளைக் கண்ணனின் உதவியால் சுந்தரேசய்யர் தொடர்பு கிடைக்க, அவர் பாரதி தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தார்.

பாரதியும், திருமலாசாரியும் புதுச்சேரி சென்ற சின்னாட்களில், ஸ்ரீ. ஸ்ரீ. ஆசார்யாவும் புதுச்சேரியில் அடைக்கலம் புகுந்து கொண்டார். இம் மூவரும் கலந்து யோசனை செய்து, சென்னையில் நின்றுபோன 'இந்தியா' இதழைக் கொண்டுவரத் திட்டமிட்டனர். மீண்டும் 'இந்தியா' 10.10.1908 முதல் புதுச்சேரியிலிருந்து வெளிவரத் தொடங்கியது. இங்கும் பிரிட்டிஷ் ஆட்சியைக் கடுமையாக விமர்சனம் செய்யும் போக்கு கடைப்பிடிக்கப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுச்சேரி மண்ணிலிருந்து புதுப் பொலிவுடன் வெற்றி முரசம் கொட்டிய 'இந்தியா' இதழில் பல நாட்டுச் செய்திகளையும், சுதந்திர இயக்க வளர்ச்சி, கிளர்ச்சிச் செய்திகளையும் பாரதி வெளியிட்டார். இலண்டனுக்குப் பாரிஸ்டர் படிப்புக்காகச் சென்றிருந்த வ.வெ.சு. ஐயரும், 'இந்தியா' இதழில் பிரசுரம் செய்ய, லண்டன் கடிதங்கள், ஜூஸேப் காரிபால்டி சரித்திரம், ழான்ழாக் ரூஸோவின் ஜன சமூக ஒப்பந்தம் எனப் பற்பல கட்டுரைகளை அனுப்பிவந்தார்.

புதுச்சேரியிலும் 'இந்தியா' இதழுக்குச் செல்வாக்கு அதிகரித்தது; சென்னையில் பெரும் அளவில் சந்தா தாரர்கள் ஏற்படலாயினர்.

1909 மார்ச் மாத சமயத்தில் கடையத்தில் செல்லம்மாவுக்குப் பெண் குழந்தை பிறந்தது. குழந்தைக்குச் **சகுந்தலா** எனப் பெயரிடப்பட்டது. குழந்தை பிறந்த ஆறு மாதத்திற்கெல்லாம் செல்லம்மாவும் புதுச்சேரிக்கு வந்துவிட்டார்.

1909 -1910ஆம் ஆண்டுகளின் காலப் பகுதிகளில் தம் கொள்கைகளையும் கருத்துக்களையும் வெளியிட ஒரு பத்திரிகை மட்டும் போதாது எனக் கருதி, **விஜயா, சூர்யோதயம்,** **கர்மயோகி,** **தர்மம்,** **Bala Bharata** ஆகிய பத்திரிகைகளிலும் பாரதி நிறைய எழுத ஆரம்பித்தார்.

இதுசமயம், பாரதிக்குப் புதுச்சேரியில் அநேக நண்பர்கள் ஏற்படலாயினர். அவர்களில், பாரதிதாசன் என்கிற கனக சுப்புரத்தினம், பரலி. சு. நெல்லையப்பர், வ. ரா., ஆராவமுத அய்யங்கார், 'இடிப்பள்ளிக்கூடத்து வாத்தியார்' சுப்பிரமணிய ஐயர், ஆறுமுகம் செட்டியார், தலைவை சங்கர செட்டியார் - ஆகியோர் குறிப்பிடத்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தக்கவர்கள் ஆவர். இவர்கள் தவிர, பாரதியின் குடும்ப வாழ்க்கை கூடிய வரையில் சிரமமில்லாமல் நடைபெற 'வெல்லச்சு செட்டியார்' என்று அழைக்கப்பட்ட கிருஷ்ணசாமி செட்டியார், பொன்னு முருகேசம் பிள்ளை முதலியோர் செய்த உதவிகளைச் சொல்லி முடியாது.

பாரதியின் வீட்டில் வேலை செய்துகொண்டிருந்த அம்மாக்கண்ணு என்ற பெண்மணி, அந்தக் குடும்பத்திற்குப் பல விதங்களிலும் பேருதவியாய் இருந்துவந்தார்.

பாரதி குழுவின்ரும், பிறரும் பிரெஞ்சுப் பகுதிகளில் இருந்து கொண்டு, இந்திய மக்களுக்கு அரசியல் விழிப்புணர்ச்சியையும், சுதந்திர தாகத்தையும் பற்பல பத்திரிகைகள் வாயிலாகவும், துண்டுப் பிரசுரங்கள் மூலமாகவும் ஏற்படுத்துவது குறித்துக் கவலையும் அதிர்ச்சியும் அடைந்தனர், பிரிட்டிஷ் இந்தியா அதிகாரிகள்.

பாரதியின் பத்திரிகைப் பணிகளை முறியடிப்பதில் அதிகாரிகள் தீவிரம் காட்டினர்; அதனால், பாரதிக்குப் பல வழிகளிலும் தொல்லைகள் தந்தவண்ண மிருந்தனர்.

1910ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்தியா, விஜயா, சூர்யோதயம் ஆகிய பத்திரிகைகள் பிரிட்டிஷ் இந்திய எல்லைக்குள் வரக்கூடாது என அரசு தடை விதித்தது. இதன்பின் கர்மயோகி, Bala Bharata ஆகிய பத்திரிகைகள் வெளிவருவதும் நின்றுவிட்டது.

அரசு பிறப்பித்த கொடுமையான சட்டங்கள், தொடர்ந்து பத்திரிகைகள் நடத்தக் கையில் பணமில்லாக் குறை, பத்திரிகை விற்பனை மூலமாக வரவேண்டிய தொகைகள் வருவதில் ஏற்பட்ட சிக்கல்கள் ஆகிய இன்னபிற காரணங்கள் அனைத்தும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒன்றுசேர்ந்து பாரதியின் பத்திரிகைப் பணிகளைத் தொடர வொட்டாமல் செய்துவிட்டன.

தம் மனத்தையும், பொழுதையும் பெரிதும் கவர்ந்த பத்திரிகைப் பணிகள் தடைப்பட்டாலுங்கூட, மனம் சோர்ந்துவிடாமல், நூல்கள் எழுதி வெளியிடுவதில் பாரதி கவனம் செலுத்தலானார். மற்றும், 1910 ஏப்ரலில் அரவிந்தரும், அக்டோபரில் வ.வெ.சு. ஐயரும் புதுச்சேரி வந்தடைந்தனர். இவ்விருவர் வருகையால் பாரதி உற்சாகமடைந்தார். பாரதி இவர்களுடன் தினந்தோறும் அளவளாவிக் கவலைகளை மறந்தார்.

இப்படி இருக்கையில், 1911 ஜூன் 17இல், திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த ஆஷ் என்பவர், மணியாச்சியில் வாஞ்சி என்ற இளைஞனால் சுட்டுக் கொல்லப்பட்டார். இந்தக் கொலைக்கும் புதுச்சேரியிலிருந்த தேச பக்தர்களுக்கும் ஏதேனும் ஒரு வகையில் தொடர்பு இருக்க வேண்டும் என்று அரசினர் சந்தேகித்தனர். இதனால், பாரதி, வ.வெ.சு.ஐயர், அரவிந்தர் ஆகியோர் அடைந்த இன்னல்களுக்கு அளவில்லை. 100834

எத்துணையோ சோதனைகள் பாரதியின் சொந்த வாழ்க்கையைப் பாதித்த போதிலும், அவர் உள்ளம் சோர்ந்துவிடாமல் வயிரமுடைய நெஞ்சமுடன் இலக்கியப் பணிகளில் பெரிதும் ஈடுபட்டே உழைத்து வரலானார்.

எழுத்துத் துறையில் மட்டுமல்லாது, சமூக சீர்திருத்தத் துறையிலும் பாரதி தம் கவனத்தைச் செலுத்தி வந்தார். புதுச்சேரி வாழ்வில் சமூகப் பொதுவாழ்விற்குப் பாரதி செய்துள்ள சேவைகள் பலவாகும். மக்களைப் பீடித்துள்ள சாதி வேற்றுமைகள், தீண்டாமைக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுமைகள், பிறப்பால் ஏற்றத் தாழ்வு கருதுதல் ஆகியன மறைய வேண்டும் என்பதில் அவர் தீவிர அக்கறை காட்டினார். பிற்பட்ட சமூகத்தினரைக் கைதூக்கி விடவேண்டும் என்றும், ஹரிஜன மக்களைப் பல வழிகளிலும் முன்னேற்றமடையச் செய்வதில் ஜாதி இந்துக்கள் முன் வரவேண்டும் என்றும் ஓயாது வற்புறுத்தி வந்தார். எல்லோரையும் ஓர் குலமாகக் கருதிய பாரதி, அனைவருக்கும் வழிகாட்டியாகவே வாழ்ந்து காட்டினார். கனகலிங்கம் என்ற ஆதி திராவிட சகோதர நண்பருக்குப் பூணூல் அணிவித்துக் காட்டி, மக்களின் அகக் கண்களைத் திறக்க வழி கோலினார்.

இப்படி பாரதி சமுதாயத் தொண்டு புரிந்து வருகையில், சென்னையில் 1913ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தியாக சீலர் சுப்பிரமணிய சிவா ஞானபாநு என்ற பெயரில் மாத இதழ் ஒன்றைத் தொடங்கினார். இதில் பாரதி கவிதைகள், கட்டுரைகள், கதை முதலியன எழுதி வந்தார். இவற்றுள் பல, பாரதியின் பெயராலும், புனைபெயர்களிலும் வெளிவந்தன என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

பாரதி தம் புதுச்சேரி வாழ்க்கையின்போது சிறிது காலம் தாடி, மீசை வளர்த்து வந்தார்; நாலாயிரப் பிரபந்தத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார்; வைணவ ஆழ்வார்களிடத்தே பக்தி செலுத்தலானார்; திருநாமம் தரித்துக்கொண்டார். ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதிப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவந்ாதர். மொழியாக்க—மொழிபெயர்ப்புப் பணிகளையும் ஆற்றி வந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதுவையில் பாரதிக்குச் சாமியார்களிடம் பழக்கம் நிரம்ப உண்டு. குள்ளச்சாமி என்ற மாங்கொட்டைச் சாமி, கோவிந்த சாமி, யாழ்ப்பாணத்துச் சாமி ஆகிய சாமியார்களிடம் தமக்குள்ள தொடர்பு, ஈடுபாடு குறித்துப் பாரதி பாடியுள்ளார்.

புதுச்சேரியிலுள்ள மணக்குள விநாயகர் மீதும், உப்பளம் தேச முத்துமாரியம்மன் மீதும், சித்தாந்த சாமி கோயில் மீதும் பாரதி பாடிப் பரவிய பாடல்கள் நெஞ்சை விட்டு நீங்காத் தன்மை கொண்டவை.

புதுச்சேரியில் பாரதி 1908 முதல் 1918 வரை சுமார் 10 ஆண்டுகள் வனவாசம் செய்து, தேசத் தொண்டு புரிந்தும், பலவித இதழ்களை நடத்தியும், நூல்களை இயற்றியும், சமுதாயத்திற்கு வேண்டிய சீர்திருத்தக் கொள்கைகளை வற்புறுத்தி நடைமுறைப்படுத்தியும் வந்தார்.

தமிழ்நாட்டு தேசியவாதிகளும், தமிழ்ப் பத்திரிகை யாளர்களும் பிறரும் புதுச்சேரியை அடைக்கலமாகக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த தேச பக்தர்களின் விடுதலைக்கான முயற்சிகளை மேற்கொண்டனர்.

பாரதிக்கும் புதுச்சேரியை விட்டுத் தமிழகம் திரும்ப வேண்டும் என்கிற எண்ணம் உண்டாயிற்று போலும்! இதன் காரணமாக, அரண் இல்லாச் சிறையில் விலங்கிலாக் கைதியாய் வசித்து வந்த பாரதி, நண்பர் களின் வற்புறுத்தலுக்கிணங்க 1908 செப்டம்பரில், புதுச்சேரிக்குச் சென்றது போலவே, அங்கிருந்தும், தாமே 1918 நவம்பர் 24இலே வெளியேறினார். பாரதி பிரிட்டிஷ் இந்திய எல்லையை வந்தடைந்ததும், கடலூரில் போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி கைது செய்யப்பட்ட செய்தியறிந்து, 'சுதேச மித்திரன்' ரெங்கசாமி அய்யங்கார், வக்கீல் எஸ். துரைசாமி ஐயர், ஸர். சி.பி. ராமசாமி ஐயர், நீதிபதி மணி அய்யர், அன்னி பெசண்ட் அம்மையார் - ஆகியோர் பாரதியின் விடுதலைக்கான முயற்சிகளை மேற்கொண்டனர்; பாரதி 21 நாட்கள் சிறைவாசம் செய்ததன்பின், 1918 டிசம்பர் 14-ஆம் தேதி விடுதலை யானார்.

விடுதலையான பாரதி கடலூரினின்றும் நேரே திருநெல்வேலி வழியாக, தம் மனைவியின் ஊரான கடையம் போய்ச் சேர்ந்தார். கடையம் சேர்ந்த இரு தினங்கள் கழித்து - அதாவது 1918 டிசம்பர் 17ஆம் தேதி தம் விடுதலையின் பொருட்டாகப் பாடுபட்டவர் களுக்கு நன்றி தெரிவித்து, ரெங்கசாமி அய்யங்காருக்குக் கடிதம் எழுதினார்; இதன்பின்னர் 1918 டிசம்பர் 21ஆம் தேதி தம் நூல்களைப் பதிப்பித்த பதிப்பாளரும் அருமை நண்பருமான பரலி. சு. நெல்லையப்பருக்கும் கடிதம் எழுதினார்.

கடையத்தில் பாரதி இருந்த சமயத்தில், தனி மனித சுதந்திரம், ஆண் - பெண் சரிநிகர் சமானம், கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகச் செய்தல் - ஆகிய இலட்சியங்களைச் செயற்படுத்த முனைந்தார். பாரதி யின் முற்போக்கான கருத்துக்களைப் புரிந்துகொள்ள இயலாத கடையவாழ் மக்கள் பாரதியை ஏளனம் செய்தனர். பழங் கொள்கைகளில் வேரூன்றி யிருந்த அந்த நாட்டுப்புற மக்களை நினைத்துப் பாரதியும் வேதனைப்பட்டார். சில சமயங்களில் வெளியூர்களுக்கும் சென்று வந்தார்.

1919 மார்ச் மாதத்தில் பாரதி சென்னைக்கு வந்தார்; சின்னாட்கள் சென்னையிலேயே தங்கவும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்தார். அச்சமயம் ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர் (பிற்காலத்தில் மகான் மணி அய்யர் என்று அழைக்கப் பட்டவர்) தலைமையில் விக்டோரியா பப்ளிக் ஹாலில், ஆங்கிலத்தில் வேதாந்தச் சொற்பொழிவுகள் நிகழ்த்தி னார். இதே வேளையில், காந்தியடிகள் சென்னை வந்து ரௌலட் சட்டத்திற்கு எதிரான ஒத்துழையாமை இயக்கத்திற்கு ஆதரவு திரட்ட, ராஜாஜி இல்லத்தில் தங்கியிருந்தார். காந்தியடிகள் தங்கியிருப்பதை அறிந்த பாரதி, அவரைச் சந்திக்க ஆவல் கொண்டார். உடனே ராஜாஜி இல்லம் சென்று காந்தியடிகளைக் கண்டார்.

காந்தியடிகளைக் கண்டு, தாம் திருவல்லிக்கேணிக் கடற்கரையில் நடத்த இருக்கும் கூட்டத்திற்குத் தலைமை தாங்க வேண்டும் எனப் பாரதி கேட்க, அதற்குக் காந்தியடிகள் தமக்கு அன்றைய தினம் அலுவல்கள் இருப்பதாகவும், மறுநாள் கூட்டத்தை ஒத்திப்போட்டு நடத்துவதானால், தம்மால் வர இயலும் எனப் பதில் சொல்ல, பாரதியோ மறுநாள் தள்ளிப் போட உத்தேசமில்லை என்று காந்தி யடிகளிடம் கூறியதுடன், அவருடைய ஒத்துழையாமை இயக்கத்தைத் தாம் வாழ்த்துவதாகச் சொல்லி விடை பெற்றுக்கொண்டு வெளியேறி விட்டார். அப்போது தம் அருகிலிருந்தவர்களை நோக்கி, "வந்தவர் யார்?" என்று காந்தியடிகள் வினவினார். "வந்தவர், எங்கள் தமிழ்நாட்டுத் தேசியக் கவி" என்று ரத்தினச் சுருக்கமாக ராஜாஜி தெரிவித்தார். தாம் நடத்திய அன்றையக் கூட்டத்தில்தான் பாரதி, "வாழ்க நீ எம்மான் காந்தி" என்ற பாடலால் மகாத்துமாவை வாழ்த்திப் பாடினார்.

இதன் பின்னர், பாரதி திரும்பவும் கடையம் புறப்பட்டுச் சென்றார். கடையத்தில் சில மாதங்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தங்கியபின், தம் ஜென்மபூமியான எட்டயபுரம் வந்து சேர்ந்தார். எட்டயபுர மன்னராக இருந்தவர் தமிழ்ப் பற்றுமிக்க வெங்கடேசுர ரெட்டப்ப பூபதி என்பவராவார். அவர், இளமையில் பாரதியை மிகவும் நேசித்தவர். இவரைக் காண வேண்டியும், உதவிகள் பெற வேண்டியும் 1919 மே மாதம் 1, 2 ஆகிய தேதிகளில் இரண்டு சீட்டுக் கவிகள் எழுதி யனுப்பினார், பாரதி. ஆனால், மன்னர் பாரதியைக் காண வரவுமில்லை; உதவிகள் செய்ய முன் வரவுமில்லை. இருப்பினும், பாரதி மீண்டும் அதே 1919ஆம் ஆண்டு ஆகஸ்டு 6ஆம் தேதி எட்டயபுரத்து ராஜ வமிசத்தின் சரித்திரமான "வம்சமணி தீபிகை" நூலைச் செம்மையாக்கி, திருத்தி, நல்ல, இனிய, தெளிந்த தமிழ் நடையில் தாம் அமைத்துத் தர ஆவல் கொண்டுள்ளதாக ஒரு கடிதம் எழுதினார். பலன் கிட்டவில்லை.

இயற்கையிலேயே, தமிழ்ப் பற்றுக்கொண்ட நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள் - குறிப்பாக, தன வணிகர்கள் - பாரதியிடம் மெய்யன்பு கொண்டு, அவரைச் செட்டிநாட்டுக்கு அழைத்துவர எண்ணங் கொண்டனர். அதன்படி, கானாடுகாத்தான் வை.சு. சண்முகம் செட்டியார் என்பார் பாரதியைத் தம்மூருக்கு வரும்படி அழைப்பு விடுத்தார். பாரதியும் 1919 அக்டோபர் 28ஆம் தேதி காரைக்குடி வந்து, கானாடு காத்தானில் வை.சு. சண்முகம் செட்டியார் இல்லத்தில் சில நாட்கள் தங்கினார். பின்னர் கடையம் செல்லப் புறப்பட்டார். அதனால் காரைக்குடி வந்தார். அது சமயம், அவ்வூரிலுள்ள ஹிந்து மதாபிமான சங்க நிர்வாகிகளான சொ. முருகப்பா, ராய. சொ. ஆகியோர் பாரதியை வரவேற்றனர். அச்சங்கப் பிரமுகர்களுடன் புகைப்படங்கள் எடுத்துக்கொண்டார்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனித்தும் நிழற்படம் எடுத்துக்கொண்டார். சங்கத்தின் மீது வாழ்த்துப் பாக்கள் புனைந்து தரும்படி, அவர்கள் மிக விரும்பிக் கேட்டுக் கொண்டனர். பாரதியும் பாடல்கள் தருவதற்கு உடன்பட்டார்.

அதன்பின்னர், 1919 நவம்பர் 7ஆம் தேதி பாரதி காரைக்குடியினின்றும் புறப்பட்டு, மதுரை வழியாகக் கடையம் திரும்பினார். 9.11.1919இல் தாம் உடன்பட்ட தற்கிணங்கக் காரைக்குடி ஹிந்து மதாபிமான சங்கத்தின் மீதான வாழ்த்துப் பாடல்களைப் பாரதி அனுப்பிக் கொடுத்தார். கடையத்தில் தங்கியிருந்த காலப் பகுதியில் பாரதி, சமயச் சொற்பொழிவுகள் ஆற்றுதல், பாடல்கள் புனைதல், கட்டுரைகள் வரைதல் போன்ற துறைகளில் தம் கவனத்தைச் செலுத்தலானார்.

சொந்த வாழ்க்கையில் சோதனைகள் தொடர்ந் தாலும், நெஞ்சம் கலங்காது, சமயப் பொழிவுகள் நிகழ்த்துவதன் மூலமும், தம்மைப் புரிந்து கொண்டவர் களிடம் உரையாடுவதன் மூலமும் பாரதி தம் கவலைகளை மறந்து வாழ்ந்தார்.

1920 ஜூன் மாதம் 20ஆம் தேதி பொட்டல்புதூர் என்னும் சிற்றூரில் முஸ்லிம் சபையொன்றின் முன்னே "இஸ்லாம் மார்க்கத்தின் மஹிமை" என்னும் பொருள் பற்றிப் பேசினார். அதுவேளை, அல்லாமீது தாம் பாடிக் கொணர்ந்த தமிழ்ப் பாட்டை ராக, தாளத்துடன் அவர் பாடியும் காட்டினார்.

பாரதி பலவித முயற்சிகளில் ஈடுபட்டார். தம் நூல்கள் பலவற்றைத் தாமே பதிப்பித்து வெளியிட நினைத்து, சுற்றறிக்கை தயாரித்துத் தமக்கு வேண்டிய வர்களுக் கெல்லாம் அனுப்பினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதனிடையில், பாரதிக்கு மீண்டும் பத்திரிகை நடத்த வேண்டுமென்ற ஆவல் பிறந்து விட்டது போலும்!

தம் நண்பர் ரா. சீனிவாச வரதனுக்குப் பாரதி 1920 ஆகஸ்டு 6ஆம் தேதியன்று எழுதிய கடிதமொன்றில் 1920 செப்டம்பர் முதல் தேதியிலிருந்து "அமிர்தம்" என்ற பெயருடைய பத்திரிகையொன்று கடையத்தி லிருந்து ஆரம்பிக்க இருப்பதாகவும், அதுபற்றிய விளம்பரத்தைச் 'சுதேச மித்திரன்' 1920 ஆகஸ்டு 2ஆம் தேதிய இதழில் காணலாம் எனவும் தெரிவித்து எழுதினார். இதன்பின் அதே ஆண்டு ஆகஸ்டு 26ஆம் தேதிய கடிதத்தில் "அமிர்தம்" பத்திரிகை 1921ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தொடங்கும் எனவும், மூலதனத்துக்கு வசூல் தீவிரமாக நடத்தி வருவதாகவும் குறிப்பிட்டு விட்டு, சொத்தை விற்றேனும் கொண்டு வரக்கூடிய தொகையை எடுத்துவரும்படியும் சீனிவாச வரதனுக்கு எழுதினார். இந்தப் பத்திரிகை ஆசையும் நிராசையானது.

நாட் செல்ல நாட் செல்லப் பாரதிக்குக் கடைய வாழ்க்கை அலுப்பை ஊட்டியது. எனவே, திரும்பவும் சென்னை வந்து சேர்ந்தார். பாரதி சென்னை வந்த சமயம், "சுதேச மித்திரன்' பத்திரிகையின் ஆசிரியராக மட்டுமின்றி, அதிபராகவும் இருந்தவர் ஏ. ரெங்கசாமி அய்யங்கார். அவரைப் பாரதி கண்டு பேசினார். திரும்பவும் 'சுதேச மித்திர'னில் உதவியாசிரியராகப் பணி புரியப் பாரதிக்கு அவர் வாய்ப்பளித்தார்.

'சுதேச மித்திர'னில் இரண்டாம் முறையாகப் பணியாற்றியபோது, பாரதி நாள் தவறாமல் இந்திய அரசியலைக் குறித்து மட்டுமல்லாமல், உலக நிகழ்ச்சிகள் குறித்தும் எழுதி வந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1920-21இல் பாரதி சென்னையில் வாழ்ந்தபோது, முதலில் ஜார்ஜ் டவுன் தம்புசெட்டித் தெருவிலும், பிறகு திருவல்லிக்கேணி துளசிங்கப் பெருமாள் கோயில் தெருவிலும் குடியிருந்தார்.

1920-21ஆம் ஆண்டுகளின் கால எல்லையில் பாரதி தமக்கு ஓய்வு கிடைக்கும் போதெல்லாம், சென்னைக் கூட்டங்களில் பேசினார். சில நேரங்களில் வெளியூர் பயணங்களை மேற்கொண்டதும் உண்டு. மற்றும், கடவுள் வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு கொண்டார். சென்னைத் திருவல்லிக்கேணிப் பார்த்தசாரதி கோயில் சென்று, வழிபாடு செய்யும்போது, அங்குள்ள கோயில் யானையுடன் மிக நெருங்கிப் பழகினார். அந்த யானைக்குத் தேங்காய், பழம் கொடுத்து, அதன் உறவை நாடினார்.

ஒருநாள் அந்த யானைக்குத் திடீரென மதம் பிடித்துக் கொண்டது. வழக்கம் போல் பாரதி யானை யிடம் சென்றார். அருகில் இருந்தவர்கள் எச்சரித்தும், பாரதி கேளாமல் யானைக்குத் தின்பண்டம் அளித்தார். இன்னாரென்று அறியாத நிலையில், யானை தன் துதிக்கையினால் பாரதியைப் பிடித்திழுத்துக் கீழே தள்ளி விட்டது. காயமுற்று, உணர்வற்ற நிலையில், யானைக்குச் சற்றுத் தொலைவில் விழுந்த பாரதியைப் புதுச்சேரியில் எங்கிருந்தோ வந்து காத்தருளிய வீரர்பிரான் குவளைக் கண்ணனே ஓடோடி வந்து துணிவுடன் காப்பாற்றினார். விழுந்த அதிர்ச்சியால் ஏற்பட்ட காயங்களுக்கு, இராயப் பேட்டை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது.

சில நாட்களில் பாரதி குணமடைந்தார். என்றாலும், முன்னைப்போல், உடலில் வலு இல்லை. இருந்தும் 'சுதேச மித்திரன்' பத்திரிகாலயம் சென்று,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வழக்கம்போல தம் அலுவல்களைக் கவனித்து வந்தார். சொல்லப்போனால், தம் உடல்நிலையைக்கூடப் பொருட்படுத்தாமல் வெளியூர்க் கூட்டங்களிலும் கலந்து கொண்டார்.

1921 ஆகஸ்டு மாதம் முதல் தேதியன்று பாரதி ஈரோட்டை யடுத்த கருங்கல்பாளையம் வாசக சாலை ஆண்டு விழாவில் கலந்துகொண்டார். அந்த ஆண்டு விழாவில் "மனிதனுக்கு மரணமில்லை" என்னும் பொருளில் பாரதி பேசினார். அடுத்த நாள் ஈரோட்டில் "இந்தியாவின் எதிர்கால நிலை" என்பது பற்றிப் பேசினார்.

யானையால் தாக்குண்ட அதிர்ச்சியினின்றும் பாரதி ஓரளவு குணமடைந்தார் என்றாலும், உடல் நிலை பரிபூர்ணமாகத் தேறவில்லை. 1921 செப்டம்பர் மாத வாக்கில் பாரதியின் உடல் நிலையில் மாறுதல் ஏற்பட்டது. வயிற்றுக் கடுப்பு நோய் அவரை வாட்டி எடுத்தது. ஏற்கெனவேயே, உடல் நலிவுற்றிருந்த நிலையில், நோயை எதிர்த்து நிற்பதற்குரிய சக்தி பாரதி உடலில் இல்லை. உடல் நிலையைக் கவனித்துக் கொள்ளுமாறும், மருந்துண்ணுமாறும் நண்பர்களும் உறவினர்களும் மிக வற்புறுத்திக் கூறியதைக்கூடப் பாரதி பொருட்படுத்தவில்லை.

1921 செப்டம்பர் 10ஆம் தேதி நோயின் கடுமையால் பாரதி அவதியுற்றார். 10ஆம் தேதி நள்ளிரவு தாண்டி, 11ஆம் தேதி அதிகாலை சுமார் 1 மணிக்குப் பாரதியின் உயிர்ப்பறவை உடற் கூட்டிலிருந்து சிறகடித்துப் பறந்து சென்றுவிட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதிக் கவிஞன் தம் முப்பத்தொன்பதாம் வயது முடியுமுன்பே மரணத்தைக் கடந்தார் அல்லது மரணத்தை வென்றார். உலகைத் தம் பாட்டுத் திறத்தால் உய்விக்க வந்த மகாகவி பூதவுடலை நீத்துப் புகழுடம்பு பெற்றார்.

தமிழகம் போற்றும் பாரதி, *1921* செப்டம்பர் *11*ஆம் நாள் இவ்வுலக வாழ்வைத் துறந்து விண்ணவர்க்கு விருந்தாகிவிட்டார். காலனைக் காலால் உதைப்பதாகப் பாடியவர், காலத்தைக் கடந்த குரலாக ஒலித்துக் கொண்டிருக்கிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின் நூல் வெளியீட்டுப் பணிகள்

இன்று நாம் பெரிய பெரிய தொகுதிகளாகக் காணும் பாரதியாரின் படைப்பிலக்கியங்கள் யாவும் ஆரம்பகாலங் களில் சிறுசிறு வெளியீடுகளாகவேதான் பிரசுரமாயின.

பாரதி, தாம் உயிரோடு இருந்த காலத்திலேயே சில நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டார். தம்மால் மிக்க அன்புடன் 'தம்பி' என்று உரிமையோடு அழைக்கப் பட்ட பரலி சு. நெல்லையப்பர் அவர்களைக் கொண்டும் ஒருசில கவிதை நூல்களை வெளியிடச் செய்தார்; சில மொழிபெயர்ப்பு நூல்களையும் கதைத் தொகுதி நூல் ஒன்றையும் 'சுதேச மித்திரன் புத்தகசாலைப் பிரிவு'ம் வெளியிட்டது.

தமிழகத்தில் மட்டுமல்லாது, "மாதா மணிவாசகம்" என்றொரு பாடல் தொகுதி தென்னாப்பிரிக்காவிலும் பிரசுரமானது.

பாரதி தாம் வாழ்ந்த காலத்திலேயே தம் நூல்கள் வெளிப்படுவதில் தீவிர கவனம் செலுத்தினார். அதன் பொருட்டுப் பலவித முயற்சிகளை மேற்கொண்டார்; திட்டங்களை வகுத்தார். அவ்வப்போது அவர் வெளி யிட்ட அறிக்கைகள், நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள் ஆகியன வெல்லாம் அவரின் இதயத் துடிப்பைப் பிரதி பலிப்பதாகவே அமைந்துள்ளன. தேசத் திருத்தொண் டாகவும், தேசீயத் திருத்தொண்டாகவுமே தம் நூல்கள் பிரசுரத் திட்டத்தைக் குறித்துப் பாரதி கருதினார். தம் நூல்கள் பிரசுரமானால், தமிழ் நாட்டின்—தமிழ் இலக்கியத்தின் நிலை உயரும் என்றே எண்ணிப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெருமைப்பட்டவர் பாரதி. பாரதி ஆசை ஆசையாக மேற்கொண்ட நூல் வெளியீட்டு முயற்சிகளும் திட்டங்களும் தமிழ் மக்களின் போதிய ஆதரவின்மை காரணமாகச் செயல் உருவம் பெறாமல் போய்விட்டன.

பாரதி எழுதியவையோ ஏராளம். ஆனால், நூல் வடிவம் பெற்றவையோ விரல்விட்டு எண்ணிவிடும் அளவிலேயே இருந்தன. 1907ஆம் வருடத்திய சிறு பிரசுரத்தையும் சேர்த்துக் கணக்கிட்டால்கூட, 1920ஆம் வருடம் வரை வெளியான நூல்களின் எண்ணிக்கை இருபத்தொன்று மட்டுமே யாகும்.

ஆரம்ப காலத்தில் தேசியக் கவிஞராக அறிமுகமான பாரதியாரின் எழுத்துக்களைப் பிரசுரிக்க எவரும் முன் வரவில்லை. பாரதியின் எழுத்துக்களிலே தேசிய மணம் கமழ்ந்தது மட்டுமின்றி அன்னிய ஆட்சியைத் தாக்கும் போக்கும் காணப்பட்டன. தவிர, பிரசுரத் தொழிலை ஒரு வியாபாரமாக நடத்தும் முதலாளிகளும் தோன்ற வில்லை. கைம்முதலைப் போட்டுத் தங்கள் நூல்களைப் பிரசுரம் செய்த ஆசிரியர்களே அக்காலத்தில் காணப் பட்டனர். இவையும் பாரதி எழுத்துக்கள் நூல் வடிவம் பெறத் தடைகளாக அமைந்தன எனக் கொள்ளலாம். பாரதியையும், அவருடைய கவிதைத் திறனையும் நன்கறிந்த பலரும் பாரதியின் தீவிர அரசியல் போக்குக் காரணமாகத் தக்க சமயத்தில் உதவி செய்ய முன்வரவில்லை.

பாரதியின் படைப்பிலக்கியங்கள் காலங் கடந்தே நூல் வடிவம் பெற்றன. பாரதி **விவேகபாநு, சுதேச மித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா** - ஆகிய இதழ்களில் எழுதியும், 1907இல்தான் முதன் முதலாக மூன்று பாடல்கள் கொண்ட சிறு பிரசுரம் வெளியானது. ஆனால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இச் சிறு நூல் வெளிப்படுமுன் பாரதி தாம் "இந்தியா" இதழில் சிவாஜி தமது சைநியத்தாருக்குக் கூறியது என்னும் தலைப்பில் எழுதிவந்த கவிதையைச் சிவாஜியின் படையழைப்பு என்ற பெயரில் நூலாக வெளியிடக் கருதினார்.

"சரித்திர சம்பந்தமான செய்யுட்கள் புனைவதில் இக்காலத்துத் தமிழர்கள் சாதாரணமாகப் பிரவேசிப்பதில்லை. எனினும், சுதேசப்பற்று மிகுதிப் படுவதற்கு மேற்கூறிய விதமான செய்யுட்கள் மிகவும் அவசியமானவை... இந்தச் செய்யுள் முடிந்தவுடன் புஸ்தக ரூபமாய் வெளியிடக் கருதி யிருக்கின்றோம்"

(இந்தியா : 17.11.1906)

என்று பாரதி எழுதிய குறிப்பைச் சிந்திக்க.

தேசிய எழுச்சிக்கு வலிமைதரும் பொருட்டாகச் சரித்திர சம்பந்தமான செய்யுட்கள் தேவை எனக் கருதியே பாரதி முதலாவதாகச் சிவாஜி பற்றிய பாடல் தொகுப்பை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டார்.

அந்த நூல் வெளியீடு எப்படி இருக்கும்? பாரதியே சொல்லக் கேட்போம் :

"...இதிலே அரும்பத வுரை, முகவுரை, சிவாஜி மகாராஜாவின் சரித்திரம், சிவாஜியின் சித்திரம்—என்ற பல புதுமைகள் சேர்த்து மிகவும் உயர்ந்த கிளேஸ் (பளபளப்புக்) காகிதத்திலே அமெரிகா தேசத்துக் கவிப் புத்தகங்களின் மாதிரியாக அச்சிடப்பெற்று வருகின்றது."

(இந்தியா : 8.12.1906)

ஆம்; வீரரசம் கொண்ட, பாரத நாட்டின் புராதன மாண்பைத் தெள்ளத் தெளிவாகப் புலப்படுத்திக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டிய சிவாஜி பாடல் நூலைப் பல புதுமைகள் சேர்த்தும், உயர்ந்த தாளிலே அமெரிக்கா தேசத்துக் கவிஞர்களின் நூல்களுக்கு இணை சொல்லும்படியாக அச்சிடப்படவேண்டும் எனவும் பாரதி ஆசைப்பட்டார்.

பாரதி விரும்பியபடி சிவாஜி பாடல் நூல் வடிவம் பெறவில்லை.

பாரதி அரசியலைப் பொறுத்தவரை, தீவிரவாதி யாகத் தொழிற்பட்டவர்தான் என்றாலும், அவருடைய கவிதையழகில் சொக்கிப்போன மிதவாதிகளும் இருக்கவே செய்தனர். ராஜீயக் கருத்துக்களில் வேறு பட்டு நின்றவர் கிருஷ்ணசாமி ஐயர். இவர் மிதவாதத் தலைவர்களிலே மிகவும் முக்கியமானவர்; அரசியல் காரணமாகப் பல்வேறு சமயங்களில் பாரதியாலேயே மிகவும் கடுமையாக விமர்சிக்கப்பட்டவர்; அவரே 1907ஆம் ஆண்டின் இறுதியில் **''ஸ்வதேச கீதங்கள்''** என்ற நான்கு பக்கம் கொண்ட சிறு பிரசுரத்தை வெளியிட்டார். அச்சிறு பிரசுரத்தையும் இலவசமாகவே அச்சிட்டு வழங்கினார். ''பாரதியாரின் கவிதை உருக்கந் தான் ஓர் ராஜீய எதிரியிடமும் இந்தப் புகழ்ச்சியை வெளியாக்கியது'' என்பார் வி. சக்கரை செட்டியார்.

சிறு பிரசுர நூலைக் கண்ட பலர், பாரதியின் கொஞ்சு தமிழ்த் தேசியப் பாடல்களில் தங்கள் உள்ளங் களைப் பறிகொடுத்தனர். அவர்கள் பாரதியை அணுகி, அவருடைய பாடல்களை வெளியிடுமாறு தூண்டி, மிகுந்த ஆவல் காட்டி, உதவிகள் புரிய முன் வந்தனர். அங்ஙனம் உதவிபுரிய முன்வந்தவர்களின் பொருளுதவி கொண்டு பாரதியே 1908 ஜனவரியில் பதிப்பித்த நூல் **''ஸ்வதேச கீதங்கள்** (முதல் பாகம்)'' என்பதாகும். ''இதன் பெயரைக் கேட்கும்போதே, இத் திரட்டு நம்மவர்க்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு புதுவழியைக் கற்பிக்க வந்ததென்பது விளங்கும்" என்று மதிப்புரை வரைந்தார், செந்தமிழ் வித்தகர் மு. ராகவையங்கார்.

நம்மவர்க்குப் புதுவழி காட்டும், இக் கவிதை நூலைத் தொடர்ந்து, தேசபக்த திலகமான பால கங்காதர திலகருக்குத் தமிழ் நாட்டில் ஆதரவு தேடும் பொருட்டாகப் **புதிய கட்சியின் கோட்பாடுகள்** என்னும் மொழிபெயர்ப்பு நூலையும், சூரத் காங்கிரஸ் மகாநாட்டுக்குப் பிரயாணப்பட்ட செய்திகளை விளக்கும் **எங்கள் காங்கிரஸ் யாத்திரை** எனும் வரலாற்றுப் புகழ்பூத்த பிரயாண நூலையும் பாரதியே வெளியீடு செய்தார்.

உள்ளன்பு மிகுதி காரணமாக நூல் பிரசுர முயற்சி களில் ஈடுபட்ட பாரதிக்குத் தொடர்ந்து சென்னையில் அப் பணியில் ஈடுபட முடியாத நிலை தோன்றுகிறது. அச்சமயம் பெயர்போட்டுக் கொள்ளாமல் ஆசிரியராகப் பணியாற்றி வந்த **இந்தியா** பத்திரிகைமீது ராஜத் துரோகக் குற்றத்திற்காகப் பிரிட்டிஷ் அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் பதிவுபெற்ற ஆசிரியர் என்ற முறையில் எம். சீனிவாசன் என்பவர் கைது செய்யப்பட்டார். அதன் தொடர்பாகத் தம்மையும் எப்படியாவது கைதுசெய்ய, அதிகாரிகள் பொய்ச் சாட்சிகள் தயாரிக்க முற்பட்டதை நண்பர்கள் மூலம் அறிந்தார், பாரதி. அதனால், அவர் 1908 செப்டம்பர் முதல் வாரத்தில் புதுச்சேரியை அடைந்து, பிரெஞ்சு ஆட்சியில் அடைக்கலம் புகுந்தார்.

புதுச்சேரி சென்ற பாரதி சும்மா இருக்கவில்லை. பத்திரிகைத் தொழிலைக் கவனித்துக்கொண்டே நூல் பிரசுர முயற்சியிலும் பெரிதும் ஈடுபடலானார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1909ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜன்மபூமி (ஸ்வதேச கீதங்கள்-இரண்டாம் பாகம்) என்ற பாடல் தொகுதியை வெளியீடு செய்தார், பாரதி. இக் கவிதை நூலைத் தொடர்ந்து மேலும் பல நூல்களை நண்பர்களின் ஒத்துழைப்புடன் வெளியாக்கினார்.

இயற்கையின் அழகுகள், தேசத்தின் செய்திகள், மக்களின் மனநடைகள் ஆகியன பற்றிப் பாச் சுவையும், பல்சுவையும் பரவிய கந்தர்வ நடையில் **ஞான ரதம்** என்றொரு கதை நூலைப் பாரதி 1910 ஜனவரியில் வெளியிட்டார். இதன் கதைப் போக்கிலும், நடையழகிலும் சொக்கிப்போன பாவேந்தர் பாரதிதாசன் "ஞான ரதம் போல் ஒரு நூல் எழுதுதற்கு நானிலத்தில் ஆளில்லை" என்றே வருணித்தார்.

'ஞான ரத' வசன காவிய நூலைத் தொடர்ந்து அதே 1910 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் **கனவு** என்னும் காதற் பாடல் நூலும், **ஆறிலொரு பங்கு** என்னும் சமூக சீர்திருத்தச் சிறுகதை நூலும் பாரதியால் வெளியிடப் பட்டன.

புதுச்சேரியில் பிரசுரமான நூல்கள் அவை என்ற போதிலும், பிரிட்டிஷ் அரசால் 1911ஆம் ஆண்டு அக்டோபர் 11ஆம் தேதியன்று மேற்குறித்த இரு நூல்களுக்கும் தடை விதிக்கப்பட்டது.

தம் நூல்கள் தடை செய்யப்பெற்றுங்கூட, பாரதி மனம் சோர்வு அடையாமல், தளர்ச்சியுறாமல், நமது எழுத்துச் சுதந்திரத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற உரிமை உணர்வால் உந்தப்பட்டு, பிரசுர முயற்சியைக் கைவிடாமல் மேற்கொண்டார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதிய காவியம் படைக்கத் திறன் இருந்தும், தாம் வாழ்ந்த காலத்தின் சூழ்நிலைகளை மனத்தில் கொண்டு, வியாசரையும் ஓரளவு வில்லியையும் தழுவி, ஓரிரண்டு வருஷத்து நூற் பழக்கமுள்ள தமிழ் மக்கள் யாவருக்கும் பொருள் விளங்கும்படி எழுதிய பாஞ்சாலி சபதத்தின் முதற் பாகத்தை 1912ஆம் ஆண்டிலே வெளியிட்டார்.

இதன்பின் 1913ஆம் ஆண்டிலே, ஔவைப் பெருமாட்டியின் ஒப்பற்ற நீதி நூல் களஞ்சியமாம் ஆத்திசூடிப் பாணியில், காலதேச வர்த்தமானங்களுக்கு ஏற்பப் படைத்த **புதிய ஆத்திசூடி** நூல் வெளிவந்தது.

1914ஆம் ஆண்டிலே இரண்டு நூற்கள் வெளியாகின்றன. அவற்றில் ஒன்று தென்னாப்பிரிக்காவில் வெளியிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. தென்னாப்பிரிக்காவில் வெளியிடப்பட்ட நூலின் பெயர் **மாதா மணிவாசகம்** என்பதாகும். அந்நூலின் முதற் பக்கத்தில் "ஸ்ரீமத் ஸி. சுப்பிரமணிய பாரதி யவர்களால் டர்பன் சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப் பட்டது" என்ற வாசகம் காணப்படுகிறது.

அக்கால அரசியல் போக்கை விளக்கி, உருவக முறையில் எழுதிய The Fox with the golden Tail என்ற கதை நூலும் வெளியாகி, மிகுந்த பரபரப்பை உண்டாக்கியது.

1914க்குப்பின் மூன்றாண்டுகள் பிரசுர முயற்சியில் தேக்கநிலை காணப்படுகிறது. இந்நிலையில், பாரதியின் முதல் பதிப்பாளராகவும் பதிப்பாசிரியராகவும் 1917லே பரலி சு. நெல்லையப்பர் அறிமுகமாகிறார். பாரதி பாடல்களைக் காது படைத்த மக்களெல்லாம் கேட்க வேண்டும், வாயுள்ள மக்களெல்லாம் பாடி மகிழ வேண்டும் என்ற ஆசைப் பெருக்கால் உந்தப்பட்ட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நெல்லையப்பர் தொடர்ந்தாற்போல **கண்ணன் பாட்டு, நாட்டுப் பாட்டு, பாப்பா பாட்டு, முரசு** ஆகிய நான்கு நூல்களை வெளியீடு செய்தார்.

1918இல் சுதேச மித்திரன் புத்தகசாலைப் பிரிவு பாரதியின் மொழிபெயர்ப்பு நூல்களை வெளியீடு செய்தது. மகாகவி ஸர். ரவீந்திரநாத தாகூர் அருளிய ஐந்து கட்டுரைகளின் தமிழ் மொழிபெயர்ப்பைப் **பஞ்ச வியாஸங்கள்** என்னும் தலைப்பிலும், இந்திய விஞ்ஞானி ஜகதீச சந்திரவஸு செய்தருளிய சொற்பொழிவின் தமிழாக்கத்தை **ஜீவ வாக்கு** என்னும் தலைப்பிலும் வெளியீடு செய்து, பாரதியின் மொழிபெயர்ப்புத் திறனை வெளியுலகம் அறிய வாய்ப்பளித்தது.

1908 முதல் 1914 வரை சொந்தமாகவே நூல்களை நண்பர்களின் துணைகொண்டு பிரசுரம் செய்த பாரதிக்கு 1917இல் பரலி சு. நெல்லையப்பர் பதிப்பாள ராக வாய்த்தும், 1918இல் சுதேச மித்திரன் புத்தக சாலைப் பிரிவு மொழிபெயர்ப்பு நூல்களை வெளியிட்டு இருந்துங்கூடத் தம் நூல்கள் எப்போ தெப்போதோ அத்தி பூத்தாற்போல பிரசுரமாவதைத் தவிர்த்து, தொடர்ந்தாற்போன்று வெளிவரவேண்டும் என்றே ஆசைப்பட்டார்.

வ. ரா. எனப்பெறும் திருப்பழனம் வ. ராமஸ்வாமி அய்யங்கார் என்பார் பாரதியுடன் புதுச்சேரியில் சிறிது காலம் தொடர்பு கொண்டிருந்தார். அவர் பிற்பாடு தமிழகம் திரும்பிவிட்டார். அதுவேளை வ.ரா. அவர்கள் தாம் பாரதி நூல்கள் வெளியீடு தொடர்பாக உதவி செய்வதாக வாக்களித்திருப்பார் போலும்! எனவே, வ.ரா. அளித்த வாக்குறுதிகளை நினைவூட்டி, தம் இளைய ஸோதரர் சி. விசுவநாத ஐயர் அவர்களுக்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1918 ஆகஸ்டு 3ஆம் தேதி பாரதி கடிதம் எழுதி, வ.ரா. அவர்களுடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள் கிறார். பாரதி எழுதிய கடித வாசகங்கள் வருமாறு:

"திருப்பயணம் வி. ராமஸ்வாமி அய்யங்கார் என்னிடம் விநாயகர் ஸ்தோத்திரம் (தமிழ் நூல்) அச்சிட வாங்கிக் கொண்டு போனார். இன்னும் அச்சிட்டனுப்பவில்லை. மேலும், அவர் "பாஞ்சாலி சபதம்" அச்சிடும் சம்பந்தமாகப் பணம் சேகரித்துப் பட்டணத்துக் கனுப்புவதாகச் சொன்னார். அங்ஙனம் அனுப்ப முடியுமானால், உடனே புதுச்சேரியில் எனது விலாசத்துக் கனுப்பும்படி ஏற்பாடு செய். அது மாத்திரமே யன்றி, 'விநாயகர் ஸ்தோத்திரம்' வேலையை விரைவில் முடித்துப் புஸ்தகங்கள் அனுப்பும்படி சொல்லு."

கடிதத்தில் கண்டவாறு வ.ரா. உதவினாரா என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ஆனால், பாரதி தம் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள இரு நூல்களும் 'விநாயகர் ஸ்தோத்திரம்' விநாயகர் நான்மணி மாலை யாகவும், பாஞ்சாலி சபதம்—இரு பாகங்களும் இணைந்த தொகுதியாகவும் பாரதி மரணம் கடந்த பின்னர்தான் வெளியாயின என்பது மனங்கொள்ளத்தக்கது.

சுமார் பத்தாண்டுகள் புதுச்சேரியில் வனவாசம் செய்த பாரதி, தமிழகம் திரும்பும்போது, பிரிட்டிஷ் எல்லையை மிதித்ததும் கைது செய்யப்பட்டு, 21 நாட்கள் சிறைவாசத்திற்குப் பின்னர் சில நிபந்தனை களுக்கு உட்பட்டு விடுதலையும் அடைந்தார்.

அரசு விதித்த கட்டுப்பாடுகளை ஒப்புக்கொண்டு கடலூர் சிறைக் கோட்டத்திலிருந்து விடுதலைபெற்று, நேரே கடையம் சென்றடைந்தார் பாரதி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாம் வெளியிடப்போகும் பிரசுரங்களைப் போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் காட்டி, அவருடைய அனுமதி பெற்றுக்கொண்ட பின்னரே பாரதி பிரசுரம் செய்வதாக ராஜாங்கத்தாரிடம் உறுதிமொழி எழுதிக் கொடுத்தார். அரசுக்கு எழுதிக்கொடுத்த உறுதிமொழி களுள் இதுவும் ஒன்று.

வயிரமுடைய நெஞ்சு வேண்டும் எனப் பாடிய பாரதி, அப்போதைய தம் குடும்பச் சூழல்களையும் மறந்து, தம் நூல்கள் வெளிப்பட வேண்டும் என்பதில் தான் தீவிர கவனம் செலுத்தி வந்தார். அரசுக்குக் கொடுத்த வாக்குறுதி ஒருபுறமிருக்க, தம் நூல்கள் மாசற்றவை என்பதால் அநாவசியமான ஆட்சேபம் கூறி, தம்முடைய நூல்கள் வெளியீட்டு முயற்சிகளை அரசு அதிகாரிகள் தடைசெய்ய முற்படமாட்டார்கள் என்ற நம்பிக்கையுடன் நூல் முயற்சிகளில் ஈடுபட்டார்.

விடுதலைபெற்றுவந்த ஒரு வாரத்திற்குள்—அதாவது 1918 டிசம்பர் 21ஆம் தேதியன்று—தம் முதல் பதிப்பாளர் நெல்லையப்பருக்குத் தம் நூல்கள் பிரசுர மாக வேண்டியதன் அவசர-அவசியத்தை வற்புறுத்திக் கடிதம் எழுதினார். நெல்லையப்பருக்குப் பாரதி எழுதிய கடித விவரம் வருமாறு:

ஓம் சக்தி

கடையம்
21 டிஸம்பர் 1918

ஸ்ரீமான் நெல்லையப்ப பிள்ளைக்கு நமஸ்காரம்.

நான் ஸௌக்யமாகக் கடையத்துக்கு வந்து சேர்ந்தேன். இவ்வூருக்கு வந்த மறுநாள்—பாப்பா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாட்டு, முரசு, நாட்டுப் பாட்டு, கண்ணன் இவை வேண்டுமென்று பலரிடமிருந்து கடிதங்கள் கிடைத்தன.

என்வசம் ஷி புஸ்தகங்கள் இல்லை. உன்னிடம் ஷி புஸ்தகங்களிருந்தால் அனுப்பக்கூடிய தொகை முழுதும் அனுப்பும்படி ப்ரார்த்திக்கிறேன்.

''பாஞ்சாலி சபதம்''—இரண்டு பாகங்களையும் சேர்த்து ஒன்றாக அச்சடிப்பதற்குரிய ஏற்பாடு எதுவரை நடந்திருக்கிறதென்ற விஷயம் தெரிய வில்லை. இனிமேல் சிறிது காலம் வரை நான் ப்ரசுரம் செய்யும் புஸ்தகங்களை போலீஸ் டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரலிடம் காட்டி அவருடைய அனுமதி பெற்றுக்கொண்ட பிறகே ப்ரசுரம் செய்வதாக ராஜாங்கத்தாருக்கு நான் ஒப்பந்தமெழுதிக் கொடுத்திருக்கிறேன்.

ஏற்கெனவே ''பாஞ்சாலி சபதம்'' (முதற் பாகம்) வெளிப்பட்டிருக்கிறபடியாலும், ப்ரசுரம் செய்பவன் நானன்றி நீ யாதலாலும் இதை அச்சிடுமுன் ஷி ஒப்பந்த விதியை அனுஸரித்தல் அவசியமில்லையென்று தோன்றுகிறது.

அப்படியே காண்பித்தாலும் தவறில்லை. நமது நூல் மாசற்றது. டிப்டி இன்ஸ்பெக்டர் ஜெனரல் மிஸ்டர் ஹானிங்டன் எனக்கு மிகவும் அன்புள்ள ஸ்நேஹிதர்; தங்கமான மனுஷ்யன். ஆதலால், அநாவசியமான ஆக்ஷேபங் கற்பித்து, நமது கார்யத்தைத் தடைசெய்யக் கூடியவரல்லர். நீயே ஷி நூலை அவரிடங்காட்டி அனுமதி பெற்றுக் கொள்ளுக. பாப்பா பாட்டு முதலியன உன்னிடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லாவிட்டால், உடனே அவற்றை மீட்டும் ப்ரசுரம் செய்தல் மிகவும் அவஸரம்.

இவை முதலிய எல்லா விஷயங்களைப் பற்றி உன்னிடம் நேரே பேச விரும்புகிறேன். இதன் பொருட்டாக இக் கடிதம் கண்டவுடன் இங்கு நீ நேரே புறப்பட்டு வந்து சேரும்படி வேண்டுகிறேன். ஸ்ரீமான் குவளை க்ருஷ்ணய்யங்கார் முதலிய நம்முடைய நண்பர்களுக்கு என் நமஸ்காரத்தைத் தெரிவிக்கும்படி ப்ரார்த்திக்கிறேன். இன்னும் ப்ரசுரம் செய்ய வேண்டிய நூல்கள் என்னிடம் பல இருக்கின்றன. நான் இப்போது ப்ரிடிஷ் இந்தியாவுக்கு வந்துவிட்டபடியால் நமது ப்ரசுரங் களுக்குப் பணம் கொடுக்கக்கூடிய நண்பர்களும் பலர் இருக்கிறார்கள். உன்னை ஸஹாய புருஷனாகக் கொண்டால் ப்ரசுர கார்யம் தீவிர மாகவும் செம்மையாகவும் நடைபெறுமென்று தோன்றுகிறது.

எதற்கும், நீ உடனே புறப்பட்டு இங்கு வந்து சேரும்படி ப்ரார்த்திக்கிறேன்.

உனக்கு மஹா சக்தி அமரத்தன்மை தருக.

உனதன்புள்ள,
சி. சுப்பிரமணிய பாரதி

பாரதியின் கடிதம் கிடைக்கப்பெற்ற நெல்லையப்பர் கடையத்தில் பாரதியைச் சந்திக்கச் சென்றார். ஆனால், பாரதி எட்டயபுரம் சென்று விட்டதை யறிந்த நெல்லையப்பர், தாமும் உடனே எட்டயபுரம் புறப்பட்டுச் சென்று, பாரதியை அங்குச் சந்தித்துவிடுகிறார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியின் வாக்கை வேத வாக்காகக் கொள்ளும் நெல்லையப்பர் தாம் முன்னம் வெளியிட்ட பாப்பா பாட்டு, முரசு, நாட்டுப் பாட்டு, கண்ணன் பாட்டு ஆகிய நான்கு நூல்களையும் மறுபதிப்பாக 1919லே பிரசுரம் செய்தார். மறுபதிப்பு நாட்டுப் பாட்டு நூலிலே ஒருசில புதிய பாடல்களைச் சேர்த்தார். கண்ணன் பாட்டு நூலிலும் 'கண்ணன் என் அரசன்' என்ற புதிய பாடலைச் சேர்த்ததுடன், வ. வெ. சு. ஐயர் அவர்களிடம் முகவுரை ஒன்றையும் பெற்றுப் பதிப்பித்து வெளியிட்டார். ஆனால், எந்தவொரு புதிய நூலையும் நெல்லையப்பர் பதிப்பிக்கவில்லை என்பது மனங்கொள்ளத்தக்க செய்தியாகும்.

இதனிடையில், இதே 1919ஆம் ஆண்டு, இந்திய தேசியக் காங்கிரஸ் மகா சபையானது பல்வேறு இடங்களில் கூடி நிறைவேற்றிய தீர்மானங்களையும், தலைவர்களின் சொற்பொழிவுச் சுருக்கங்களையும் தொகுத்துத் தமிழாக்கம் செய்ததைப் பாரத ஜன சபை (காங்கிரஸ் மகா சபையின் சரித்திரம்—முதல் பாகம்) என்ற பெயரில் சுதேச மித்திரன் புத்தகசாலைப் பிரிவு வெளியிட்டது.

மறுபதிப்பு நூல்களும், புதிய நூலும் பாரதிக்குப் புதிய தெம்பை அளித்திருக்க வேண்டும். அதனால் உற்சாகம் கொண்ட பாரதி, தம்முடைய செட்டிநாட்டு நண்பர் கானாடுகாத்தான் வயி.சு. ஷண்முகம் செட்டியாருடைய ஒத்துழைப்புடன் நூல்களை வெளியிட எண்ணங்கொண்டார். முதலில் பகவத்கீதை, பாஞ்சாலி சபதம் ஆகிய இரண்டு நூற்களை வெளியிடவே ஆசைப்பட்டார். இதன் தொடர்பாகச் செட்டியாருக்கு 1919 நவம்பர் 15 ஆம் தேதி பாரதி எழுதிய கடிதம் பின்வருமாறு :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீமான் வபி.சு. ஷண்முகம் செட்டியாருக்கு ஆசீர்வாதம். பகவத் கீதையை அச்சுக்கு விரைவில் கொடுங்கள். தங்களுக்கு இஷ்டமானால், அதற்கு நீண்ட விளக்கம் எழுதி யனுப்புகிறேன். நீண்ட முகவுரையும் எழுதுகிறேன்.

கீதைக்கு - புஸ்தக விலை ரூ. 1க்குக் குறைத்து வைக்க வேண்டாம். தடித்த காயிதம்; நேர்த்தி யான அச்சு; பெரிய எழுத்து; இட விஸ்தாரம் - இவை கீதைக்கு மட்டுமே யன்றி நாம் அச்சிடப் போகும் புஸ்தகங்கள் எல்லாவற்றுக்கும் அவசியம்.

ஆங்கிலக் கவிகள், ஆசிரியரின் காவியங்களும் கதைகளும் இங்கிலாந்தில் எப்படி அச்சிடப்படு கின்றனவோ, அப்படியே நம் நூல்களை இங்கு அச்சிட முயலவேண்டும். அங்ஙனம் அச்சிட ஒரு ரூபாய் போதாதென்று அச்சுக்கூடத்தார் அபிப்பி ராயங் கொடுக்கும் பக்ஷத்தில் புஸ்தக விலையை உயர்த்துவதில் எனக்கு யாதோர் ஆக்ஷேபமுமில்லை.

'பாஞ்சாலி சபத'த்துக்கு முகவுரை (இரண்டாம் பதிப்புக்கு) இன்னும் சில நாட்களில் அனுப்பு கிறேன்.

தம்பி, இந்தப் "பாஞ்சாலி சபதம்" இரண்டாம் பாகம் கையெழுத்துப் பிரதி அனுப்பியிருப்பதைச் சோம்பலின்றி தயவுசெய்து ஒருமுறை முற்றிலும் படித்துப் பாருங்கள். பிறகு அதை மிகவும் ஆச்சரிய மாகவும் அழகாகவும் அச்சிடுதல் அவசியமென்பது தங்களுக்கே விசதமாகும்.

புதுச்சேரியில் (பாடிய) பாட்டுக்கள் அனைத் தையும் இங்கு குழந்தை தங்கம்மா தன்னுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோட் புக்குகளில் எழுதி வைத்திருக்கக் கண்டு, அதைப் புதையல்போல் எடுத்து வைத்திருக்கிறேன்!

மேலே கண்ட கடிதம் பாரதியின் திறமான - தரமான பிரசுரத் திட்டத்தைப் படம்பிடித்துக் காட்டுகின்றது. சொல்லப்போனால், பாரதியார் தம் நூல்கள் வெளிப்படுவதில் மட்டும் ஆர்வம் காட்டவில்லை. வெளிப்படும் நூல்கள் எந்த முறையில் அமையவேண்டும் என்பதிலும் மிகுந்த அக்கறை காட்டினார். ஆம்; மேனாடுகளில் எப்படி நூல்கள் அச்சிடப்படுகின்றனவோ அம்மாதிரியே இங்கும் தம்முடைய நூல்கள் அச்சிடப்பட வேண்டும் என்றே பாரதி பெரிதும் விரும்பினார். பாரதி எதிர்பார்த்தவண்ணம் இதுவேளை பகவத் கீதை, பாஞ்சாலி சபதம் (முதல் பாகம் -இரண்டாம் பதிப்பு) நூல்கள் பிரசுரமாகவில்லை.

தாம் எதிர்பார்த்து நம்பிய நண்பர்களின் உதவி உரிய காலத்தில் கிடைக்காத நிலையிலும், பாரதி தம் நூல் பிரசுர முயற்சிகளைக் கைவிட்டாரல்லர். புதுச்சேரியிலிருந்து தாம் கொண்டு வந்திருந்த கைப் பிரதிகளை யெல்லாம் ஒழுங்குபடுத்துவதிலும், அவற்றை வரிசைப்படுத்துவதிலும் மிகத் தீவிரமாகத் தொழிற் பட்டார். இதையே வேறுவகையில் சொல்வதானால், எதைப்பற்றியும் கவலைப்படாமல், தம் நூல்கள் பிரசுரமாக வேண்டும் என்ற அதே கவலையாக - கனவாக - துடிப்பாக இருந்தார் எனலாம்.

தம்முடைய படைப்புச் செல்வங்களை நாற்பது புத்தகங்களாகப் பிரித்து, ஒவ்வொரு புத்தகத்திலும் 10,000 பிரதிகள் மிக நேர்த்தியான முறையில் அச்சு, அமைப்பு ஆகிய எல்லாவற்றிலும் அமெரிக்க முறையைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்பற்றப் போவதாகவும், கவர்ச்சிகரமாகவும் அதே சமயத்தில் அழகான படங்களுடன் அச்சிடப் போவ தாகவும், நூல்களை மலிவான விலையில் விற்பனை செய்யத் திட்டமிட்டிருப்பதாகவும், செலவு வகைகளுக் காக முடிந்த மட்டில் ஒரு தொகையைக் கடனாக அனுப்பித் தருமாறும், கடன் தொகைகளுக்கு ஸ்டாம்பு ஒட்டின 'புரோநோட்' எழுதிக் கொடுப்பதாகவும் ஓர் சுற்றறிக்கையைத் தயாரித்து 1920 ஜூன் மாதத்தி லிருந்து தம் நண்பர்களுக்கும் இலக்கிய அன்பர்களுக்கும் தேசியவாதிகளுக்கும் அனுப்பிவைத்தார்.

மேற்குறித்த சுற்றறிக்கையினால் யாதொரு பயனும் விளைந்ததாகத் தெரியவில்லை. என்றாலும், இச் சுற்றறிக்கை வெளியான சமயத்தில், சுதேச மித்திரன் புத்தகசாலைப் பிரிவு **பாரத ஜன சபையின் இரண்டாம் பாகத்தை** வெளியிட்டது.

தம்முடைய நூல் பிரசுரத் திட்டத்தில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படாத நிலையில், திரும்பவும் சுதேச மித்திரனில் உதவியாசிரியராகப் பணியாற்றப் பாரதி சேர்ந்து விட்டார்.

சுதேச மித்திரனில் பணியாற்றிய சமயத்திலும், தமது நூல்கள் பதிப்பிக்கும் பணிகள் தொடர்பாக முன்னிலும் தீவிரமாக ஆர்வம் காட்டினார், பாரதி. தம்முடைய நூல் பிரசுரத் திட்ட முறைகளை விளக்கி மீண்டும் மீண்டும் கடிதங்களைத் தம் நண்பர்களுக்கு எழுதியே வந்தார். சென்னை தமிழ் வளர்ப்புப் பண்ணையின் செயலாளர் ஒரு நீண்ட அறிக்கை தயாரித்து, பாரதியின் நூல் பிரசுரத் திட்டத்திற்கு ஆதரவு திரட்ட முனைந்தார். அவ்வறிக்கை பாரதியின் புகழைப் பூமண்டலம் நிறைந்த கீர்த்தியாக வருணித்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விட்டு, ''இங்ஙனம் கீர்த்தி வாய்ந்த கவியரசர் ஒருவர் தமிழ் நாட்டில் இருப்பது நமக்கெல்லாம் சால மிகப் பெருமை யன்றோ? இவர் தமிழ் நாட்டையும் தமிழ்ப் பாஷையையும் மேம்படுத்தியதற்கு நாம் என்ன கைம்மாறு செய்யப் போகிறோம்?'' என்ற வினாவை எழுப்பி, பாரதியின் நூல் முயற்சிகளுக்குப் பொருள் கொடுத்து, எக்காலத்திலும் அழியாத புண்ணியம் அடையும்படி வேண்டுகோள் விடுத்தது.

தமிழ் வளர்ப்புப் பண்ணையின் அறிக்கையையும் இணைத்து, தமக்கு நன்கு அறிமுகமானவர்களுக் கெல்லாம் கடிதம் எழுதினார், பாரதி. ஈரோட்டைச் சார்ந்த கருங்கல் பாளைய நண்பர் - தேச பக்தர்-பிரபல வக்கீல் தங்கப் பெருமாள் பிள்ளைக்கு எழுதிய கடிதத்தில், பாரதி, தம் நூல்கள் அச்சாகி வெளிவந்தால், உலக இலக்கியத்தில் தமிழ் இலக்கியத்தின் மதிப்பு உயரும் என்றும், இதன் விளைவாக மானிட சமுதாயத்தின் கண்ணோட்டத்தில் தமிழ் இனத்தின் பெருமையும் பெருகும் என்றும், உண்மையில் கவியரசர் தாகூருடைய நூல்கள் வங்க நாட்டிற்கு எத்தகைய உயர்வினையும் சிறப்பினையும் அளித்தனவோ, அத்தகைய உயர்வையும் சிறப்பையும் தம்முடைய தமிழ் நூல்கள் அளிக்கும் என்றும், தம்முடைய நூல்கள் அச்சிடும் பணி தேசியத் திருப்பணி என்றும் குறித்திருந்தார்.

இவ்வாறு பல்வேறு காலப் பகுதிகளில் பாரதி மிகத் தீவிரமாகவும், அதே வேளையில் ஆசையாகவும் மேற்கொண்ட முயற்சிகள் யாவும் பயனளிக்கவில்லை. பாரதி முயற்சியின் பலனாக எந்த வொரு நூலுமே பிரசுரமாக வில்லை. ஆனால் 1920 நவம்பரில் சுதேச மித்திரன் புத்தக சாலைப் பிரிவு **கதாமாலிகா** எனும் பெயரில் சிறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கதைகளும், கட்டுரைகளும் அடங்கிய நூல் தொகுதியை வெளியீடு செய்தது. பாரதியின் காலத்தில் வெளியான இறுதி நூல் இதுவே யாகும்.

பாரதியின் எதிர்பார்ப்புகளும், ஆசைத் திட்டங் களும் மக்களின் போதிய ஆதரவின்மை காரணமாக நிறைவேறவில்லை.

நாற்பது புத்தகங்களை மிக நேர்த்தியாக, மலிவான விலையில் வெளியிடத் திட்டம் வகுத்த பாரதி, சிறு பிரசுரத்தையும் சேர்த்து மொத்தம் இருபத்தொரு நூல்களை மட்டுமே கண்ணில் கண்டார்.

ஒவ்வொரு நூலிலும் 10,000 பிரதிகள் அச்சிட உத்தேசித்த பாரதியால் ஒருசில ஆயிரம் பிரதிகளையே அச்சில் காணமுடிந்தது.

சரித்திர பூர்வமான பாரதியின் நூல்கள் தமிழ் நாட்டின் புனருத்தாரணத்துக்கு மிகவும் தேவை என ஆசைப்பட்டவர்களின் ஆசையும் நிராசையானது.

வாழும் காலத்திலேயே நிகரில்லாத கீர்த்தி பெற்றிருந்த மகாகவியின் நூல் வெளியீட்டு முயற்சிகள் வெற்றி பெறவில்லை.

தம் நூல் முயற்சிகள் நிறைவேறாத நிலையிலே 1921 செப்டம்பர் 11ஆம் தேதி பாரதி மரணத்தைக் கடந்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி காலத்துக்குப் பின்
அவர் மனைவியின் முயற்சிகள்

மறைத்தும் தற்புகழ்ச்சிப் பாராட்டுதல்களை விரும்பாத மகாகவி பாரதி, மரணத்தைக் கடந்ததும், நாடெங்கும் அனுதாபக் கூட்டங்களும், அஞ்சலிக் கூட்டங்களும் நடைபெற்றன. தேசபக்த தலைவர்கள் இரங்கற் செய்திகளால், அந்தக் கவிஞரிடம் தாங்கள் கொண்டிருந்த மரியாதையைப் புலப்படுத்திக் கொண்டார்கள். மரியாதை தெரிவிக்கும் விதத்தில் **திரு. எஸ். சத்தியமூர்த்தி** அவர்கள் விடுத்த இரங்கற் செய்தியில்,

> ''அவருடைய குடும்பம் நிர்க்கதியா யிருப்பது பலருக்குத் தெரியும். தமிழ்நாடு அதைச் சகித்திருக்கக் கூடாது. அவருடைய கவிகளை அச்சிட்டு விற்று, பெரிய நிதி சேர்த்து, அவரது மனைவி மக்களைக் காப்பாற்ற நாம் கடமைப் பட்டிருக்கிறோம்''

என்று குறிப்பிட்டிருந்தார்.

சத்தியமூர்த்தி அவர்கள் தம் மனத்தில் எழுந்த ஆவலைக் கோரிக்கையாக வெளிப்படுத்தினார். மற்றவர்களும் சத்தியமூர்த்தி அவர்களின் சத்தியக் குரலையே எதிரொலித்தனர்.

கொடியாலம் வி. ரங்கசாமி அய்யங்கார் *28-10-1921*இல் 'ஹிந்து' பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில்,

> ''மகா கவிஞரும், தேசபக்தருமான சுப்பிரமணிய பாரதி இளம் வயதில் மரணமடைந்த துக்கச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்தியால், தமிழ்நாட்டிற்கு ஈடுசெய்ய இயலாத ஒரு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. அவர் பாரதமாதா மீதும் பாரத மக்கள் மீதும் தாம் கொண்டிருந்த ஆழ்ந்த ஈடுபாட்டைத் தம் கவிதா சக்தியால் வெளிப்படுத்தினார்...........அன்னார் நினைவைப் பேணவேண்டியது நாட்டுமக்களின் கடமையாகும்.

அவரது கவிதைகள் நீடு வாழட்டும். அவரது உறவினர்கள் எவராவது, அவருடைய கவிதைகளை ஒன்றுதிரட்டிப் பதிப்பிப்பார்களா?"

என்று வினாத்தொடுத்து பாரதியின் நூல்கள் வெளிப்பட வேண்டுவதன் அவசியத்தைப் புலப்படுத்தினார்.

தேசீயவாதிகளின் பயனுள்ள வேண்டுகோள் வீண் போகவில்லை; செயல் வடிவம் கொண்டது.

மகாகவியின் காரியங்கள் யாவினுக்கும் கை கொடுத்த செல்லம்மா அவர்களே, அவரின் படைப்புக்களை நூல் வடிவம் ஆக்கும் முயற்சியிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

பாரதி மரணம் கடந்த அதே 1921 செப்டம்பர் மாத இறுதிக்குள்ளாகவே, பாரதியின் நூல்களை வெளியிடும் பணிகளுக்கான ஆரம்ப கட்ட முயற்சிகளில் ஈடுபட்டார், செல்லம்மா. 1921 செப்டம்பர் 30ஆம் தேதிய **நவசக்தி** இதழில் செல்லம்மா வெளியிட்ட அறிக்கையைப் பாருங்கள் :

" 'தேசாபிமானப் பெருங்கவி'யான எனது அரிய கணவர் ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியாரின் அகால மரணத்தைக் குறித்து, எனக்குப் பல வகைகளில் அனுதாபம் காட்டிய எண்ணிறந்த நண்பர்களுக்குப் பகிரங்கமாக நன்றி கூறுவதற்காக

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான் இந்தக் கடிதத்தை எழுதலானேன். தமிழ் நாட்டிலுள்ள பல சங்கத்தார்களும், சபையார்களும், நண்பர்களும் என்பால் அனுதாபம் காட்டிக் கடிதங்கள் அனுப்பி யிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் தனித்தனிக் கடிதம் எழுதுவதற்கு, நான் தற்சமயம் இயலாதவளா யிருக்கிறேன். எனவே, இப் பத்திரிகை வாயிலாக அவர்கள் அனைவருக்கும் எனது நன்றியை அறிவித்துக் கொள்கிறேன்.

பாரதியார் எனக்குப் பெரிய ஆஸ்தியாக வைத்து விட்டுப் போயிருப்பது அவரது அரிய பாடல்களும், வசன காவியங்களுமே யாம். அவற்றை யெல்லாம் அச்சிட்டு வெளியிடுவதற் குரிய ஏற்பாடுகளை நானும், எனது நண்பர்களும் செய்து வருகிறோம். இந்த முயற்சியில் எனக்குப் பொருள் உதவி புரிவதாகச் சில நண்பர்கள் முன் வந்திருக்கிறார்கள். பாரதியாரின் நூல்களை அச்சிட்டு வெளியிடுவதற்கு நிதி சேர்க்குமாறு அங்கங்கே சில இடங்களில் பஞ்சாயத்துகள் (கமிட்டி) ஏற்பட்டிருப்பதாகவும் அறிகிறேன். எனவே, இந்த விஷயத்தில் எனக்கு உதவி செய்ய விரும்புவோ ரெல்லாம் அடியிற் கண்ட எனது விலாஸத்திற்குத் தங்கள் உதவிகளைத் தாமதமின்றி அனுப்ப வேண்டுகிறேன். எனக்கு உதவி செய்ய முடியாதவர்கள், தங்களால் இயன்ற சிறு தொகையை அனுப்பினால், புஸ்தகம் வெளியானவுடன், அந்தத் தொகைக்குரிய புஸ்தகங்களை அனுப்பச் சித்தமா யிருக்கிறேன். (பாரதியார் பாடல்கள் அடங்கிய முதல் பகுதி நவம்பர் மாத இறுதிக்குள் வெளிவரும்) இவ் விஷயத்தில் எனக்கு எவ்வளவு சிறிய உதவி செய்பவர்களும், எனது குடும்பத்திற்கு உதவி செய்பவர்கள் மட்டுமல்ல—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தமிழ் நாட்டிற்குப் புத்துயிர் அளிக்கக் கூடிய' பாரதியாரின் அரிய பாடல்களும், பிறவும் உலகத்தில் வெளிவரச் செய்யும் பெரிய முயற்சிக்குத் துணை புரிபவர்களும் ஆ வ ா ர் க ள். தாய் வாழ்க. வந்தேமாதரம்.

இங்ஙனம்
செல்லம்மாள்

67, துளசிங்க பெருமாள் கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை.

செல்லம்மா அம்மையார் விடுத்த அறிக்கையை வெளியிட்ட தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் அந்த அறிக்கையை வெளியிட்டதோடு தம் பணி முடிந்துவிட்ட தென்றோ—அறிக்கையை வெளியிட்டதே பெரிய பணி யென்றோ எண்ணவில்லை; அதே இதழில் **காலஞ்சென்ற பாரதியாரின் நூல்கள்** என்று துணைத் தலையங்கம் ஒன்றையும் வரைந்து பெருமைப் படுத்தினார். அத் துணைத் தலையங்கத்தில் பாரதி நூல்கள் பிரசுர முயற்சிக்குத் தமிழ் மக்கள் ஆதரவு நல்க வேண்டியதன் அவசியத்தைத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. அவர்கள் வற்புறுத்தினார்.

"தென்னாட்டுத் தாகூரெனப் போற்றப்பட்டு வந்த ஸ்ரீமான் சி. சுப்பிரமணிய பாரதியின் மனைவியார் நமக்கு அனுப்பியுள்ள ஒரு நிருபத்தை மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கிறோம். காலஞ் சென்ற பாரதியாரின் பாடல்களும் வசனங்களும் ஒழுங்காக வெளியிட முயற்சி செய்யப்படுகிறது என்பதை யறிந்து நாம் பெரிதும் சந்தோஷிக் கிறோம். இதற்காகப் பொருளுதவி செய்யும்படி தமிழ் நாட்டாரை ஸ்ரீமான் பாரதியாரின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவியார் கேட்கிறார். இவ் வேண்டுகோளுக்குத் தமிழ்நாட்டார் எவ்விதத்திலும் பின் வாங்க மாட்டார் என்று நம்புகிறோம். ஸ்ரீமான் பாரதியார் ஐரோப்பாவிலேனும் அமெரிக்காவிலேனும் பிறந்திருப்பாராயின் அவருக்கு இதுகாலை எத்தனை ஞாபகச் சின்னங்கள் ஏற்படுத்தப்பட் டிருக்கும் என்பதை நாம் கூற வேண்டுவதில்லை. தமிழ்நாட்டாரிடமிருந்து அவ்வளவு பெரிய நன்றியறிதலை நாம் எதிர்பார்க்கவில்லை யாயினும், அவருடைய நூல்கள் நல்ல முறையில் வெளிவருதற்கேனும் போதிய துணை புரிவார்கள் என்று நம்புகிறோம்''

என்று திரு. வி. க. அவர்கள் தம் துணைத் தலையங்கத்தில் குறிப்பிட்டு இருந்தார்.

பாரதியாருடைய நூல்கள் நல்ல முறையில் வெளிவர ஓரளவு மக்கள் துணைபுரிந்தார்கள். ரங்கூன்வாழ் தமிழ் மக்களும் போதிய ஆதரவு அளித்தனர். திலகர் சுயராஜ்ஜிய நிதியிலிருந்தும் கணிசமான தொகை கிடைத்தது. இத்தகைய நிதி உதவிகளைக் கொண்டு, பாரதியின் மனைவி செல்லம்மா அம்மையார் தம் சகோதரர் அப்பாதுரை என்பாரின் துணையுடன் சென்னைத் திருவல்லிக்கேணியில் **பாரதி ஆச்ரமம்** என்ற பெயரால் பிரசுர நிலையத்தைத் தொடங்கினார்.

முதல் கட்டமாக, 1922 ஜனவரியில் **சுதேச கீதங்கள்** என்ற தலைப்பெயரால், பாரதியின் பாடல்கள் கொண்ட முதலிரு தொகுதிகள் வெளியிடப்பட்டன. அதுவேளை, பாரதியின் நூல் வரிசையில் அவருடைய நூல்கள் முழுமையும் பன்னிரண்டு பகுதிகளாக வெளிவரும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

1922இல் **பாரதி ஆச்ரமம்** விடுத்த அறிக்கையில் குறித்திருந்த நூல்கள் விவரமாவது:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. சுதேச கீதங்கள் (முதற் பாகம்)
2. சுதேச கீதங்கள் (இரண்டாம் பாகம்)
3. குயில் பாட்டு—கண்ணன் பாட்டு—பாரதி 66
4. பாஞ்சாலி சபதம்
5. ஞான ரதம்
6. வேதரிஷிகளின் கவிதை வேதப் பொருள் (காட்சி)
7. பகவத் கீதை
   (அரிய பெரிய முகவுரையுடன்)
8. பதஞ்சலி யோக ஸூத்ரம்
9. சந்திரிகையின் கதை
10. கதைக் கொத்து
11, 12. வியாசங்கள்

ஒவ்வொன்றுக்கும் விலை ரூபாய் ஒன்று.

பாரதி ஆச்ரமத்தின் பிரசுர அறிக்கை திட்டமிட்ட வகையில் பாரதி நூல் தொகுதிகள் வெளிவரும் என்ற நம்பிக்கையை ஊட்டியது. முதலிரு தொகுதிகளும் நல்ல முறையில் அமைந்திருந்தன. இந்த நூல் தொகுதி களுக்குப் பத்திரிகை உலகில் நல்ல வரவேற்பு இருந்தது. நவசக்தி, தன வைசிய ஊழியன், ஹிந்து போன்ற இன்னபிற பத்திரிகைகள் புதிய நூல் தொகுதிகளை வெகுவாகப் பாராட்டி மதிப்புரைகளும் வரைந் திருந்தன.

நூல்கள் பற்றிய மதிப்புரைகளாக மட்டுமாக அவை அமையவில்லை. பாரதி பற்றியும், அவர் ஊட்டிய தேசபக்தி திறம் பற்றியும் நூல் மதிப்புரைகளில் குறிப்பிடப்பட்டிருந்தன. அவசியங் கருதி நவசக்தி, தன வைசிய ஊழியன், ஹிந்து ஆகிய இதழ்களின் மதிப்புரைகளைக் காண்போம்;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுதேச கீதங்கள்—முதற் பாகம்

ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியார் இயற்றிய சுதேச கீதங்களின் முதற்பாகம் இப்பொழுது, அவரது மனைவியாரால் வெளியிடப்பட்டிருக்கிறது. பாரதியாரைப் பற்றியும், அவர் தம் பாடல்களைப் பற்றியும் புதிதாக நாம் ஒன்றும் தமிழ்நாட்டுக்கு அறிவுறுத்த வேண்டுவதில்லை. பாரதியார் பாடல்கள் அவர் காலத்திலேயே தமிழ் மக்கள் நாவை மணந்தன. பாரதியாரின் இயற்கைப் புலமையினின்றும் திரண்டெழுந்த பாக்கள், தமிழ் நாட்டுக்குப் புத்துயிரளித்து வருவதைக் கண்டு மகிழாதாரில்லை. பாரதியாரின் பாடல்கள் அஃறிணைப் பொருளுக்கும் தேச பக்தியையும் வீர ரசத்தையும் ஊட்டுவனவாம். பாரதியார், சரித மெழுதப் புகுந்த அவரது நண்பர் ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார், "தமிழர் மறந்தாலும் தமிழ் மறவாத இப் புலவர் பெருமான் பாக்கள்" என்று பாரதியார் பாடல்களை வருணித்திருப்பது கவனிக்கத்தக்கது. மேலும் சோம சுந்தர பாரதியார் தந் நண்பராங் கவிஞர் திறத்தைக் கீழ்வரும் உரைகளால் போற்றி யிருக்கிறார். அவ் வுரைகள் வருமாறு:

"பாரதியார் ஏனைப் புலவர் போலாது, புது முறைகளையே சிருட்டித்தார். தமிழ் மொழியில் பாக்களும் பாவினங்களும் மலிந்து கிடந்தும், அவைகளை விட்டுப் புதுக் கருத்துக்களும், புதிய உணர்ச்சிகளும் மலிந்து விளங்க, அவைகளுக்குப் பொருத்தமான புதிய நடைகளையும் புதிய யாப்புக்களையும் உண்டுபண்ணி யிருக்கிறார். அநாயாசமாய் இயற்கை யியல்புகளி லிருந்து

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உருவகங்கள் உண்டுபண்ணிக் கையாளுவதும், எளிய உவமைகளால் பெரிய விஷயங்களை விளக்கத் துணியும் தனித்திறலும் முன்னைய புலவரிடத் தில்லாத இவரது அரிய குணங்கள். வாய்மை, வீரம், பெண்களைப் பேணல், எளியாரை ஏற்றல், ஓரமில்லா ஒற்றுமை யுணர்ச்சி, சுதந்திரம் முதலிய இவர் பாராட்டிப் பாடிய பல குணங்களும் இவர்க்கு இயல்பானவை. இவை யெல்லாம் இவர் பாக்களில் இனிது காணலாம். இவரது 'கண்ணன் பாட்'டையும், 'பாஞ்சாலி சபத'த் தையும் படித்தவர்களுக்கு, இவரது குணங்களும் திறமையும் விசதமாகும். இவரை உள்ளபடி அறிய விரும்புவோர்க்கு இவர் கவிகளைவிடச் சிறந்த கருவி கிடையாது. ஆதலால், இவர் நூல் களைப் படித்து, நடுநிலையில் சிந்திப்பார்க்கு உள்ளத் தனைய திவர் உயர்வு என்பது தெளி வாகும்.''

இம் மொழிகளினுஞ் சிறந்த மொழிகள் வழங்கிப் பாரதியார் பாக்களை வருணிக்க எமக்கு வேறு மொழிகள் கிடைக்கவில்லை. இந் நூல் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் செல்லம்மா, பாரதி ஆச்ரமம், திருவல்லிக்கேணி, சென்னை என்னும் விலாசத்துக் கெழுதுக.''

(நவசக்தி : 27.1.1922-பக்.5)

சுதேச கீதங்கள் (இரண்டாம் பாகம்)

பாக்கள் மூலமாகத் தமிழ் நாட்டிற்குப் புத்துயிர் அளித்த ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதி-யாருடைய நூல்களின் இரண்டாம் பகுதியில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதுகாறும் தமிழ் நாட்டாருக்குத் தெரியாத பல பாடல்கள் மிளிர்கின்றன. பாரதியார் சில புதிய துறைகளில் இறங்கி, இன்ப மாரியைப் பொழிந் திருக்கிறா ரென்பது இரண்டாம் பகுதியில் காணப் படும் சில பாக்களால் புலனாகும். இப் பகுதியின் முதலில் காணப்படும் "பாரத மாதா" என்ற மகுடமிட்ட செய்யுள் எம் உள்ளத்தைக் கவர்ந்து விட்டது. இத்தகைய பாடல்கள் தமிழர் ஒவ்வொரு-வருடைய வீட்டிலும் கேட்கும்படியாகச் செய்ய வேண்டும். இன்பத் துறையில் பாடுவது மிகவும் கஷ்டம். மிகவும் உயர்ந்த நிலைமையிலிருந்து அவர் காதலைப்பற்றி வருணித்திருக்கின்றார். 'கோமதி மகிமை' என்ற பாடலானது முற்றுப் பெறாமல் போனது குறித்து எவரும் இரங்காம லிரார். இப் பகுதியில் காணப்படும் கரும்புத் தோட்டக் கூலிகள் பாட்டு, மறவர் பாட்டு முதலியவற்றின் பெருமையை எம்மால் அளந்துரைக்க முடியாது. பாரதியாரின் நூல்களை மாதத்திற் கொன்றாக வெளியிட்டு, தமிழ் நாட்டாருடைய ஆவலை அதன் பிரசுரகர்த்தர் விரைவில் தீர்ப்பர் என நம்புகிறோம்.

(நவசக்தி : 28.4.1922-பக்.2)

பாரதியாரின் சுதேச கீதங்கள் (1922)

இப்பெயர் கொண்ட நமது பாரதியாரின் நூலொன்று (இரண்டாம் பாகம்) நமது பார்வைக்கு வரப்பெற்றோம்.

புத்தகத்தைப் படிக்க ஆரம்பித்த பொழுது அப் புத்தகத்தில் முதலாவதாக இணைக்கப்பட்டுள்ள **பாரத மாதா** என்ற தலைப்பின் கீழுள்ள அடியிற் கண்ட பாக்கள் எம்மை யாட்கொண்டு விட்டன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"முன்னை யிலங்கை அரக்கர் அழிய
முடித்த வில் யாருடை வில்?—எங்கள்
அன்னை பயங்கரி பாரத தேவிநல்
ஆரிய ராணியின் வில்.

இந்திர சித்தன் இரண்டு துண்டாக
எடுத்த வில் யாருடை வில்?—எங்கள்
மந்திரத் தெய்வதம் பாரத ராணி
வயிரவி தன்னுடை வில்."

இவ் வீரப் பாடல்களையும் இவைபோன்ற அந் நூலிலமைந்து கிடக்கும் பிற பாடல்களையும் பார்த்த வளவில் சாகப்போகும் தறுவாயிலுள்ளவர் களும் வீரங்கொண்டு எழுந்து விடுவார்க ளென்பதை யாரே மறுக்க முடியும்?

கண்டெடுத்துக் காட்டிய பாடல்களைப் படித்த சில நேரங்களில் இக் கவியும் மாண்டனரே என்ற பெருந் துக்கம் எமக்குண்டாயிற்று. சி. சுப்பிரமணிய பாரதியாரை நாம் நேரில் மிக நன்றாக வறிவோம். அவர் பாடிய பாக்களை அவர் திருவாயாற் பாடக் கேட்டு மிருக்கின்றோ மாதலின், இப் பாடல்களை அவர் வாயாற் பாடக் கேட்கும் பாக்கியத்தைப் பெற்றோ மில்லையே என்ற எண்ணம் எமக் குண்டாயிற்று.

நமது பாரதியாரின் நூலைப் படிக்குந்தொறும், படிக்குந்தொறும் அவரது பிரிவாற்றாமையே எமக்கு உண்டாயிற்று. நமது கவி பால்யத்தில் இவ் வுலகை நீத்து விட்டார்.

நமது பாரதியார், கொஞ்ச காலம் இவ்வுலகி லிருந்து தேசத்திற்கு அவர் பாடிய பாக்களை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அடிக்கடி பாடிக்கொண்டிருந்தாற் போதும். அவர் பாடக்கேட்கும் எல்லோரும் வீறு கொண்டெழுந்து விடுவார்கள். இனி யதைப் பேசி என்ன பயன்? 'ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ?'

இப் புத்தகத்திலுள்ள பாடல்கள னைத்தும் பொன்னேபோற் போற்றத் தக்கனவே யாகும். அவற்றிற் பெரும் பகுதி வீரப் பாடல்களாகவே விளங்குகின்றன. தேசாபிமான மென்பதே அடியோடு யில்லாத ஒருவர்கூட அவர்தம் பாடல் களைப் படிப்பாரானால், பெரிய தேசாபிமானியாக ஆகிவிடுவா ரென்பதிலைய மின்று. அவர்தம் புத்தகங்களை வாங்கிப் படிக்க வேண்டுவது உண்மைத் தமிழன் ஒவ்வொருவருக்கும் இன்றி யமையாக் கடனாகும்.

நாம் அவைகளை வாங்கி ஆதரிப்பதிலிருந்தே, உள்ளிருக்கும் அவருடைய அருமையான இன்னும் பல பாடல்களும், வசனங்களும் வெளிவர வேண்டி யிருத்தலின், கொஞ்சமும் தாமதியாது, நாம் ஒவ்வொருவரும் அவைகளை வாங்க வேண்டும். சுருங்கச் சொல்லுமிடத்து, நமது சந்தாதாரர்கள் ஒவ்வொருவரும் இதனை வாங்கியே தீர வேண்டு மென்று நாம் கூறுவது மிகையாகாது. இதன் விலை ரூபாய் ஒன்று. "செல்லம்மா, பாரதி யாச்சிரமம், திருவல்லிக்கேணி, சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெற்றுக் கொள்க.

(தனவைசிய ஊழியன் : 7.4.1922)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Sri Bharati's National Songs Vol. ii

We have received the Second Vol. of Sri Subramania Bharati's national songs which run to over 150 pages and contains about 80 songs on national and devotional topics. The book begins with a song in praise of Sri Bharata Mata, followed by others on the greatness of Lokamanaya Tilak, Mahatma Gandhi, National Culture and Tamil language. The song on the sufferings of Indian women in Fiji which sung by Mr. Bharati has brought tears from the eyes of many a Tamil audience is contained in this volume. The religious songs sing of the greatness and doings of some of the favourite Hindu Gods and Goddesses. The value of the volume is also enhanced by the well-thought out appreciation of the Poet's greatness as a genius by Sriman S Srinivasa Iyengar and an interesting sketch of the Political life of the poet by his companion and Co-worker Mr. V. Chakkarai. The Printing and getup of the volume are excellent.

(The Hindu: 15.4.1922)

பத்திரிகைகள் பாராட்டி எழுதிய போதிலும், நூல் வெளியீட்டிற்கு நண்பர்கள் ஒத்துழைப்பு இருந்தும் எதிர்பார்த்த அளவு நூல்களின் விற்பனை இல்லை. அதனால் மேற்கொண்டு நூல்கள் பிரசுரமாவது தடைப் பட்டது. பன்னிரண்டு நூல்கள் வெளியிடப்போவதாக அறிவிப்புச் செய்த பாரதி ஆச்ரமத்தாரால், தொடர்ந்து பதிப்புத் துறையில் ஈடுகொடுக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. இதனிடையில், ஏதோ மனத்தாங்கல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரணமாகத் தமையனும் தங்கையும் பிரிந்தனர். இதனால் புத்தக வியாபாரமும் நின்றுவிட்டது.

1923இல் அச்சான மூன்றாம் நூலான குயில் பாட்டு—கண்ணன் பாட்டு—பாரதி அறுபத்தாறு என்பது பிற்பாடு பாரதி பிரசுராலயத்தின் சார்பாக விற்பனை செய்யப் பட்டது. இந் நூலுக்கான முன்னுரையில்,

> "பாரதியார் இறந்தபின் அவரது பாடல்களை அச்சிட்டு வெளியிடும் கடமையை அவர் மனைவியாரே வகித்திருந்தார். அந்தக் கடமையைச் சில நண்பர்களின் விருப்பப்படி, இந்த மூன்றாவது பகுதி முதல் இப்பொழுது நான் உள்ளிட்ட ஒரு பஞ்சாயத்தார் ஏற்றுக்கொண்டோம். பாரதியார் கருத்துக் கிசையவும், எங்கள் கருத்துக் கிசையவும் அவரது பாடல்களை நாங்கள் வெளியிடுவோம்"

என்று பரலி சு. நெல்லையப்பர் குறிப்பிட்டெழுதினார். ஆனால், இந்த முன்னுரையில் நெல்லையப்பர் தெரிவித்ததுபோல, நூல்கள் வெளிவரவில்லை.

ஆக, 1923-க்குப் பின் பாரதி ஆச்ரமத்தின் பாரதி நூல் பதிப்புப் பணிகள் நடைபெறவில்லை. அதோடுகூட மூன்றாம் பகுதி முதல் பதிப்புப் பணியை ஏற்றுக் கொண்ட நெல்லையப்பர் உள்ளிட்ட குழுவினரும் பதிப்புப் பணிகளில் ஈடுபடவில்லை.

1922-1923ஆம் ஆண்டளவில் பாரதி நூல் வரிசையில் மூன்று பகுதிகளே வெளிவந்தன என்பது மனங் கொள்ளத்தக்க செய்தியாகும். அதுசமயம், திருவல்லிக்கேணியில் வாழ்ந்துவந்த செல்லம்மா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அம்மையார் இல்லத்தில் விற்பனை யாகாமல் தேங்கிக் கிடந்த நூல்களுடன், அச்சில் கொணரத் திட்ட மிட்டிருந்த பாரதியின் கையெழுத்துப் பிரதிகளும் முடங்கி இருந்தன. இந்நிலையில் செல்லம்மா அம்மையார் செய்வதறியாது திகைத்தார். அப்பொழுது திருவல்லிக்கேணியில் இயங்கிவந்த தட்சிண பாரத் ஹிந்தி பிரசார சபையின் செயலாளரான ஹரிஹரசர்மா அவர்களிடம் புத்தக விற்பனைக்கு வழி செய்யுமாறு செல்லம்மா கேட்டுக் கொண்டார். இவர் ஒருவகையில் பாரதிக்கு உறவினராவார். சர்மா அவர்களும் விற்பனை யாகாமல் தேங்கிக் கிடந்த நூல்களின் பிரதிகளை ஹிந்தி பிரசார சபையின் கட்டிடத்தின் ஓர் அறையில் இருப்பு வைத்துக் கொண்டு, நூல்களைச் சிறிது சிறிதாக விற்று, கிடைத்த தொகையைச் செல்லம்மாவின் குடும்பச் செலவுக்காகக் கொடுத்து வந்தார்.

ஆனால், இப்படி புத்தக விற்பனை மூலம் கிடைத்த தொகை குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இல்லை. தவிர, தம் இளைய மகள் சகுந்தலாவுக்குத் திருமணம் முடிக்கவும் செல்லம்மா விரும்பினார். இந்த நிலைமைகளை விளக்கிச் செல்லம்மா, பாரதியின் இளைய சகோதரரான சி. விசுவநாத ஐயருக்கு எழுதினார்.

விசுவநாத ஐயர் அப்போது மானாமதுரையில் பள்ளி ஆசிரியர் வேலை பார்த்துக் கொண்டிருந்தார். இவரும், ஹரிஹர சர்மாவும் கூடிப் பேசி யோசனை செய்து, பாரதி நூல்களை ஈடாக வைத்து, ரூ.2000/- கடன் வாங்கி, மானாமதுரையில் சகுந்தலாவின் திருமணத்தை நடத்தி வைத்தனர். இது நடந்தது 1924ஆம் ஆண்டில் ஆகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதியே மேற்கொண்ட நூல் வெளியீட்டு முயற்சி தக்க பயனின்றிப் போன நிலையில், பாரதி அன்பர்கள் அளித்த உற்சாகத்தினாலும், ஒத்துழைப்பாலும் தோற்றுவிக்கப்பட்ட செல்லம்மாளின் பாரதி ஆச்ரமப் பணிகள் வெற்றி காண இயலாத நிலையில், புத்தகங் களை ஈடாக வைத்தும், கடன் வாங்கியும் பாரதியின் இளைய மகள் திருமணம் 1924இல் செய்யப்பட்டது.

ஆனால், புத்தக விற்பனையைப் பொறுத்தமட்டில், எவ்வித முன்னேற்றமும் இல்லை. நூல்களை வாங்கு வதற்கோ, புதிதாக அச்சிட உதவுவதற்கோ யாருமே முன் வரவில்லை.

பாரதி நூல்களின் எதிர்கால நிலை என்ன? பாரதியின் ஆசைக் கனவுகள் நிறைவேறுமா? என்ற கேள்விகள் எழுந்த நிலையில் புதிய ஒளி ஒன்று தோன்றியது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி பிரசுராலயத் தோற்றமும் அதன் பதிப்புப் பணிகளும்

இருளை நீக்கி ஒளியினைக் காட்டி, இறப்பை நீக்கி அமிர்தத்தை ஊட்டித் தமிழ்மக்களை அனைத்துத் துறைகளிலும் மேம்பாடுறச் செய்த மகாகவி பாரதியின் படைப்பு இலக்கியங்கள் அச்சுவடிவில் கிடைக்காமலே போய்விடுமோ என்று பலரும் அஞ்சிய நேரத்தில், வேறு எவருமே வெளியிட முன்வராத நிலையில், துணிவையே துணையாகக் கொண்டு சற்றும் எதிர்பாராத முறையில் தற்செயலாகப் பாரதிக்கு உடன்பிறப்பாகத் தோன்றிய **விசுவநாத ஐயர்** அவர்கள் பாரதி நூல்கள் பதிப்புக் கென்றே **பாரதி பிரசுராலயம்** கண்டார்.

சகுந்தலாவின் திருமணக் கடனைத் தீர்க்கவும், செல்லம்மாளின் ஜீவனத்திற்கு நிரந்தர ஏற்பாடு செய்யவும் வேண்டிய நிர்ப்பந்த நிலையில், பல்வேறு பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் விசுவநாத ஐயர் வகுத்த திட்டமே பாரதி பிரசுராலயத் தோற்றம் ஆகும். ஆம்; சந்தர்ப்ப வசத்தால் பாரதி நூல்களை அச்சிட்டு வெளியிடும் மாபெரும் தேசீயப் பணியைப் பாரதி பிரசுராலயம் ஏற்க நேர்ந்தது.

ஹரிஹர சர்மா, சகுந்தலாவின் கணவர் **நடராஜன்** ஆகியோர் கூட்டாளிகளாகச் சேர்த்துக் கொள்ளப் பட்டனர். விசுவநாத ஐயரின் கூட்டுப் பொறுப்பில் அமைந்த பாரதி பிரசுராலயம் பாரதியின் நூல்களை வெளியிடும் மாபெரும் பணியை ஏற்றுக்கொண்டது முதலாக, பாரதியின் நூல்கள் முறையாகத் தொடர்ந்து வெளிவரலாயின.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புதிய நூல்களோடு முன்னர் அச்சிட்ட நூல்களுக்கு மறுபதிப்புகளை வெளியிட வழிவகை செய்யப்பட்டது. பாரதியாரே வெளியிட்ட பாடல் தொகுதிகளை வகைப் படுத்தி வெளியீடு செய்வதிலும் பாரதி பிரசுராலயம் தீவிரமாக முனைந்தது. இதன்னியில், அதுநாள் வரை அச்சில் வெளிவராமலும், சிதிலமான நிலையில் அச்சுப் பிரதிகளாகவும், கையெழுத்துப் பிரதிகளாகவும் இருந் தனவற்றைச் சீர்செய்து, ஒழுங்குபடுத்தி நூல் வடிவம் தரத் திட்டமிடப்பட்டது. பாரதி நடத்திய — தொடர்பு கொண்ட இதழ்கள், தனியார்களிடம் இருந்த பாரதியின் கைப்பிரதிகள் எங்கெங்குக் கிடைக்கும் என்பதைத் தேடிப் பெறவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

1924 முதல் *1949* வரை பாரதி பிரசுராலயம் தனக்கு எதிர்ப்பட்ட எத்தனையோ வகையான இடர்ப்பாடு களையும், இயற்கைச் சோதனைகளையும் தாங்கிக் கொண்டு தமிழ்ப் பதிப்பு உலகில் செயற்கரிய சாதனை களைச் செய்து காட்டியது. பாரதியின் படைப்பு இலக்கியச் செல்வங்கள் நூல் வடிவம் கொண்ட மிக நீண்ட நெடிய வரலாற்றில் பாரதி பிரசுராலயத்தின் பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க சிறப்பு வாய்ந்தது.

*1924*ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட பாரதி பிரசுராலயத்தின் பெயரால், *1923*இல் பதிப்பிக்கப்பட்ட **குயில் பாட்டு — கண்ணன் பாட்டு — பாரதி அறுபத்தாறு** என்னும் நூல் வெளிப்பட்டதாயினும், அதன் முதல் வெளியீடு *1924*இல் பதிப்பிக்கப்பட்ட **பாஞ்சாலி சபதம்** (இருபாகங்கள் கொண்ட தொகுதி) என்பதே யாகும். இந்நூலைத் தொடர்ந்து *1924-1925* கால எல்லையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகவத்கீதை முன்னுரை, பகவத் கீதை மூலமும் — உரையும், சுதேச கீத ஸங்கிரஹம் ஆகிய மூன்று நூல்கள் வெளி வந்தன. 1925-26இல் சந்திரிகையின் கதை வெளிவந்தது.

1928ஆம் ஆண்டில் தராசு, நவதந்திரக் கதைகள், வேதரிஷிகளின் கவிதை, பதஞ்சலி யோக ஸூத்ரம் ஆகிய நான்கு நூல்கள் வெளியாயின. இதனிடையில் பாரதி ஆச்ரம பதிப்புகளுக்கும், நெல்லையப்பர் பதிப்புகளுக்கும் மறு அச்சுகள் வெளிவந்தன. இதே 1928இல் பாரதியார் சரித்திரம் என்ற சிறு நூல் பிரசுரமானது.

1929ஆம் ஆண்டிலே விநாயகர் நான்மணி மாலை, தேசீய கீதங்கள் என்னும் கவிதை நூல்களுடன், பாரதியின் நூல்களைப் படித்த மக்களும் அறிந்து பயனடைய வேண்டி, விசுவநாத ஐயரே ஆங்கிலத்தில் எழுதிய 'Bharathi and his works' என்ற கருவி நூலும் வெளியிடப் பட்டது. இதே ஆண்டில் பாரதி நூல்கள்-வசனம் என்னும் தொகுதியும் வெளிவந்தது.

1930ஆம் ஆண்டில் தோத்திரப் பாடல்கள், வேதாந்தப் பாடல்கள், காட்சி, சித்தக்கடல், பாரதி நூல்கள் - காவியங்கள் ஆகிய நூல் தொகுதிகளும் வெளிவந்தன. 1931ஆம் ஆண்டிலே பாரதி சுதேச மித்திரனில் எழுதிய சிறு கதைகளையும், வேடிக்கை கதைகளையும் ஒன்றுசேர்த்து கதைக்கொத்து என்ற பெயரில் நூலாக வெளியிடப்பட்டது. சுதேச கீத திரட்டு நூலும் பதிப்பானது. 1935ஆம் ஆண்டிலே, பாரதி 1910ஆம் ஆண்டு முதல் 1920ஆம் ஆண்டு வரை தமிழ்ப் பத்திரிகைகளில், பெரும்பாலும் சுதேச மித்திரன் பத்திரிகையில் எழுதி, வெளியிட்டிருந்த கட்டுரைகளைச் சேகரித்து, அவற்றை முறையே தத்துவம், மாதர், கலைகள், சமூகம் என்ற நான்கு பகுதிகளாகப் பிரித்து வெளியிட்டது. இதன் பின்னர் இந்த நான்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பகுதிகளையும் ஒருசேரப் பதிப்பித்து பாரதி நூல்கள்— கட்டுரைகள் என்னும் தலைப்பெயரோடும் வெளியிட்டது. இதே சமயத்தில் வேறு பல புதிய நூல் முயற்சிகளிலும் பாரதி பிரசுராலயம் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது.

பாரதியின் தமிழ்ப் படைப்புகளை மட்டுமே பதிப்பித்து வெளியிட்டு வந்த நிலையில், பாரதியின் ஆங்கில எழுத்துக்களும் நூலாக்கம் பெறவேண்டும் என்பதில் பாரதி பிரசுராலயம் முனைந்தது. இதில் துடிப்பாக இருந்து செயற்பட்டவர் விசுவநாத ஐயரே ஆவார்.

1914 - 1915ஆம் ஆண்டுகளின் காலப் பகுதியில் பாரதி புதுச்சேரியில் இருந்துகொண்டே, சென்னையில் வெளியான நியூ இண்டியா (New India), காமன்வீல் (Common Weal) போன்ற ஆங்கிலப் பத்திரிகைகளுக்குக் கட்டுரைகள், கவிதைகள் எழுதி இருப்பதை அறிந்த விசுவநாத ஐயர், அப் பத்திரிகைப் பிரதிகளில் காணப் பட்ட பாரதி எழுத்துக்களைத் தொகுத்தார். அதைப் போலவே, புதுச்சேரியிலிருந்து வெளிவந்த "ஆர்யா" (Arya) என்னும் பத்திரிகையில் இடம்பெற்றிருந்த பாரதியின் எழுத்துக்களும் தவயோகி சுத்தானந்த பாரதியின் துணைகொண்டு சேகரிக்கப்பட்டன. இப்படி சேகரம் செய்யப்பட்ட ஆங்கிலக் கட்டுரைகளும், பாடல் களும் 1937ஆம் ஆண்டிலே Agni and other Poems and Translations என்றும், Essays and other Prose Fragments என்றும் பெயரிடப்பட்டு, இரு தொகுதிகளாக வெளி யிடப்பட்டன. இரு தொகுதிகளும் ஒருசேர இணைக்கப் பட்டும் வெளிவந்தது.

மற்றும், 1910இல் பாரதியால் வெளியிடப்பட்ட கனவு என்கிற 'ஸ்வசரிதை' பகுதியும், பாரதி நூல்கள் வரிசைப் பகுதிகளின் பொருள் பாகுபாட்டிற்கு உட்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படாத பாடல்களும் கொண்ட பகுதியும் **ஸ்வசரிதையும் பிற பாடல்களும்** என்ற தலைப்பில் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பாரதியின் வரலாறு, பாரதி பாட்டின் பலன் ஆகிய இருபெரும் பிரிவுகளைக் கொண்ட **பாரதி விளக்கம்** என்ற நூலும் பதிப்பிக்கப்பட்டது. இதன் ஆசிரியர் **சுத்தானந்த பாரதியார்.**

பள்ளி மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் சில பாடல்களைக் கொண்டு பதிப்பிக்கப்பட்டதே **பாரதி கீதத் திரட்டு** ஆகும்.

இவ்வாறாகப் பாரதி நூல்களும், பாரதி பற்றிய நூல்களும் வெளியிடப்பட்டு வந்த நிலையில் *1938, 1941*ஆம் ஆண்டுகளிலே பிரசுராலயத்தின் இரு கூட்டாளிகள் சொந்தக் காரணங்களைக் கருதி விலகி விடவே, *1941*ஆம் ஆண்டு முதற்கொண்டு பாரதி பிரசுராலயத்தைத் தன்னந் தனியராகவே நடத்தும் பொறுப்பை விசுவநாத ஐயரே ஏற்றுக்கொண்டார். இது சமயத்தில். **வேதரிஷிகளின் கவிதை - தொடர்ச்சிப்** பகுதி வெளிவந்தது, இதுதான் பாரதி நூல் வரிசையில் வெளிவந்த அதுநாள் வரை நூல் வடிவம் பெறாத வெளியீட்டு வரிசையில் கடைசி நூல் ஆகும்.

விசுவநாத ஐயர் பாரதி பிரசுராலயத்தின் பொறுப்பை ஏற்றுக்கொண்ட காலப்பகுதியில் பாரதியின் புதிய நூல்கள் வெளிவரவில்லையென்றாலும், மறுபதிப்பு நூல்களில் படங்கள் சேர்க்கப்பட்டு வெளி வந்தன. பாரதி பாடல் போட்டி நடத்துவோர்க்கும், அதில் பங்கு பெறுவோர்க்கும் பயன்படக்கூடிய முறையில் **பாரதிமணிமலர்** போன்ற நூல்களும் வந்தன. இரண்டாம் உலகப் போர்க் 'காலத்தில், கடுங் காகிதப் பஞ்சம் ஏற்பட்டு, அது பாரதி நூல்களின் பதிப்புப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பணிகளைப் பெரிதும் பாதித்தது. இந்தச் சூழ்நிலையிலும் பாரதி நூல்களை அச்சிட்டு வெளியிட்டு வந்தார், விசுவநாத ஐயர்.

பொது மக்களின் போதிய ஆதரவின்மை, பாரதியின் எழுத்துக்களைத் தேடிச் சேகரிப்பதில் ஏற்பட்ட தொல்லைகள், பழுதடைந்திருந்த காகிதப் பிரதிகளினின்றும், கைபட்டால் சேதமடையக்கூடிய நிலையில் காணப்பட்ட பத்திரிகை ஏடுகளினின்றும் பாரதி எழுத்துக்களைத் தொகுப்பதில் எதிர்ப்பட்ட இன்னல்கள், அன்றைய அரசு தந்த தொல்லைகள்—ஆகிய இன்ன பிறவற்றையும் பொருட்படுத்தாமல், கொண்ட கருமத்திலேயே கருத்தைச் செலுத்தி, பாரதி வழங்கிய இலக்கியச் செல்வங்களை மக்களுக்குக் கிடைக்கச் செய்த பாரதி பிரசுராலயத்தாரின் தொண்டின் பெருமையைச் சொல்லவும் முடியுமோ?

1947இல் இந்திய நாடு விடுதலை யடைந்தது. இச்சமயத்தில், பாரதியார் பாடல்கள் பொதுவுடைமை ஆக்கப்பட வேண்டும் என்ற கிளர்ச்சி தமிழகத்தில் உச்ச கட்டத்தை யடைந்தது.

1949இல் அப்போதைய சென்னை மாகாண முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்கள் பாரதி நூல்களின் பதிப்புரிமையை அரசுடைமையாக்க முன் வந்தார். அப்போது தம்மிடமிருந்த பாரதி நூல்களின் பதிப்புரிமையைக் குறிப்பிட்ட ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு அரசிடம் ஒப்படைத்தார், விசுவநாத ஐயர்.

சொல்லப்போனால், விசுவநாத ஐயர், தம் கூட்டாளிகளுடன் இணைந்து பாரதி நூல் வெளியீட்டுப் பணிகளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

துணிவோடு செயற்படாமல் இருந்திருப்பாரே யானால், பெரும்பாலான பாரதியின் எழுத்துச் செல்வங்கள் நமக்குக் கிட்டாமலே போய் இருக்கும்.

பாரதி பிரசுராலயம் அமைத்துக் கொடுத்த பாதையில், இன்னமும் பாரதி மெய்யன்பர்கள் தொடர்ந்து பணியை ஆற்றி வருகின்றனர். இவர்களினால் நூல் வடிவம் பெறாத எழுத்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டு, நூல் வடிவங்கள் பெற்றன என்பது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி யன்றோ?

———

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழக அரசின் பதிப்புப் பணிகள்

பாரதி பிரசுராலயத்துக்குப் பின்னர் - அப்போது பாரதி நூல்களின் பதிப்புரிமை கொண்டிருந்த பாரதியின் இளவல் சி.விசுவநாதன் அவர்களிடமிருந்து குறிப்பிட்ட தொகை கொடுத்துத் தமிழக அரசு 1949இல் ஏற்றுக் கொண்ட பின்னர் - பாரதி நூல்களின் பதிப்புப் பணிகளில் அரசு மிகுந்த கவனம் செலுத்தியது.

ஆம்; பாரதியின் படைப்பு இலக்கியங்கள் அரசின் பொதுவுடைமையான காரணம் பற்றி, அதுசமயம் பாரதி பிரசுராலயத்தார் கைவசமிருந்த நூல்களின் விற்பனைப் பொறுப்பை 1950 முதற்கொண்டு தமிழக அரசு ஏற்றதுடன், பாரதி நூல்களைப் பதிப்பிப்பதற் கென்றே குழு ஒன்றையும் அரசு அமைத்தது.

தமிழக அரசு அமைத்த பதிப்புக் குழுவில்,

1. திரு. ரா.பி. சேதுப்பிள்ளை
2. திரு. சி. விசுவநாத ஐயர்
3. திரு. கி. சுவாமிநாதன்
4. திரு, ரா. கிருஷ்ணமூர்த்தி (கல்கி)

ஆகியோர் இடம் பெற்றனர்.

மற்றும், கவிதைப் பதிப்புக்கு ஆலோசனைக் குழு ஒன்றையும் அரசினர் ஏற்படுத்தினர். அக் குழுவில்,

1. திரு. பரலி சு. நெல்லையப்பர்
2. திரு. கி. வா. ஜகந்நாதன்
3. திரு. மு. வரதராசன்
4. திரு. ரா.பி. சேதுப்பிள்ளை

ஆகியோர் அங்கம் வகித்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1953இல் பாரதியின் கவிதைத் தொகுதிகள் நான்கு பாகங்களாக வெளிவந்தன.

முதல் பாகம் தேசீய கீதங்கள் எனவும், இரண்டாம் பாகம் தெய்வப் பாடல்கள் எனவும், மூன்றாம் பாகம் பல்வகைப் பாடல்கள் எனவும், நான்காம் பாகம் முப்பெரும் பாடல்கள் எனவும் குறிக்கப்பட்டது. 1954இல் இந் நான்கு பாகங்களையும் உள்ளடக்கிய பதிப்பாக, ஒரே தொகுதி யாக, பாரதி நூல்கள் - கவிதைகள் என்ற பெயருடன் வெளியாகியது.

அவசியங் கருதி, 1953ஆம் வருடத்திய கவிதைத் தொகுதியில், "பாரதி நூற் பதிப்புக் குழுவினர்" எழுதிய முன்னுரையின் ஒரு பகுதியை இங்கே காணலாம் :

"திருவள்ளுவர், இளங்கோ, கம்பர் முதலிய தமிழ்ப் பெருங் கவிஞர் வரிசையில் வந்தவர் பாரதியார். தமிழ் இலக்கியத்தில் அவருடைய நூல்கள் சிறந்த ஓர் இடம் பெற்றுவிட்டன. இக் காலத்தைப் 'பாரதியுகம்' என்றே நாம் வழங்கலாம்.

நமது மொழிக்கும் நமது சமுதாயத்துக்கும் புத்துயிர் அளித்தவை பாரதியாரின் கவிதைகளே. தமிழின் மறுமலர்ச்சியைக் கவிதையிலும், வசனத்தி லும் தோற்றுவித்து, நமக்கெல்லாம் வழிகாட்டி யாக விளங்குபவர் கவி பாரதியார். நாம் அனை வரும் அவர் நூல்களைப் படித்து, நமது தனி வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் நற்பயன் பெறுவது நமது கடமையாகும். இந்த முறையிலே தான் பாரதியின் புகழைப் பாரத தேச மெங்கும் - உலகெங்குமே பரவச் செய்ய முடியும்.

பாரதியார் நூல்களின் பதிப்புரிமையைச் சென்னை அரசாங்கத்தார் 1949இல் வாங்கி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னார்கள். இதற்கு முக்கிய காரணரா யிருந்தவர் அப்பொழுது முதலமைச்சரா யிருந்த கனம் ஓ.பி. ராமசாமி ரெட்டியார் அவர்களாவர். அவர்களுக்கு நாம் அனைவரும் நன்றி செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம்.

திருவாளர்கள் பரலி சு. நெல்லையப்பர், ரா.பி. சேதுப்பிள்ளை, கி.வா. ஜகந்நாதன், டாக்டர் மு. வரதராசனார் ஆகிய நால்வரைக் கொண்ட ஆலோசனைக் குழுவினரின் உதவியைக் கொண்டு, பாடல்களை வரிசைப்படுத்தியும், சிற்சில தலைப்புக்களை மாற்றி அமைத்தும் இந்தக் கவிதைப் பதிப்பை வெளியிடத் தொடங்கி யிருக்கிறோம்...''

கவிதைத் தொகுதியை யடுத்து வசனங்கள் நான்கு பகுதிகளாக வெளியிடப்பட்டன.

1959இல் வசனங்களின் முதற் பகுதி **கதைகள்** என்றும், 1960இல் இரண்டாம் பகுதி **தத்துவம்** என்றும், 1961இல் மூன்றாம் பகுதி **சமூகம் — சமயம்** என்றும், 1963இல் நான்காம் பகுதி **அரசியல்** என்றும் பெயரிடப் பட்டு அச்சாயின.

பாரதியார் கவிதைகளின் முழுத் தொகுதியை அரசு வெளியிட்ட மறு ஆண்டிலிருந்தே தனிப்பட்ட பதிப்பாளர்கள் அக் கவிதைத் தொகுதிகளைப் பிரசுரம் செய்யத் தொடங்கிவிட்டனர். வசனப் பகுதிகளைப் பொறுத்த மட்டில், அரசினர் பதிப்புகளுக்கு முன்னரேயே தனிப்பட்ட பிரசுரகர்த்தர்கள் தனித்தனிச் சிறுசிறு நூல்களாகவும், ஒரே தொகுதியாகவும் பதிப்பித்து விட்டனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி நூல்களுக்குத் தடை

"உள்ளங் கொள்ளை கொள்ளும் பாட்டின் மூலமாகத்தான் தேசபக்தியை உள்ளபடி உணர்த்த முடியும்' என்பதைக் கண்கூடாகக் கண்ட பாரதி, ஆரம்ப காலத்தில் கூட்டங்களில் பேசும்போது இடையிடையே தம் பாக்களையும் பாடி மகிழ்வித்து, தேசபக்த உணர்ச்சியை வளர்த்தே வந்தார்.

வங்கப் பிரிவினை, 'சுயராஜ்ஜியம் நமது பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவோம்' என்ற முழக்கம், நாட்டில் ஆட்சியாளர்களால் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்கு முறைகள் இவை யெல்லாம் பாரதியைத் தேசிய ஆசு கவியாக மாற்றுகின்றன.

பாரதி சென்னையில் இருந்த காலப் பகுதிகளில் **ஸ்வதேச கீதங்கள், புதிய கட்சியின் கொள்கைகள், எங்கள் காங்கிரஸ் யாத்திரை** ஆகிய நூல் வரிசைகள் வெளிவந்தன. ஆனால், இவை தடை செய்யப்படவில்லை.

பாரதி 1908 மார்ச் 9, மே 10 ஆகிய இரு தேதிகளில் வீராவேச மிக்க, கனல் தெறிக்கும் சொற்பொழிவுகளைச் சென்னையில் ஆற்றியதன் பொருட்டு, அவர்மீது முன்னெச்சரிக்கைத் தடுப்பு நடவடிக்கை எடுத்து, வழக்குத் தொடரப் போலீஸ் தரப்பில் முற்பட்டபோது, அரசு அனுமதி யளிக்கவில்லை.

அரசியல் சூழ்நிலை காரணமாக, 1908 செப்டம்பர் மாதம் புதுச்சேரி சென்றபின், பாரதியின் அரசியல் தீவிரமடைந்தது. புதுச்சேரி சென்ற பாரதி பத்திரிகைப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பணிகளுக் கிடையேயும், 1909இல் **ஜன்ம பூமி** கவிதை நூலையும், 1910இல் **கனவு** என்ற பாடல் நூலையும், **ஆறிலொரு பங்கு** என்ற சிறுகதை நூலையும் வெளியிட்டார்.

1910இல் புதுச்சேரியில் வெளியான நூல்கள் என்ற போதிலும், 1911 ஜூன் 17 இல் திருநெல்வேலி கலெக்டர் ஆஷ் கொலை செய்யப்பட்டதன் எதிரொலியாக, அக் கொலைச் சதி வழக்கில் தொடர்புடையவர்கள் என்று சந்தேகப்பட்டவர்களின் வீடுகளில் 'கனவு', 'ஆறிலொரு பங்கு' என்னும் இரு நூல்கள் இருந்ததைக் காரணங் காட்டி, அவ்விரு நூல்களுக்கும் 1911 அக்டோபர் 11 ஆம் தேதி யன்று தடை விதிக்கப் படுகின்றது.

1911ஆம் ஆண்டிலே தடையான தம் இரு நூல்களுக்கான தடை நீக்கம் கோரி, பாரதி மட்டுமே அன்று தன்னந் தனியராகப் போராடினார். தம் நூல்கள் தன்மை குறித்து அரசுக்கு எழுதினார்; பத்திரிகைகளுக்கும் எழுதித் தம் நிலைமையைப் புலப்படுத்தினார்.

> 'யாருக்கும் எவ்விதத்திலும் ஒரு சிறிதும் தீங்கிழைக்காத என்னுடைய இரு நூல்களான கனவு (கவிதை), ஆறிலொரு பங்கு (சிறுகதை) என்பனவற்றைத் தடை செய்து இழைத்துள்ள அநீதி'

குறித்துப் பாரதி குமுறினார்.

> 'காதற் பாட்டுக்கள், சமூக சீர்திருத்தக் கதைகள் போன்றன அரசினரால் சந்தேகிப்போர் பேனாவிலிருந்து வெளிவந்தன என்ற காரணத்தால்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தடை செய்வது என்பது அரசாங்கத்தாரின் எல்லை மீறிய செயல்'

என்று கண்டனம் தெரிவித்தார்.

பாரதியின் குமுறலும், கண்டனமும் எவ்வித பரபரப்பையும் அந்த நாளில் உண்டாக்கவில்லை. அரசினரும் தடைசெய்த நூல்களுக்கான ஆணையை ரத்துச் செய்யவும் இல்லை.

1921ஆம் ஆண்டுக்குப் பின் பாரதி மரணங்கடந்த இரண்டாண்டுகளுக்குப் பின்னர் மாவட்ட அளவில் பள்ளிப் பாட நூல்களாகப் பாரதியின் பாடல் தொகுதிகள் வைக்கக்கூடாது என்று தடுக்கப்பட்டது.

பாரதியின் பெருமையையும், மகிமையையும் பாமர மக்கள் மத்தியில் மட்டுமல்லாது, பள்ளியில் பயிலும் மாணவர்கள் உட்பட அனைவரும் பாரதியின் தேசீய கீதங்களைப் படித்து இன்புற வேண்டும் என்று விரும்பினர், பாரதி அன்பர்கள். அதன்பொருட்டு 1923இல் முதற் கட்டமாகத் திருநெல்வேலி தாலுகா போர்டு பள்ளிக் கூடங்களில் 'சுதேச கீதங்கள்' பாடல் நூலைப் பாடநூல் பகுதியாக அங்கீகாரம் செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்பொழுது அரசின் கல்வித்துறை இச் செயலைச் சட்ட விரோதம் என்று கூறித் தடுத்து விட்டது.

பாரதி பிரசுராலயத்தார் வெளியிட்ட **சுதேச கீதங்கள்** மறுபதிப்பு நூலில் குறித்துள்ள '**ஓர் விண்ணப்பம்**' என்னும் முன்னுரைப் பகுதி மேற்குறித்த செய்தியைத் தெரிவிக்கின்றது.

அம் முன்னுரைப் பகுதி பின் வருமாறு உள்ளது:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓர் விண்ணப்பம்

தமிழ் மக்களே!

தங்களில் சிலர் புகழற்குரிய விசேஷ உதவி புரிந்தும், பெரும்பாலர் இன்னும் தாய்பாஷை முன்னேற்றத்தைக் கவனிக்காமலிருப்பதால், தமிழ் பாஷை இம்மாதிரி நிலையில் இருக்கிறது.

திருநெல்வேலி தாலுகா போர்டு கமிட்டியார் இப் புஸ்தகத்தின் மூலமாய் மாணவர்களுக்குத் தேச பக்தியூட்டும் பொருட்டு, தங்கள் ஆதரவிலுள்ள பள்ளிகளில் இதை வைக்க முயன்றும் ஸர்க்கார், கல்வி இலாகா இதைச் சட்ட விரோதமாக எடுத்து விடச் செய்த அவமானத்தைத் தமிழ் நாட்டா ராகிய நாம் எவ்வாறு நீக்கப் போகிறோ மென்பது முக்கியமான கேள்வி. எமக்கு ஒரு வழியே தோன்று கிறது. பள்ளிகளில் திரும்ப வைக்க முயற்சி செய்ய வேண்டியதும் நம் கடமையாகும். பள்ளிக் கூடங் களில் வைக்காமற் போனாலும், தாய் தந்தையர் தங்கள் குழந்தைகளுக்கு வீடுகளிலாவது அவசியம் கற்றுக் கொடுக்க வேண்டுவது தங்கள் கடமையாக உணர்ந்து அவ்வாறு செய்ய வேண்டும்.

இதிலுள்ள முக்கியமான பாடல்களை மாணவர் களுக்குத் தனியாகக் குறைந்த விலை வைத்து வெளியிட வேண்டியது அவசியமானாலும் அவ்வாறு செய்யத் தயாராக இருக்கிறோம்.

பாரதி பிரசுராலயத்தார் தாங்கள் தெரிவித்தபடி 'சுதேச கீதங்கள்' நூலில் இடம்பெற்றிருந்த பாடல்களில் ஒருசிலவற்றைத் தெரிவு செய்து, 'சுதேச கீத சங்கிரஹம்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனத் தலைப்பிட்டு சிறு நூலொன்றை 1925இல் வெளியிட்டனர்.

திருநெல்வேலி தாலுகா போர்டு குழுவினர் பாரதியின் பாடல் நூலைத் தங்கள் ஆதரவிலுள்ள பள்ளிகளில் பாட நூலாக வைக்க முன் வந்தும், அதைச் சர்க்கார் தடுத்து நிறுத்திய செயலைச் சத்திய மூர்த்தி கண்டித்தார்.

1912இல் பாரதி எப்படி தனித்துப் போராடினாரோ, அவரைப் போலவே சத்திய மூர்த்தியும் 1923இல் தனித்தே நின்று சட்டமன்றத்தில் குரல் கொடுக்க வேண்டியவரானார்.

மூன்றாம் முறையாக, 1928இல் பாரதியின் பாடல்களிலே ராஜத் துவேஷமான கருத்துக்கள் இருப்பதாகக் கூறிப் பிரிட்டிஷ் அரசு பாரதி பாடல் நூல்களின் இரு தொகுதிகள் தடை செய்யப்பட்டு, நூல் பிரதிகள் பறிமுதல் செய்யப்பட்டபோது, நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

1928 ஆகஸ்டு 7ஆம் தேதியன்று பாரதி பாடல்களில் ராஜ நிந்தனையான கருத்துக்கள் இருப்பதாகக் கூறி, அப்போது பிரிட்டிஷ் இந்தியாவின் ஒரு மாநிலமாக இருந்த பர்மா அரசு பாரதி பாடல் நூல்களுக்குத் தடை விதித்தது. இதன் தொடர்பாக, பாரதியின் நினைவு நாளான 1928 செப்டம்பர் 11இல் சென்னை மாகாணத்திலும் தடை செய்யப்பட்டதற்கான உத்திரவைக் கெஸட்டில் சென்னை அரசும் வெளியிட்டது. இதன் விளைவாக, சென்னை மாகாண மாஜிஸ்திரேட்டும் பாரதி பாடல் நூல் தொகுதிகளைப் பறிமுதல் செய்ய ஆணை பிறப்பித்தார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னை நகரப் போலீசார், அப்போது திருவல்லிக்கேணியில் இயங்கிவந்த ஹிந்தி பிரசார சபை, பாரதி பிரசுராலயம், விற்பனை நிலையங்கள் ஆகிய இடங்களில் புகுந்து 'சுதேச கீதங்கள்' முதலிரு தொகுதிகளின் நூல் பிரதிகளைக் கைப்பற்றினர்.

பிரதிகள் கைப்பற்றப்பட்ட செய்தியைக் **குமரன்** 27-9-1928ஆம் தேதிய இதழில் **'பாரதி பாடல் பறிமுதல்'** என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. அச் செய்தி வருமாறு :

> "செப்டம்பர் 20-ஆம் தேதி, சென்னை போலீசார், ஹிந்திப் பிரசார அச்சுக் கூடத்திற்குச் சென்று காலஞ்சென்ற சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களடங்கிய புத்தகங்களைக் கைப்பற்றினர். முதலிரண்டு பாகங்களையும் பறிமுதல் செய்யும்படி அரசாங்கத்தார் உத்தர விட்டிருக்கின்றனராம். சுமார் 2000 பிரதிகள் பறிமுதல் செய்யப்பட்டன.
>
> பிரதம பிரசிடென்சி மாஜிஸ்திரேட்டின் உத்திரவுப்படி எஸ்பிளநேடிலுள்ள தண்டபாணி பிள்ளை கம்பெனி சோதனை செய்யப்பட்டு, பாரதியாரின் பாடல் புத்தகங்கள் பன்னிரண்டு போலீசாரால் கைப்பற்றப்பட்டதாகத் தெரிகிறது.

பர்மா சர்க்கார் உத்தரவு

பர்மா சர்க்கார் அடியிற்கண்ட உத்தரவை வெளியிட்டிருக்கிறார்கள் என சென்னை சர்க்கார் கெஸட்டில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது:

1898-ம் வருடத்திய இ. பி. கோ. 99 (ஏ) பிரிவுப்படி சென்னை திருவல்லிக்கேணி பாரதி ஆசிரமத்தார் பிரசுரம் செய்திருக்கும் திரு. சி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சுப்பிரமணிய பாரதியாரின் தேசிய கீதங்கள் முதலிரண்டு பாகங்களிலும் ராஜத் துரோகமான விஷயங்கள் அடங்கி யிருப்பதால், அவைகளைப் பிரசுரஞ் செய்வது இ.பி.கோ. 124 (ஏ) பிரிவுப்படி குற்றமாகு மாதலால், அப் புத்தகங்கள் எங்கிருந் தாலும் அவைகளைப் பறிமுதல் செய்ய வேண்டு மென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.''

இச் செய்தியை வெளியிட்டுக் 'குமரன்' இதழின் ஆசிரியராம் திரு. சொ. முருகப்பா அவர்கள் 'பாரதியார் பாடலுக்கு ஆபத்தா?' என்ற கேள்விக் கணை தொடுத்து, உணர்ச்சி மிக்க தலையங்கம் ஒன்றை எழுதியிருந் தார். அது வருமாறு :

நமது தெய்வத் தமிழகத்தில் சென்ற பல நூற்றாண்டுகளாக உயர்ந்த கவிகள் தோன்றினார் களில்லை. ஞானசம்பந்தப் பெருந்தகையாரின் அருட்கவிகளும், கம்பன் போன்ற கவிச் சக்ரவர்த்தி களின் இனிய நறும் பாடல்களும் தோன்றிய இந் நாட்டில் பல நூற்றாண்டுகளாக அத்தகைய கவி களைக் காணும் பேற்றினைத் தமிழகமக்கள் பெற்றா ரில்லை. தமிழ் இலக்கிய உலகம் புத்திலக்கியங் களையும், புத்தப் புதுக் கருத்துக்களையும் காணாது வளர்ச்சியற்று, செழுமை குன்றி வரண்டு கிடந்தது. மொழி வளர்ச்சியற்றஞான்று மக்கள் நலனழிந்து அடிமை வாழ்க்கை வாழ்ந்து ஏங்கி நிற்பரென்பது சரித்திரம் போதிக்கும் உண்மையாகும். இந்நிலை யடைந்து துன்புற்று நிற்கும் தமிழகத்தில் சென்ற பல நூற்றாண்டுகட் கிடையில் தோன்றிய மக்களுள் மூவர் பெயரை இங்கு குறிப்பிடுகின்றோம். ஒன்று இராமலிங்க அடிகள்; மற்றொருவர் பி. சுந்தரம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிள்ளை; மூன்றாவதாக நமது காலத்தில் — நமது கண்முன்னே வாழ்ந்தருளிய பெரியாரான சி. சுப்பிரமணிய பாரதியாராவர். இம் முப்பெரும் புலவர்களைத் தமிழகம் தன் முடியின்கண் தோன்றும் மும்மணிகளாகக் கொள்ளல் சாலும்.

இராமலிங்க அடிகளைத் தமிழுலகம் அறிந்தது. ஆனால், அவர் காலத்திலேயே அவருக்குப் பல எதிரிகள் தோன்றினர். தமிழகத்தில் எவனொருவன் தலைதூக்குகின்றானோ அவனை அடித்து வீழ்த்துவதற்கு வேண்டிய எல்லா வசதியும் பெற்று இற்றைத் தமிழ்நாடு விளங்குகிறது. மூட வழக்கங் கட்கும், அறிவு கலவாத வீண் சடங்குகட்கும், சில குழுவினரின் வயிற்றுப் பிழைப்புக்குமாக ஏனை மக்களின் வாழ்வு நிகழ வேண்டிய திருப்பதைக் காண்கிறோம். எவனொருவன் அறிவு வளர்ச்சி பெற்று மேலோங்குகிறானோ அவனை அடித்து வீழ்த்தப் பல ஸ்தாபனங்களும் மக்களின் அறியாமை யும் உரம் பெற்றிருக்கின்றன. இத்தனை துயரங் களையும் மீறி ஒரு இராமலிங்கருடைய ஒளி வீசியது. சுந்தரம் பிள்ளை அவர்களின் மனோன் மணீயமானது தமிழிலக்கிய உலகில் புத்துணர்வை நல்கி நிற்கின்றது. நமது பாரதியின் பாடல்கள், இறந்துபட்ட தமிழக மக்கட்குத் தேவாமுதென உயிர்ப்பு நல்கின வென்பதை யாரே மறுக்கவல்லார்?

பாரதியின் பாடல்கள் தமிழகத்தில் யாண்டும் பரவி நிற்கின்றன. அப் பாடல்களிற் செறிந்து கிடக்கும் இனிய தமிழ் மொழிகளின் பெற்றியை யாரால் அளவிட்டுரைக்க முடியும்? தமிழ் உள்ளத் தோடு, ஆண்மையும் வீரமும் பிளறி நிற்குமாறு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெய்யப்பட்டிருக்கும் சொற்களின் பெற்றியைத் தமிழுணர்ந்தவரே அறிவர். தமிழ் மொழிக்கு இருக்கும் ஆற்றலை ஒருவாறு காண முயல்வார் பாரதியின் நூலைத் துணையாகக் கொள்ளல் வேண்டும். சிறுசிறு அடிகளில், சிலசில சொற்களில் புகட்டும் உயரிய பொருள்களையும், புதுப்புதுக் கருத்துக்களையும் எடுத்துக்காட்டும் திறமை பாரதியார் பாடலில் பரக்கக் காணலாம். இவ்வரிய நூலின்பால் அரசாங்கத்தாரின் பிறழ்ந்த பார்வை திரும்பி யிருக்கிறதென அறிகிறோம்.

சென்ற பல ஆண்டுகளாகப் பாரதியார் பாடல்களை அரசாங்கச் சார்பு பற்றிய பள்ளிக் கூடங்களில் பாடப் புத்தகமாக வைத்தல் வேண்டுமென்னும் முயற்சி ஆங்காங்கே நடைபெற்றிருக்கிறது. பல பள்ளிக்கூடங்களிலும் பயிற்றப்பட்டு வருவது கண்கூடு. அறிவுடைய — உணர்ச்சி யுடைய ஒவ்வொரு தமிழ் மகனும் இந்நூலின் ஒரு பகுதியையாவது படியாதிரான் என்பது திண்ணம். இவ்வளவு பெற்றியையும், தமிழக மாந்தர் யாவரின் விருப்பத்தையும் பெற்று நிற்கும் இப் புத்தகங்களின்மீது அரசாங்கத்தார் அம்பு தொடுத்திருக்கின்றனர்.

பர்மா அரசாங்கத்தார் சென்ற வாரத்தில், பாரதியாரின் பாடல்களின் முதல் இரண்டு பகுதிகளில் இராஜத் துவேஷமான விஷயங்கள் அடங்கியிருப்பதால் அவைகளைப் பிரசுரம் செய்வது குற்றமாகு மென்றும், அப் புத்தகங்கள் எங்கிருந்தாலும் அவற்றைப் பறிமுதல் செய்ய வேண்டும் என்றும் ஒரு அறிக்கை வெளியிட்டிருப்பதாக ஒரு செய்தி கிடைத்தது. இந்த அறிக்கை சென்னை அரசாங்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கெஸட்டிலும் வெளியிடப்பட்டிருக்கிறது. இதற்கிடையில் இப் புத்தகங்களைப் பறிமுதல் செய்யும்படி சென்னை சீப் பிரசிடென்சி மாஜிஸ்ரேட்டால் பிறப்பிக்கப்பட்ட வாரண்டின் மேல் புத்தகங்கள் வாரிக் கொண்டு போகப்பட்ட தாக ஒரு செய்தி கிடைத்திருக்கிறது. இப் புத்தகங் களை நாம் நன்றாகப் படித்திருக்கின்றோம். இதில் தேசபக்தி நிறைந்திருக்கிறதே யன்றி ராஜத் துவேஷம் இருக்கிறதென்ற உணர்ச்சி நமக்குண்டான தில்லை. சென்ற பல ஆண்டுகளாகப் படிக்கப்பட்டு வரும் இப் புத்தகங்களால் பொது ஜனங்கட்குள் உண்டான ராஜத் துவேஷந்தான் என்னவென்பதும் நமக்கு விளங்கவில்லை. "பாரதி பாடல்களைப் படித் தால் ராஜத் துரோகி யாவான்" என்று கூறுவது நமக்கு வியப்பைத் தருகின்றது. தமிழக மக்களெல் லாரும் அன்பு பாராட்டி வரும் ஒரு சிறந்த நூலின் மீது அரசாங்கத்தார் அம்பு தொடுக்க முயல்வது முன்புத்தியோடு செய்யும் காரிய மென்று நமக்குப் படவில்லை. அரசாங்கப் பள்ளிக் கூடங்களில் இப் புத்தகங்களைப் பாடம் வைத்து அபிவிருத்தி செய்யாமற் போனாலும் அதன்மீது அம்பு தொடுக்காமலாவது இருக்கக் கூடாதா?

தமிழகத்தில் தோன்றிய பாரதி பாடலுக்கு இதுகாறும் எவரும் மறுப்புரை எழுத முன் வந்தா ரல்லர். மூச்சு விடுவதற்கெல்லாம் சண்டை யிடும் மதவாதிகளும், வயிறு வளர்க்கும் போலி மக்களும், வைதீகப் பிடுங்கல்களும், சாத்திர மூட்டைகளும் பாரதியார் பாடல்மீது போர் தொடுக்கவில்லை. ஆனால், இப்போது அரசாங்கத் தார் அப் பாடல்களுக்குக் குறுக்கே நிற்பது கேட்டுப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பலர் வருத்த முறுவா ரென்பதிலைய மில்லை. பாரதியார் பாடலுக்கு இந் நிகழ்ச்சியால் பெரு மதிப்பினைக் கொடுக்கவே அரசாங்கத்தார் முன் வந்திருக்கிறார்க ளென்று கூறுவார் கூற்றுக்குப் பொருளில்லாமற் போய்விடாது.

தமிழக மக்களின் சார்பில் இப்படியொரு உள்ளக் குமுறலை வெளியிட்டார் திரு. சொ. முருகப்பா அவர்கள். பத்திரிகை உலகில் முதல் முதலாகக் கண்டனக் குரலை எழுப்பியவரும் இவரே யாவார்.

சொல்லப்போனால், 1922இல் பாரதி ஆச்ரமந்தான் பாரதியின் சுதேச கீதங்களின் முதலிரு தொகுதிகளை வெளியிட்டது. இவ்விரு தொகுதிகள் வெளியீட்டுக்குப் பின்னர், பாரதி ஆச்ரமம் செயற்படவில்லை. இதன் பின்னர் 1924இல் பாரதி பிரசுராலயம் தோன்றிய தல்லவா? பாரதி பிரசுராலயம் 1925, 1927 ஆகிய காலப் பகுதிகளில் முன்னர் பதிப்பிக்கப்பெற்ற சுதேச கீதங்களை மறு அச்சுப் போட்டது. முன்னர் பாரதி ஆச்ரமம் வெளியிட்டு, விற்பனையாகாமல் இருந்த பிரதிகளுடன் புதிய மறு அச்சு நூல்களையும் பாரதி பிரசுராலயம் விற்பனையாளர்க்கு அனுப்பி வந்தது. இந்த நிலையில் தான் பறிமுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது; நூல் பிரதிகள் போலீசாரால் பறிமுதலும் செய்யப்பட்டது. அதனால், போலீசாரின் பறிமுதல் நடவடிக்கையை எதிர்த்துப் பாரதி பிரசுராலயத்தார் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கொன்றைப் பதிவு செய்தனர்.

இதனிடையில், 1928 அக்டோபர் 8 ஆம் நாளன்று எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் சென்னைச் சட்ட மன்றத்தில் பாரதி பாடல்கள் பறிமுதல் பற்றிய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

செய்தியைக் குறிப்பிட்டு, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றைக் கொணர்ந்தார்.

பாரதியின் பாடல்கள் ராஜத் துரோகக் குற்ற முடையனவா - அற்றவையா என்பது நீதிமன்றத் தீர்வில் இருப்பதால், அதன் நடவடிக்கைகளுக்கு ஊறு நேராமல் போலீசாரின் செய்கைபற்றி மட்டுமே விவாதிக்கப் படுமானால் தாம் ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி யளிப்பதாகச் சபையின் தலைவர் கூறினார். சத்தியமூர்த்தியும் சபைத் தலைவர் தெரிவித்த கருத்தை ஏற்றுக்கொண்டார். அதனால் அடுத்தநாள் அதாவது அக்டோபர் 9ஆம் நாள் சத்தியமூர்த்தியின் ஒத்தி வைப்புத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் பட்டது.

அன்றைய தினம் சட்ட மன்றத்தில் உரையாற்றிய சத்தியமூர்த்தியாகட்டும் — துளசிராம், ராம்நாத் கோயங்கா, டி. கெ. சி., டி. எம். நாராயணசாமி பிள்ளை, ஆதிநாராயண செட்டியார், ஹரிசர்வோத்தம ராவ், கிருஷ்ணசாமி நாயக்கர் போன்ற பிற உறுப் பினர்களாகட்டும் — அத்துணைப் பேரும் மிக உணர்ச்சி யுடன் சொற்பெருக்காற்றினர்.

தீர்மானம் இறுதியில் வாக்கெடுப்புக்கு விடப்பட்ட போது, தீர்மானத்துக்கு ஆதரவாக 76 பேரும், தீர்மானத்தை எதிர்த்து 12 பேரும் வாக்களித்தனர். பிரதம மந்திரி சுப்பராயன், மந்திரி முத்தையா முதலியார் உட்பட 15 பேரும் நடுநிலை வகித்தனர். இதனால் ஒத்திவைப்புப் பிரேரணை வெற்றி பெற்றது.

சட்டமன்ற நிகழ்ச்சிகள் பாரதியார் பாடல்களின் தன்மை, உணர்ச்சி வேகம் — இவற்றை நன்கு பிரதி பலித்தன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சட்டமன்ற நிகழ்ச்சியை 'ஹிந்து' (The Hindu) நாளிதழ் 1928 அக்டோபர் 28ஆம் தேதிய பத்திரிகையில் வெளியிட்டதுடன் 'The Council and Bharati's Songs" என்றொரு தலையங்கமும் எழுதி வெளியிட்டது. மற்றும் குடகு, சுதேச மித்திரன் ஆகிய இதழ்களும் பாரதி பாடல்பற்றித் தம் கருத்துரைகளை வெளியிட்டிருந்தன. அவற்றின் செய்தி விவரங்களை இனிக் காண்போம்.

THE COUNCIL AND BHARATHI'S SONGS

The Practically unanimous lcensure which the Legislative Council yesterday passed upon the action and conduct of the Madras Government in respect of the search for and seizure of BHARATHI'S songs will, we hope, be understood in its full significance by the public and the Government. The few that voted against it virtually consisted only of those that had, owing to their position, to stand by the Government. It would be a mistake also, we think, for the public to take the success achieved on the motion as the mere expression of the profound feelings of patriotism that Bharathi's poems have stirred in the Tamil Nadu and of the resentment of the people of the land against what has been done to that sacred and patriotic literature. Nor is it to be taken merely as an unequivocal condemnation of the Madras Government for its utter incompetence and failure in discharging its elementary duty of safeguarding and protecting its own policy against the imposition of repressive mandates and notifications by the most junior Provincial Government in India. we confess we have read the report of the Law Member's speech with lgrave disappointment, if not

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

humiliation. His plea that the republication of the Burmah Government's notification proscribing the book was a matter of routine done by somebody somewhere in the Government Secretariat in pursuance of a confidential order of the Government of India, is too puerile to be accepted and would hardly have been permitted to be made in any responsible legislative body. Whichever officer or clerk below the Law Member may have done it, we cannot conceive that anyone acting in the name of the Government could plead or could be allowed to plead ignorance of the undisputed fact that SUBRA MANIA BHARATHI'S songs constitute a most well-known collection of national literature actually and popularly in vogue throughout this Province for over twenty years. Nor could the Government or the officials concerned be excused for their obvious lack of knowledge of the public act of the Government publicly transacted in another department by which this book of songs was actually permitted to be introduced into educational institutions in this Province a fact that has appeared in the newspapers and has become a matter of general knowledge for every one conversant with the affairs of this Presidency. It is inconceivable, therefore, that the official or officials concerned should not have been aware or been made aware of this fact so as to require them to take the orders of their higher officials including the Law Member on a matter of this importance before they chose to place under ban these classic poems and deprive the people of a valuable treasure and BHARATHI'S family of their means of subsistence. We therefore fail to see how even the plea of a soul-less bureaucratic machine in operation can avail the Government in this matter. We are told that the order

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

of the Government of India as to re-publication of forfeiture notifications is confidential, but we are not told to what extent these orders are in the nature of mandatory statutory duties imposed on the Government. We refuse to believe that it was not open to the Madras Government to point out to the Government of India, as regards whatever order may be in existence, that their carrying out of that order would be convicting themselves of a glaring inconsistency and would involve injustice towards the people of this Province. It seems to us also impossible that the Government of India would have imposed on the Local Government of one province the duty to accept without question the decision of another Local Government as to the seditious character of a publication even though they may have themselves previously come to the specific conclusion, as seems to be the case in Madras, that that literature is not only not seditious but is also so good as to be prescribed for educational institutions. We are sure that in such a case it must be open for Local Governments to act so far as they are concerned, on their own judgement and decision. And to trot out a so-called confidential order of the Government of India seems to us but an idle excuse.

If the Government of Madras acted in a wholly irresponsible and unjust manner in re-publishing the notification of the Burmah Government, we think the initiative taken by the Police on the said notification is also similarly open to serious objection. It was entirely discretionary with the police to move the Magistrate for a search-warrant and the decision to move the Magistrate has apparently been taken by police officers who,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

as in the case of the Secretariat, must be deemed cognisant of the fact that BHARATHI'S songs have been accepted as national literature in this Province for over twenty years and that the police themselves had never thought of taking anything like the step now taken by the police or the Government of Burmah. We think therefore that the Government in the Police Department is in the next instance equally to blame for the action taken

But what surprises us most is the position now assumed by the Government after all the injustice they had committed or permitted to be committed After having driven the owners of these publications to seek the only forlorn remedy that was left open to them, that is, to go to the Special Tribunal and obtain an adjudication as to the seditious character or otherwise of the songs, they now want to take refuge under the consequence of their own mistakes and wrongs and to await the decision of the Court. We cannot conceive of a more unfair proceeding. The Government who had allowed BHARATHI's poems to be introduced into the educational institutions of the Province, should have frankly offered to the Council as well as to the public to retrace administratively all the improper steps that had been taken on discovering that mistakes had been committed in routine against their own view which ought to be rectified. It is not pretended that the publishers would then insist on obtaining the verdict of the Special Tribunal on their publications, which till now had been entirely free from any .ban and would not withdraw their application the moment the Government expressed their decision not to endorse and actively carry out the proscription which the Burmah Government had imposed

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

on them. It is in substance the Government that are the prosecutors and the publishers the accused. It is perfectly open to them to withdraw their charge, and we consider it is the only right and just course for them to offer to take steps to remove the ban so far as it lies in their power. It requires no great argument to show that the view and the policy of the Local Government in respect of a literary work essentially belonging to their province is bound to be accepted not only by the Burmah Government but by the Government of India also and the notification of the former can be easily withdrawn. Instead of offering to make amends, which they were bound under the circumstances to do, the Government with an irresponsibility and indifference that is remarkable, proposed leisurely to await the decision of the Special Tribunal. No wonder that the censure of the House on the position thus taken up was so overwhelming. Is it too late for them yet to repair on their own initiative the wrong that has been done?

(The HINDU—10-10-1928.)

'ஹிந்து' தனது கருத்துக்களைத் தெளிவாக வெளியிட்டு, அரசின் செயலைக் கண்டித்தது.

அடுத்து, குடகு, சுதேச மித்திரன் ஆகிய பத்திரிகைகளில் வெளியான கருத்துக்களின் சுருக்கங்களை "Native Paper Reports" தெரிவிக்கின்றன. அவற்றையும் காண்போம் :

The Confiscation or otherwise of these songs lay within the power of the Hon'ble Law Member. But it is strange to bear that the two hundred copies of the

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

book containing these songs were confiscated by the authorities without his knowledge. No further illustration is necessary to prove that even the transferred departments are being administered at the sweet will and pleasure of the European bureaucracy.

(KODAGU—Dec. 1928)

THE SWADESAMITRAN congratulates the Government of Burma for good sense having dawned upon them at least after the lapse of such a long time and observes:-

While the Government have taken no action whatever in the Tamil land wherein Bharati's songs are mostly in vogue and while they have agreed to prescribe Bharati's songs as text books in schools, it is strange that the Government of Burma saw sedition in them. If before taking action, they had consulted the Government of Madras they might not have committed this mistake. Though the Government of Burma issued in an unlawful manner the order confiscating the books, if the Government of Madras had, before taking any action, communicated with them, there would have been no room for discussion and agitation. From the explanation that was offered on behalf of the Government of Madras that, under the existing law they had no other alternative than to carry out the orders of another Provincial Government in respect of a particular book, it is evident that the law is defective. We hope that this defect will be rectified soon.

(THE SWADESAMITRAN—17-1-1929.)

(Native Papers Reports 1929 Jan-Feb.)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பத்திரிகை உலகமும் சட்டத்திலுள்ள குறைகளைச் சுட்டிக்காட்டி, தன் கண்டனக் குரலை உரக்க எழுப்பி, அரசினரின் பறிமுதல் உத்திரவை விலக்கிக் கொள்ளும்படி யோசனையும் தெரிவித்தது.

சட்ட மன்ற நிகழ்ச்சிகளும், பத்திரிகை உலகக் கண்டனங்களும் பாரதியின் பாடல்கள் பரவலாக அனைவருடைய பேராதரவைப் பெற்றிருந்தன என்பதற்குத் தக்க சான்றுகளாகும்.

அரசாட்சியை எதிர்க்கும் துணிவு பெற்றவர்கள் அதிகமாக இடம்பெறாத சென்னை சட்ட மன்றத் திலேயே, பறிமுதல் உத்திரவைக் கண்டிக்கும் ஒத்திவைப்புத் தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதை மிகப் பெரும்பான்மையான ஆதரவுடன் நிறை வேற்றியதோடு தம் கடமை முற்றுப்பெற்று விட்டதாகத் தேசியப் பற்றுக்கொண்ட உறுப்பினர்கள் நினைக்க வில்லை; தொடர்ந்தும் பாரதி பாடல் பறிமுதல் தொடர்பாக அரசைக் கேள்விக் கணை தொடுத்து அரசின் கவனத்தை ஈர்த்தவண்ண மிருந்தனர்.

இச் சமயத்தில் பாரதியின் நண்பரும், சிறந்த பத்திரிகையாளருமான திரு.எஸ்.ஜி. ராமாநுஜலு நாயுடு அவர்கள் தம் "அமிர்த குணபோதினி" மாத இதழில் 1928 நவம்பர் 15ஆம் நாள் முதற்கொண்டு பாரதியின் வரலாற்றுச் சுருக்கத்தை எழுத முனைந்தார் என்பது இங்குக் கருதத்தக்கது.

27-11-1928 அன்று சென்னைச் சட்ட மன்றத்தில் பாரதியின் பாடல் பறிமுதல் தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விகளும், அவற்றிற்கு அளித்த பதில்களும் நவசக்தி 5-12-1928ஆம் நாளைய இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அவ் விவரம் பின்வருமாறு:—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஸ்ரீமான் நாராயண ராஜு : பாரதி பாடல்களைப் பறிமுதல் செய்வதற்கு முன்னால், இம் மாகாண அரசாங்கத்துக்கும் பர்மா அரசாங்கத்துக்கும் ஏதேனும் கடிதப் போக்குவரவு நடந்ததா? அங்ஙனமாயின், அக் கடிதங்களைச் சபையின் பார்வைக்குத் தயை செய்து வைக்கக்கூடுமா?

கனம் கிருஷ்ண நாயர் : கிடையாது.

ஸ்ரீ நாராயண ராஜு : (அ) சென்ற அக்டோபர் மாதம் 10ந்தேதி இச் சபையில் பாரதி பாடல் பறிமுதல் சம்பந்தமாக நிறைவேறிய அவசரப் பிரரேபணையைக் குறித்து அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறதா?

(ஆ) அவ் விஷயமாக இச் சபையின் அபிப்பிராயமும், நடவடிக்கையின் விவரமும் பர்மா அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டனவா?

(இ) மேற்படி தேதிக்குப் பின்னர் சென்னை அரசாங்கத்துக்கும் பர்மா அரசாங்கத்துக்கும் கடிதப் போக்குவரவு நடந்ததுண்டா? அப்படியானால் அதன் விவரமென்ன?

பதில் : (அ) மறு உத்தரவு வரையில் இனிமேல் பறிமுதல் செய்ய வேண்டாமென்று போலீசாருக்கு அரசாங்கம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(ஆ) இல்லை.

(இ) திருவல்லிக்கேணி ஹிந்திப் பிரசார அச்சுக்கூட நிர்வாகி ஹைகோர்ட்டில் கொடுத்துள்ள மனுச் சம்பந்தமாக வழக்கு நடத்துவதைப் பற்றி பர்மா அரசாங்கத்தின் ஆலோசனை கேட்கப்பட்டது. மனுவை எதிர்க்க வேண்டுமென்று அவர்கள் பதில் எழுதி யிருக்கிறார்கள்.

ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் : மறு உத்தரவு வரையில் இனிமேல் புத்தகங்களைப் பறிமுதல் செய்யவேண்டாமென்று போலீசாருக்குக் கட்டளை யிட்டிருக்கிறபடியால், ஏற்கெனவே பறிமுதல் செய்த புத்தகங்களை அரசாங்கத்தார் திருப்பிக் கொடுத்து விடுவார்களா?

கனம் கிருஷ்ண நாயர் : முடியாது; முடியாது.

ஸ்ரீ நாராயண ராஜு : இச்சபையின் அபிப்பிராயம் பர்மா அரசாங்கத்தாருக்குத் தெரிவிக்கப் பட்டதா?

கனம் கிருஷ்ண நாயர் : இல்லை.

ஸ்ரீ நாராயண ராஜு : ஏன் இல்லை?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கனம் கிருஷ்ண நாயர் : அரசாங்கம் அதை அவசியமென்று கருத வில்லை.

ஸ்ரீ நாராயண ராஜு : இவ் வரசாங்கத்தார் பர்மா அரசாங்கத்தின் யோசனையை ஏன் கேட்டார்கள்?

கனம் கிருஷ்ண நாயர் : ஏனெனில், அவர்கள் பிறப்பித்த அறிக்கையின் ம்தே சென்னைப் போலீசார் பறிமுதல் செய்தனர்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி : ஹைகோர்ட்டில் மனுவை எதிர்க்க அரசாங்கம் தீர்மானித்துவிட்டதா?

பதில் : ஆம்

கேள்வி : அரசாங்கத்தார் தங்கள் சொந்த வக்கீல்களை ஆலோசனை கேட்டார்களா?

பதில் : இல்லை.

கேள்வி : வழக்கில் தோல்வி யடைந்தால், பர்மா அரசாங்கம் செலவுத் தொகை கொடுக்குமா?

பதில் : இதைப் பற்றிப் பின்னால் ஆலோசிக்க வேண்டும்.

கேள்வி : இவ்வரசாங்கத்துக்கு இவ் விஷயமாகச் சுதந்திரமான அபிப்பிராயம் ஏதேனுமுண்டா?

பதில் : ஒன்றுமே கிடையாது. அவர்கள் இவ் விஷயமாக ஆலோசிக்கவே யில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சென்னைச் சட்ட மன்றத்தில் கேட்கப்பட்ட வினாக்களையும், அவற்றிற்குத் தரப்பட்ட விடைகளையும் பார்த்தோம். இதனிடையில், பாரதி பிரசுராலயத்தார் ஹைக் கோர்ட்டில் தாக்கல் செய்திருந்த மனுவை வாபஸ் வாங்கிக் கொண்டனர்.

> "காலஞ்சென்ற ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியாரின் தேசீய கீதப் புத்தகங்களின் முதல் இரண்டு பாகங்களையும் அரசாங்கத்தார் பறிமுதல் செய்ததைப் பற்றி, திருவல்லிக்கேணி பாரதி பிரசுராலய காரியஸ்தரால் சென்னை ஹைக்கோர்ட்டில் கொடுக்கப்பட்டிருந்த கிரிமினல் ரிவிஷன் மனுவின் பேரில் டிசம்பர் 4-ஆம் தேதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுதார் வக்கீல் திரு கே. பாஷ்யமய்யங்கார் ஆரம்பத்தில் மனுவை வாபஸ் வாங்கிக் கொள்வதாகத் தெரிவித்துக் கொண்டார். செலவுத் தொகை அனுமதிக்க வேண்டுமென கிரௌன் பிராசிகியூடர் கேட்டுக் கொண்டார். முடிவில் செலவின்றி வழக்குத் தள்ளப்பட்டது"

என்ற செய்தியானது "குமரன்" 1928 டிசம்பர் 6ஆம் தேதிய இதழில் "உள்ளூர் செய்தி" என்ற தலைப்பில் காணப்படுகிறது.

பாரதி பாடல் நூல்கள் பறிமுதல் சம்பந்தமாக ஹைக்கோர்ட்டில் கொடுக்கப்பட்டிருந்த மனு வாபஸ் பெற்றதால், இனி என்னவிதமாக நடவடிக்கை மேற்கொள்வதென்று அரசு ஆலோசனை செய்வதாயிற்று.

சென்னைச் சட்ட மன்றத்தில் அரசுத் தரப்பில் தெரிவித்த பதில்களால் திருப்தியடையாத **திரு. வி. க.** அவர்களின் நவ சக்தி,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"சென்னை அரசாங்கத்தார் பர்மா அரசாங்கத்தின் கையாட்களாக ஏன் நடந்து கொள்ள வேண்டும்? 'சென்னை அரசாங்கத்துக்குஇவ்விஷயத்தில் சுதந்திரமான அபிப்பிராயமே கிடையாது' என்னும் பதில் பொறுப்பைக் கழித்துக்கொள்ளப் பயன்பட்டாலும், பெருமை தருவதாகாது. போனது போக, இப்போது ஹைக்கோர்ட்டில் போடப்பட்டிருந்த ஆட்சேப மனுவைப் பாரதி பிரசுராலயத்தார் வாபீஸ் வாங்கிக்கொண்டுவிட்டபடியால், இனிமேல் சாக்குச் சொல்வதற்கு இடமில்லை. பறிமுதல் செய்யப்பட்ட புத்தகங்களைத் திருப்பிக்கொடுக்க உடனே உத்திரவிடப்படுமென எதிர்பார்க்கிறோம்"

என்று "இடியேறு" பகுதியில் *5. 12. 1928*இல் குறிப்பிட்டுள்ளது கவனத்துக்குரியது.

பாரதி நூல்கள் பறிமுதல், காந்தியண்ணல், ராஜாஜி போன்றோரின் உள்ளத்தையும் பெரிதும், வருத்தியது எனலாம். ராஜாஜி அவர்கள், காந்தி அண்ணலின் ஆங்கிலப் பத்திரிகையான "யங் இந்தியா" (Young India) *13. 12. 1928*ஆம் தேதியிட்ட இதழில் **'வந்தேமாதரம் என்போம்'**, **'ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே'**, **'பகைவனுக் கருள்வாய்'** ஆகிய மூன்று பாரதியின் பாடல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

பாரதியின் பாடல்களை மொழிபெயர்த்து வெளியிடச் செய்த ராஜாஜி அவர்கள் பாரதியைப் பற்றியும் பறிமுதல் நடவடிக்கை பற்றியும் குறிப்பொன்றையும் எழுதியிருந்தார். அதன் விவரம் வருமாறு:

Subrahmanya Bharati was the poetical expression in the South, of the Indian National awakening of this

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

century. He was poet laureate of the Tamil Country crowned by the unanimous approbation and love of the people. His songs are sung by young and old throughout the land, in homes and at public gatherings. Their hold on the popular mind is great and lasting and transcends the divisions of creed and caste. Bharati was a Brahman but his poetical genius was permeated by an unflinching spirit of equality. Freedom and equality of the high and the low castes, of men and women, were the hunger of his soul and the inspiration of all that he sang. Breaking boldly away from old-time stiffness of form and thought, Bharati adapted the spoken tongue and folk-music to the aspirations of India renascent.

Bharati was born in 1882. From 1904 to 1908 he edited Tamil journals in Madras. In 1908 he found refuge from repression at Pondicherry where he remained till 1918 suffering great hardship and privations. He then returned to Madras in shattered health, and died soon after in 1921, at the early age of thirtynine. His collected songs have been published by his widow in two volumes. They have been distributed all over the Tamil country and have attained the rank of permanent literature. But the Burma Local Government has under the powers given by repressive legislation recently declared the books to be seditious, and by force of that executive declaration, rendered the books liable to be seized by the police anywhere in India. Accordingly, the Madras police recently seized and carried away 2000 copies from the publisher's office in Madras. There was a storm of indignation in the country. It was notorious that the Minister for Education and all his colleagues felt that the action was improper, but depending as they

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

do for their existence on the continual support of the official element, were too weak to interfere. The Madras Legislative Council passed a resolution condemning the seizure in unqualified terms. During the debate, the Government offered no defence beyond pleading that they acted under instructions from the Burma authorities and not on their own initiative. Nothing, however, has since been done by the Madras Government to undo the wrong. Below are some of the songs rendered by me in to English.

ராஜாஜி அவர்களின் கருத்தைக் கண்டோம். அதே இதழில் காந்தி அண்ணல் அவர்களும் தம்முடைய கண்டனத்தைப் புலப்படுத்தி யிருந்தார். காந்தி அண்ணலின் கண்டனம் 19.12.1928 நவ சக்தி இதழில் தமிழில் மொழிபெயர்த்துத் தரப்பட்டுள்ளது. அதன் விவரமாவது:

"தமிழ்க் கவியான காலஞ்சென்ற பாரதியாரின் பாட்டுக்களில் சிலவற்றின் மொழிபெயர்ப்பு மற்றோரிடத்தில் வெளியாகி யிருக்கிறது. இக்கவியின் பாடல்கள் சமீபத்தில்சென்னை அரசாங்கத்தாரால், பர்மா அரசாங்கத்தின் யோசனையின்படி அல்லது கட்டளையின்படி பறிமுதல் செய்யப்பட்டன. பர்மா அரசாங்கமோ இப்பாடல்களை நீதி மன்றத்தின் தீர்ப்பு எதுவும் ஆதாரமின்றி வெறும் நிர்வாக உத்திரவு மூலமாகவே அடக்கிவிடத் தீர்மானித்தது. அந் நிர்வாக உத்திரவின்படி மேற்படி பாடல்கள் அடங்கிய புத்தகங்கள் இந்தியாவில் எந்தப் பகுதியிலிருந்தாலும் பறிமுதல் செய்யப்படலாமாம். இந்தத் தமிழ்க் கவியின் பாடல்கள் சென்ற 30 வருஷங்களாகத் தமிழ் நாட்டில் வழங்கி வந்தவை யென்றும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவற்றைப் பள்ளிக்கூடங்களில் பாடப் புத்தகங்களாக வைப்பது குறித்துச் சென்னைக் கல்வி இலாகா யோசித்து வந்ததென்றும் தெரிய வருகின்றன. இது கல்வி மந்திரியின் அதிகாரத்துக்குட்பட்ட விஷயமென்பதில் சந்தேக மில்லை. ஆனால், சட்ட சபைகளைப் போலவே இந்த மந்திரிப் பதவிகளும் வெறுங் கேலிக்கூத்தே என்பது நாளுக்கு நாள் நன்றாய் விளங்கி வருகிறது. சர்வ வல்லமை வாய்ந்த ஐ. சி. எஸ். வர்க்கத்தின் விருப்பத்தைப் பதிவு செய்யும் குமாஸ்தாக்களாகவே மந்திரிமார்கள் இருந்து வருகிறார்கள். ஆதலின், பாவம், இப் புத்தகம் பறிமுதல் செய்யப்பட்டபோது அவருக்கு விஷயம் தெரியாமலே இருந்திருக்கவும் கூடும்...புத்தகங்கள் திருப்பிக் கொடுக்கப்படுவதன் மூலம் இந்த அநீதிக்குப் பரிகாரம் செய்யப்படுமென்று நம்புவோமாக. ஆனால், சென்னை அரசாங்கம் என்ன பரிகாரம் செய்தாலும், இந்த அநீதியைப் பற்றிய உணர்ச்சி இருந்து கொண்டு தானிருக்கும். சென்னை அரசாங்கம், பர்மா அரசாங்கத்தின் கட்டளைக்கு அடிமைத்தனமாகக் கீழ்ப் படிந்து நடந்ததினால் ஜனங்களின் மனதில் ஏற்பட்டிருக்கும் அதிருப்தி என்றும் மாறாது.''

இவ்வாறு, காந்தியண்ணல் கடுமையான வார்த்தைகளால் பாரதி பாடல் நூல்கள் பறிமுதல் செய்கையைக் கண்டித்தார்.

அந்தக் காலத்தில் நாடக மேடையில் புகழ்பெற்று விளங்கிய தேசிய கலைஞர் திரு. எஸ். வி. விசுவநாத தாஸ் என்பவரும், பாரதி பாடல் நூல்கள் பறிமுதல் நடவடிக்கையைக் கண்டித்துப் பாடினார். அப் பாடல் ஒன்று பின்வருமாறு:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாரதி சுப்ரமண்யத் தேசீய கீதங்களைப்
பறிமுதல் செய்யவந்த பரிதாபமே

வீரச் சுடரடிக்கும் தீபமது கொடுக்கும்
வேந்தர் கவியிலென்ன விபரீதமே

பசுமரத்தாணி போல் நம்மவர் இதயத்தில்
பதிந்ததே எந்நாளும்

பாரதி பாடலை நசுக்கவே அதிகாரி
பகற்கனவு கண்டாற் போலும்.

இப்படி, சட்ட மன்றம், பத்திரிகை, நாடகமேடை ஆகிய பல முனைகளிலிருந்தும் அரசுக்குக் கடும் எதிர்ப்பு ஏற்பட்டது.

இந்த மாதிரியான சூழ்நிலையில், பறிமுதல் உத்திரவை ரத்துச் செய்யப் பர்மா அரசுக்குச் சென்னை மாகாண அரசு கடிதம் எழுதியதன்பேரில், 1929ஆம் வருடம் ஜனவரி 5ஆம் தேதியன்று மேற்படி உத்திரவு ரத்துச் செய்யப்பட்டது.

ராஜாஜி அவர்கள் தொடர்ந்து தம்முடைய மொழி பெயர்ப்புகளை 'யங் இந்தியா'வில் வெளியிட்டு வந்தார். தடையுத்தரவை அரசாங்கம் நீக்கிய பின்னரும் மொழி பெயர்ப்புப் பாடல்கள் மேற்படி இதழில் வெளிவந்தன. அதற்குக் காரணம் என்னவெனில், காந்தியடிகள் பாரதியின் பாடல்களில் மிகுந்த ஈடுபாடு கொண்டமை யாகும்.

இதோ, காந்தியடிகள் வெளியிட்ட குறிப்பு:

"I continue to publish the balance of C. R's translations for their intrisic merit inspite of the fact that the ban has now been lifted though late in the day."

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தியடிகள் பெரிதும் விரும்பியே, ராஜாஜியின் மொழிபெயர்ப்புகளை 1929 ஜனவரி 3, 17, 24 ஆகிய தேதிகள் கொண்ட இதழ்களில் பிரசுரித்தார். 18 பாடல்களுக்கான மொழிபெயர்ப்புகள் 'யங் இந்தியா' வில் பிரசுரமாயின என்பது குறிப்பிடத்தக்க து.

அரசு எடுத்த முடிவை யடுத்து, சென்னையில் பறிமுதல் செய்யப்பட்டிருந்த பாரதி நூல் பிரதிகளைப் பாரதி பிரசுராலயத்தாரிடம் திருப்பித் தரப்பட ஆணை பிறந்தது.

அரசாங்கத்தின் நடவடிக்கையைக் கண்டித்த "நவசக்தி", "குமரன்" ஆகிய பத்திரிகைகள் தடையுத்திரவு நீக்கப்பட்ட செயலையும் மிக மகிழ்ந்து பாராட்டி எழுதின.

23. 1. 1929 நவ சக்தி இதழில் "இடியேறு" என்னும் பகுதியில் பின்வரும் செய்தி தரப்பெற்றுள்ளது:

"தமிழ் நாட்டின் அருஞ் செல்வமாகிய பாரதியாரின் பாடல்களுக்குப் பர்மா அரசாங்கம் விதித்திருந்த தடை நீக்கப்பட்டதை யறிந்து மகிழ்வெய்து கிறோம். பறிமுதல் செய்யப்பட்ட புத்தகங்களும் பாரதி பிரசுராலயத்தாரிடம் திரும்பக் கொடுக்கப் பட்டு விட்டன. இவ் விஷயத்தில் சென்னை அரசாங் கம் மிகவும் பிடிவாத மாயிருந்து, பர்மா அரசாங் கத்தை வழிக்குக் கொணர்ந்ததென்று அறிகிறோம். பாரதி பாடல் பறிமுதலினால் தமிழ் மந்திரிகளுக்கு ஏற்பட்டிருந்த ஒரு பெருங் கறை இப்போது நீங்கி விட்ட தென்பதை நாம் குறிப்பிடல் வேண்டும். ஆனால், பர்மா அதிகார வர்க்கத்தின் அறிவீனமான உத்திரவு ஒரு வகையில் நன்மையே செய்தது என்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறலாம். பொதுவாகத் தமிழர்களுக்கும், சிறப்பாக ஆங்கில மோகத்திலாழ்ந்த தமிழர்களுக்கும் பாரதி பாடல்களின் சிறப்பை உணர்த்த அஃது ஓரளவு காரணமா யிருந்திருக்கிறது. இது குறித்து நாம் மகிழ்வெய்துகிறோம்''.

'நவ சக்தி'யின் கருத்தையே **குமரன்** இதழும் கொண்டிருந்தது. 24.1. 1929ஆம் தேதிய இதழில் **'எண்டிசைக் காட்சி'** என்ற தலைப்பில்,

''பாடிய வாய் தேனூறும் பாரதியார் பாடல்களைப் பர்மா அரசாங்கத்தார் பறிமுதல் செய்ய முனைந்து நின்றனர். ஒரு மாகாண அரசாங்கம் போடும் உத்தரவை மற்றொரு மாகாண அரசாங்கம் ஏற்றுக் கையாள வேண்டுமென்னும் மாமூலைத் தாங்கி, சென்னை அரசாங்கமும் அதனைக் கைப்பிடித்தது. பின்னர், பாரதியார் பாடலைப் பற்றி நிகழ்ந்த நிகழ்ச்சிகள் நேயர்கள் அறிந்தனவே. இதைப்பற்றி சென்னை அரசாங்கத்தாரின் முயற்சியினால் பாரதி பாடலின் பறிமுதல் உத்தரவைப் பர்மா அரசாங்கத்தார் நீக்கிவிட்டனர். இச் செய்தி தமிழ் மக்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி தரத்தக்கதாகும். பாரதியார் பாடல் பறிமுதல் செய்யப்பட்டதென்ற சொல் தமிழக மக்களின் செவிக்கு நாராசமாக நின்றதென்பதை ஒவ்வொருவரும் அறிந்தனர். சட்ட சபையும் குலுங்கிற்று. உறங்கிக் கிடக்கும் தமிழகத்தை விழிப்புறச் செய்யும் பாரதி பாடலுக்கு எழுந்த தடை யுத்தரவு இன்னும் நீடித்திருக்குமாயின் பெருங் கிளர்ச்சிக்கு இடமாகி யிருத்தல் கூடும்.இவ்வளவோடு பாரதியார் பாடலின் பெருஞ் சக்தி வெற்றிக்கொடி நாட்டி மேலெழுந்து நிற்ப

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தற்கு, தமிழ் மக்களனைவரும் மகிழ்ச்சிக் கடலாடுவரென்று கூற வேண்டியதில்லை''

என்று எழுதப்பட்டிருக்கின்றது.

பாரதி பாடலின் சக்தியை உணர்த்த நிகழ்ந்த தடையுத்திரவு நீக்கப்பட்டவுடன் பிரதிகளைப் பெற்றுக் கொண்ட பாரதி பிரசுராலயத்தார் 'இந்த நூல் அரசால் பறிமுதல் செய்யப்பட்டு, திருப்பிக் கொடுக்கப்பட்டது' என்று முத்திரையிட்டு விற்பனை செய்தனர்.

பாரதி நூல்கள் கைப்பற்றப்பட்டு, பறிமுதல் செய்வ தற்கு முன்னைய காலப் பகுதியில், பாரதி தேசிய கவியாக மட்டுமே காட்சியளித்தார். ஆயின், சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்குப் பின்னும், பத்திரிகைகளின் கண்டனங் களுக்குப் பின்னரும், அறிஞர்களின் நெஞ்சக் குமுறலுக்குப் பின்னரும் பாரதி மக்கள் கவியாகவே காட்சியளிக்கத் தொடங்கிவிட்டார். ஆம்;பார் புகழும் பாரதியாகத் திகழவும் பாரதி பாடல் மீது எழுந்த தடை துணை செய்தது.

காலச் சக்கரம் சுழன்றது. 1937ஆம் வருடம் பாரதி நூல்களை நூலகத் துறை பயன்படுத்திக் கொள்ளலாம் என அரசு அங்கீகாரம் அளித்தது.

எந்தப் பிரிட்டிஷ் அரசு 1911, 1923, 1928 ஆகிய ஆண்டுகளிலே விடுதலை வாழ்வு கோரும் பாரதியின் எழுத்துக்களைக் கண்டு அஞ்சியதோ — எந்தப் பிரிட்டிஷ் ஆட்சி பாரதியின் நூல்களைப் பறிமுதல் செய்யச் சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஸட்டில் ஆணை பிறப்பித்ததோ — அதே பிரிட்டிஷ் அரசு, அதே சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை கெஸட்டில்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

"Approved By the Text Book Committee, Madras for Library Use"

என்ற ஒப்புதல் செய்தியைப் பிரசுரிக்கவே செய்தது.

இறந்தும் இறவாக் கவிதைகளை யாத்த கவியரசர் பாரதி பெருமானுக்குக் கிடைத்த வெற்றி இதுவாகும்.

" கவிஞன் பிறந்தபின் கவிதை பிறக்கும்
கவிஞன் மறையினும் கவிதை உலாவும்
மறைந்தும் மறையா மாபெரும் புகழை
அடையும் கவிஞர் ஆயிரத் தொருவரே
ஆயிரத் தொன்றும் அதிக மென்பதால்
கோடிக் கொருவராய்த் தோன்றும் கவிஞர்
குழாத் திடையே பாரதி குறையா மணமலர்"

இது கவிஞர் கண்ணதாசனின் பாமாலை யாகும். உண்மையில், மறைந்தும் மறையா மாபெரும் புகழை அடைந்த கவியரசர் பாரதிக்குச் சூட்டிய கவின்மிகு பாமாலையில் குறித்துள்ளபடி, பாரதிக் கவிஞனின் கவிதைகள் அவர் மறையினும் உலா வருகின்றனவே!

———

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூற்றாண்டு கண்ட கவியரசர்

கடந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றி இந்த நூற்றாண்டில் நம் நாட்டின் புகழுக்கும், பெருமைக்கும் சான்றாகத் திகழ்ந்த பெருமக்களுள் பாரதியும் ஒருவ ராவார்.

பாட்டுக்கொரு புலவனாகத் தோன்றிய பாரதி, மக்கள் போற்றும் மகாகவியாகவும் விளங்கினார்.

தம் பாட்டுத் திறத்தாலும், பத்திரிகைப் பணிகளின் சிறப்பாலும், பாரதி 'பார் புகழும் பாரதி'யாகக் காட்சியளித்தார். 'நாட்டுக் குழைத்தல்' என்ற பெருந் தொழிலிலே ஈடுபட்டு, தேச நேசத்தையும் உயிர்த் தெழுப்பி உலவச் செய்த பெருமையில் பாரதிக்கு மகத்தான பங்குண்டு.

தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்ய வேண்டுமென்று ஆசைக் கனவு கண்ட பாரதியின் நூற்றாண்டு 1981ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 11ஆம் தேதியன்று மலர்ந்தது.

மக்கள் கவி என்றும், புதுயுகக் கவி என்றும் போற்றிப் பெருமைப்படுத்தப் பெற்ற பாரதியின் நூற்றாண்டு விழாவை 1981ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி முதல் 1982 டிசம்பர் 11ஆம் தேதி முடிய ஓராண்டுக் காலம் சிறப்பான முறையில் கொண்டாடியது தமிழக அரசு.

விழாக் கொண்டாடியதோடு மட்டுமே அமையாமல் பாரதியின் நினைவைப் போற்றும் வகையில் பல்வேறு திட்டங்களையும் செயற்படுத்தியது தமிழக அரசு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாடு தழுவிய முறையில் வருடம் முந்நூற்று அறுபத்தைந்து நாட்களும் விழா பட்டி தொட்டிகள் எங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

தேசிய மட்டத்தில் இந்திய மாநிலத் தலைநகர்களில் மட்டுமின்றி சர்வ தேச ரீதியில் உலகின் பல பகுதி களிலும் பாரதி விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடை பெற்றன.

பாரதி நூற்றாண்டு விழாக் கொண்டாட்ட சமயத்தில் பற்பலரும் தத்தமக்கு இயன்ற அளவு பணி புரிந்தனர். அந்த வகையில், நூலாசிரியர்களும், பதிப்பாசிரியர்களும், பதிப்பாளர்களும் ஒருசேர இணைந்து, பாரதியின் பெருமைகளையும், மகிமைகளை யும் பேசும் நூல்களைப் பதிப்பித்துச் சிறப்புத் தேடினர்.

பாரதியின் நூற்றாண்டுத் திருவிழா 1981 டிசம்பர் மாதம் தான் கொண்டாடப்பெறும் என்றிருந்தும், 1981ஆம் ஆண்டின் ஆரம்ப முதற்கொண்டே பாரதி நூல்கள் வெளிவர ஆரம்பமாகிவிட்டன 'பாரதி நூற்றாண்டு வெளியீடுகள்' என்றே குறிப்பிட்டு பதிப்பகத்தார்கள் தங்கள் தங்கள் நூல்களை வெளியிட்டு வந்தனர் என்பது கவனிக்கத் தக்கது.

நூற்றாண்டு வெளியீடுகள் மட்டுமே யன்றி, அதன் பின்னரும் வெளிவந்த நூல்களையும் இங்கே தருவதே என் நோக்கம்.

1981இல் தொடங்கி 1985 டிசம்பர் முடிய உள்ள ஐந்தாண்டுக் கால எல்லைக்குள் வெளிவந்த நூல் களுக்கான விவரம் இந் நூலில் தரப்பெற்றுள்ளது.

ஒரு வார்த்தை: பதிப்பாளர்களின் பட்டியலில் கண்ட நூல் விவரங்களைக் கொண்டோ—ஆசிரியர்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளியிடலாம் என்று கருதித் தெரிவித்த விவரங்களைக் கொண்டோ - பட்டியல் தயாரிப்பு முறையை நான் மேற்கொள்ளவில்லை.

இங்கே முறைபடுத்திக் கொடுக்கப்பட்டுள்ள அத்துணை நூல்களும் என்னால் கண்ணாரக் கண்டவை யாகும்.

இந்த நூல் விவரத் தொகுதி, தொகுக்கப்பெற்ற முறை பற்றியும் ஒருசில வார்த்தைகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

இத் தொகுதியில் பாரதியின் படைப்புகளும் அவரது படைப்புகளை யொட்டிப் பல்வேறு பதிப்பாளர்கள் பதிப்பித்த நூல்களும், மற்றும் வாழ்க்கை வரலாற்று நூல்களும், ஒப்பீட்டு — மதிப்பீட்டு நூல்களும், பல்வகை நூல்களும் இடம் பெற்றுள்ளன. இவ்வாறான நூல்களுக்கான விவரக் குறிப்புகள் பின்வரும் முறையில் பகுக்கப்பெற்றுள்ளன.

ஆசிரியரின் / தொகுப்பாளரின் பெயரை யடுத்து (1) நூலின் பெயர் (2) நூலின் பதிப்பாண்டு (3) பதிப்பாளர்/ வெளியீட்டாளர் பெயர் (4) நூலின் உள்ளடக்கத்தைக் குறிக்கும் பக்கங்கள் (5) நூலின் விலை (6) நூல் பொருள் சுருக்கம்.

நூலக இயலின் அடிப்படைகளைக் கருத்தில் கொண்டு அவ்வியலின் தத்துவத்தை யொட்டியே மேற்குறித்த விவரங்கள் தரப்பெற்றுள்ளன.

குறிப்பிட்ட ஒரு பதிப்பாளர் முன்னரே ஒரு நூலைப் பிரசுரம் செய்து, அந் நூல் விற்பனையான நிலையில் பலமுறை மறு அச்சான நூல் விவரம் இத் தொகுதியில் இடம் பெறவில்லை. ஆனால்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குறிப்பிட்ட அதே நூலை வேறு பதிப்பாளர் பிரசுரம் செய்திருப்பாரே யானால், அந்த நூல் கணக்கில் கொள்ளப்பட்டுள்ளது என்பதை யறியவும்.

பாரதி நூல்கள் பற்றிய விவரங்கள் மட்டுமே இத் தொகுதியில் காணப்பெறுகின்றன.

இந் நூலுக்கான தொடர்பு கருதியும், ஆய்வாளர் களின் வசதி கருதியும், பொருத்தம் நோக்கியும் 1980 ஜனவரி முதல் 1980 டிசம்பர் வரையிலான காலப் பகுதியில் வெளிப்பட்ட நூல்களுக்கான விவரப் பட்டியல் முதலில் தரப்பெற்றுள்ளது.

இதனைத் தொடர்ந்து 1981-1985ஆம் ஆண்டு களுக்கான விவரப் பட்டியல் இடம் பெற்றுள்ளது.

அடுத்தடுத்த பகுதிகளில், நூல்கள் வெளியீட்டு அட்டவணை, பதிப்பாளர் வெளியீட்டு வரிசைப் பட்டியல், வெளியீடுகளின் வரிசைப் பட்டியல், ஆசிரியர் அகர வரிசையும் நூல்களின் விவரமும், பதிப்பாளர் வெளியிட்ட நூல்கள் விவரம் ஆகியன தரப்பெற்றுள்ளன.

ஆய்வுப் பணியை எளிதாக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் எழுந்த அட்டவணைப் பகுதிகள் பெரும் பயன் விளைவிக்கும் என்பது திண்ணம்.

பாரதியின் ஆய்வுப் பணியை மேற்கொள்வோர்க்கு விவர அட்டவணை பெரிதும் வழிகாட்டும் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வெளியீட்டு வரிசைப் பட்டியல்

○

[1908 ஜனவரி — 1980 டிசம்பர்]

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகாகவி பாரதி நூல்கள்—வெளியீட்டு வரிசை (1908 ஜனவரி - 1980 டிசம்பர்)

எண்	நூலின் பெயர்	நூலாசிரியர்/ பதிப்பாசிரியர்	பதிப்பாளர்	பதிப் பாண்டு
1.	ஸ்வதேச கீதங்கள் (முதற் பாகம்)*	பாரதியார்	பாரதியார், சென்னை	1908
2.	புதிய கட்சியின் கொள்கைகள்	பாரதியார்	பாரதியார், சென்னை	1908
3.	எங்கள் காங்கிரஸ் யாத்திரை	பாரதியார்	பாரதியார், சென்னை	1908
4.	ஜன்ம பூமி (ஸ்வதேச கீதங்கள்- இரண்டாம் பாகம்)	பாரதியார்	பாரதியார், புதுச்சேரி	1909
5.	ஞானரதம்	பாரதியார்	பாரதியார், புதுச்சேரி	1910
6.	கனவு	பாரதியார்	பாரதியார், புதுச்சேரி	1910
7.	ஆறிலொரு பங்கு	பாரதியார்	பாரதியார், புதுச்சேரி	1910
